REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜூன் 3 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN 92
வரு. 92 இல. 131 | Monday 03, June, 2024 | 20பக்கங்கள் | 50/-

## அனர்த்த நிவாரணம் வழங்க ஜனாதிபதி அவசர பணிப்பு

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்பட உள்ளது. இதற்குத் தேவையான நிதியை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார். நாடு முழுவதும் நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் மற்றும் மக்கள் எதிர்கொண்டுள்ள அவதிகளை கருத்திற்கொண்ட ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார். நிதியமைச்சின் செயலாளருக்கு இப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

# அரசியலமைப்புக்கு இணங்க பௌத்த மதத்துக்கு முன்னுரிமை

### பாதுகாக்கும் பொறுப்பு நிறைவேற்று, சட்டவாக்கம், நீதித்துறைகளுக்கும் உள்ளது

### 'குருதேவ சுவ அரண' பிக்குகள் நிலையத்தை திறந்து வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு



அரசியலமைப்புக்கு அமைவாக பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஹோமாகம, கிரிவத்துடுவவில் நிர்மாணிக்கப்பட்ட "குருதேவ சுவ அரண" பிக்குகளுக்கான நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி:

நாட்டின் அரசியலமைப்பு பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. எனவே, அரசியலமைப்பை மதித்து பௌத்த மதத்திற்கு

03

# இயற்கை அனர்த்தங்கள்: ஒரே நாளில் பத்துப் பேர் பரிதாப பலி

### இயல்பு நிலை ஸ்தம்பிதம்; 5 பேர் காணாமற் போயுள்ளனர்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற கால நிலையால் கடந்த 24 மணித்தியாலங்களில் பத்துப் பேர் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக மேலும் ஐவர், காணாமற் போயுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நேற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடும் மழை, காற்று வெள்ளப்பெருக்கு காணப்பட்ட நிலையில், இந்நிலை மேலும்

06



## 03 மிளகு இறக்குமதி செய்யுமளவுக்கு உற்பத்தி வீழ்ச்சியடையவில்லை

03

# சீரற்ற காலநிலையால் தடைப்பட்டுள்ள போக்குவரத்துக்களை சீராக்க நடவடிக்கை

### மண்சரிவு, மரங்கள் முறிவு, பாலங்களின் சேதங்களை சரி செய்ய பணிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மோசமான காலநிலையால், போக்குவரத்துக்களில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் மற்றும் பாதிப்புக்களை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என, அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். நிலவும் சீரற்ற காலநிலையால் நாட்டின் ஏனைய



மாகாணங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் போன்று, மேல் மாகாணத்திலும் ஏற்பட்டுள்ளன .

பாரியளவு மண் சரிவு, மரங்கள் முறிந்து வீழ்தல், பாலங்கள் சிதைவடைதல், நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில்வே பாதைகள் சேதமடைதல் உள்ளிட்ட சம்பவங்கள் இங்கும் இடம்பெற்றுள்ளன. இதனால், இவற்றை

06

# சல்மான்கானை கொலை செய்ய திட்டமிட்ட கும்பல் கைது

### கனடாவிலிருந்து நிதி வழங்கப்பட்டதாக தகவல்



பொலிவூட் நடிகர் சல்மான்கானைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்த தீவிர குற்றக் கும்பலைச் சேர்ந்த நான்கு இந்தியரை, மும்பை பொலிஸார் கைது செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மகாராஷ்டிர மாநிலம், மும்பையை அடுத்ததாக உருவாகி வரும் 'நவி மும்பை' என்ற புதிய நகரில், பொலிஸார் இவர்களை கைது செய்தனர். சல்மான் கானை கொலை செய்த பின்னர், கன்னியாகுமரி வழியாக தமிழகத்துக்குச் சென்று அங்கிருந்து படகு

06

# நிலவும் சீரற்ற காலநிலை: பாடசாலைகளுக்கு விடுமுறை




**லோரன்ஸ் செல்வநாயகம்**


நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற காலநிலையால், சகல பாடசாலைகளுக்கும் இன்று (03) விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

கடும் காற்று மற்றும் தொடர்ச்சியான மழை என்பவற்றைக் கருத்திற் கொண்ட கல்வி அமைச்சு இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டதாக, கல்வி இராஜாங்க

06

# டெங்கு நுளம்பு உருவாகும் 3121 இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

### 981 நபர்கள், நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சோதனை நடவடிக்கைகளில், டெங்கு நுளம்பு உருவாகும் 3121 இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த (26) ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினம் ஜுன் முதலாம் திகதி நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் இது தொடர்பான

06

# திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில் விற்க முடிவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இரண்டு இலட்சத்து 35 ஆயிரம் மில்லியன் திறைசேரி உண்டியல்களை, ஏலத்தில் விடுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இந்த வகையில் நாளை மறுதினம் (05) மேற்படி இந்த திறைசேரி உண்டியல்களை ஏலத்தில் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி தெரிவிக்கையில்,

06

# ஹெலிகொப்டர்களில் நோயாளர்கள் இடமாற்றம்

நெலுவ வைத்தியசாலைக்கு செல்லும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் அனைவரும் ஹெலிகொப்டரில் உடுகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

வெள்ளம் ஏற்பட்டதால் வீதிகளால் அம்பியுலன்ஸ் வண்டிகள் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனால்,

06



# ரஞ்சித்மத்தும பண்டாரவுக்கு ஐ.தே.க மீண்டும் உறுப்புரிமை



ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டாரவின் இடைநிறுத்தப்பட்ட கட்சி உறுப்புரிமையை, மீள வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 2020 இல் இவரை இடைநிறுத்தியிருந்தது. இந்நிலையில், ரஞ்சித் மத்தும பண்டாரவின் கட்சி உறுப்புரிமையை மீண்டும் வழங்க நேற்று (02) கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

06

## காலநிலையால் ஏற்படும் அனர்த்தங்களை அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள்



சீரற்ற காலநிலையால் ஏற்படும் அனர்த்தங்களை அறிந்து கொள்ளவும், தகவல்களை வழங்கவும் விஷேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனின் 0773333777 என்ற இலக்கத்திற்கும், தேசிய பேரிடர் முகாமைத்து நிலைய ஊடக பிரதிப் பணிப்பாளர் ஜனக ஹந்துன்பதிராஜா 0773957897, வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் 0716333088, மகாவலி அதிகாரசபை பிரதி பணப்பாளர் நாயகம் 0714429311, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் 0718167457 எண்ணுடனும் தொடர்பு கொள்ளலாம். மேலும், நீர்ப்பாசன திணைக்களம் 0718566923, பேரிடர் நிவாரண சேவை நிலையம் 0727591005 இலக்கத்தையும் தொடர்பு கொள்ளலாம்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 0714500909 இலக்கத்துடனும், காலி மாவட்டத்தில் 0714451310 தொலைபேசியுடனும் தொடர்பு கொள்ளுமாறு மக்கள் கோரப்படுகின்றனர்.

# பல்கலைக்கழக அனுமதி கடந்த வருடத்தை விட 1.8 வீத அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்துள்ள நிலையில், பல்கலைக்கழகத்துக்கான அனுமதி கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் 1.8 வீதமாக அதிகரித்துள்ளது. மூன்று பாடங்களிலும் A பெற்றுக்கொண்ட



மாணவர்களின் எண்ணிக்கையும் கடந்த வருடத்தை விட 510 ஆல் அதிகரித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

சமய நிகழ்வொன்றின் பின்னர் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

06

# மக்களின் பாதுகாப்புக் கருதி தற்காலிக மின் துண்டிப்புக்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடும் காற்று தொடர் மழை போன்ற சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவு என்பவற்றைக் கருத்திற் கொண்டு, சில பிரதேசங்களில் மின்சார இணைப்புக்களை தற்காலிமாக துண்டித்துள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு, காலி, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் பல பகுதிகளில், இவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷ்ன ஜயவர்தன

06

### ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்பு

# கைதானோரின் வங்கி கணக்குகளை ஆராய்வதற்கு நீதிமன்றம் அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்புள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டு நாட்டில் கைதான மூவரதும் வங்கிக் கணக்குகளுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வைப்பிலிடப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி கிடைத்துள்ளது.



கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது. இந்தியாவில் கைதான நால்வருடன் தொடர்புள்ளதாகச் சந்தேகிக்கப்பட்டே அண்மையில் இவர்கள், கைதாகியிருந்தனர். இவர்களின் தகவல்களை

06

# பஸ்கள் மோதி விபத்து நடத்துநர் உயிரிழப்பு

### நால்வருக்கு காயம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இரண்டு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில், நடத்துநர் உயிரிழந்ததுடன், நால்வர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை பஸ் நிலையத்திற்கருகில் நேற்றுக் காலை இவ் விபத்து இடம்பெற்றது. தனியார் பஸ் வண்டியும்

06



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஜுன் 3 திங்கட்கிழமை

தினகரன் THINAKARAN


**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.32
லுஹர் - 12.10
அஸர் - 03.36
மஃரிப் - 06.24
இஷா - 07.40

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் வைகாசி 21
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# இயற்கை அனர்த்தம்; இரத்தினபுரி மாவட்டத்தில் நால்வர் உயிரிழப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளம் உள்ளிட்ட பல்வேறு அனர்த்தங்களால் நேற்று பிற்பகல் வரை, 2575 குடும்பங்களைச் சேர்ந்த 9398 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் வசந்த குணரத்ன தெரிவித்தார்.

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் குறித்து நேற்று (02) ஊடகவியலாளர் மத்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கை அனர்த்தத்தினால் இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, குருவிட்ட, எலபாத, எஹெலியகொடை, நிவித்திகல, அயகம, கிரியெல்ல, பெல்மதுல்ல ஆகிய

08 பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர், இரத்தினபுரி மாவட்டத்தில் துரதிஷ்டவசமாக 04 மரணங்கள் பதிவாகியுள்ளன.

எலபாத்த பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 21 வயதுடைய பெண் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலியாகியுள்ளார். கிரியெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் அதிக காற்றினால் மரம் ஒன்று வீழ்ந்து பலியாகியுள்ளார். எஹெலியகொடை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 11 வயது சிறுமி மண் மேடு சரிந்து விழுந்ததில் பலியாகியுள்ளார். அயகம பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஆண் ஒருவர் மண் சரிவில் சிக்கிய நிலையில் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலியாகியுள்ளார்.

அத்துடன் இரத்தினபுரி, எஹெலியகொடை மற்றும் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் அனர்த்த நிலைமைகள் காரணமாக 14 பாதுகாப்பான



நிலையங்களில் 529 குடும்பங்களைச் சேர்ந்த 2219 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் எலபாத்த, எஹெலியகொடை மற்றும் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 1258 குடும்பங்களைச் சேர்ந்த 4874 பேர், தமது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். அனர்த்தம் காரணமாக 88 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

# எதிர்வரும் நாட்களில் கனத்த மழைக்கு சாத்தியம்

நாட்டில் எதிர்வரும் நாட்களில் கடும் மழை பெய்யும் என்றும் இதனால்,கொழும்பு, களுத்துறை மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்படும் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பிரதான ஆறுகளை அண்மித்த தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும், வெள்ள நிலைமைகளை பார்வையிட செல்வதை தவிர்க்குமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பல நிவாரணக் குழுக்கள் செயல்பட்டுவருவதாக நேற்று மாலை நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்னர்.

# மிலிந்த மொரகொடவின் நூல் வெளியீடு







**அஷ்ரப் ஏ சமத்**

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகரும் பொருளாதார நிபுணருமான மிலிந்த மொரகொட எழுதிய 'மலரும் யுகத்திற்கு' எனும் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு கொழும்பு தமிழ் சங்கத்தின் தலைவர் கலாநிதி ரகுபரன் தலைமை வகித்தார். பிரதம அதிதியாக முன்னாள் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் கலந்து கொண்டார்.

வரவேற்புரையை பாத் பைன்டர் பௌண்டேசனின் முகாமைத்துவ பணிப்பாளர் கே.பாலசுந்தரமும், நூல் நயவுரையை கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தியும், நூல் விமர்சன உரையை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி யசோதரா கதிர்காமத்தம்பியும், இந்தியா கலாசாரத் நிலையம் மற்றும சுவாமி விவேகானந்தா நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அங்குரன் டட்டா ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இந் நூலினை மொழி பெயர்த்த லேக் ஹவுஸ் மொழிபெயர்ப்பாளர் வீ.ஆர். வயலட், ஜெனிபர் மொரகொடவினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஸ்ரீ பவன் நூலாசிரியர் மிலிந்த மொரகொடவை பொன்னாடை போற்றி கௌரவித்தார். பாடசாலை மாணவர்களுக்கும் வருகை தந்தவர்களுக்கும் நூல் இலவசமாக வழங்கப்பட்டது

# கம்பஹா மாவட்ட மூத்த ஆலிம்கள் கௌரவிப்பு

## 56 பேருக்கு விசேட பரிசுகள், பாராட்டுக்கள்

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் கம்பஹா மாவட்ட மூத்த ஆலிம்களை கௌரவித்தல் நிகழ்வு, வத்தளை ஹுணுப்பிட்டிய, ஹெவன் கேட் பென்கட் ஹோல் வரவேற்பு மண்டபத்தில், வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கம்பஹா மாவட்டத்தில் இயங்கும் மினுவாங்கொடை, நீர்கொழும்பு, திஹாரிய, கஹட்டோவிட்ட, பஸ்யாலை, மல்வானை, பூகொடை, வத்தளை ஆகிய எட்டு கிளைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த ஆலிம்கள் 56 பேர், இந்நிகழ்வில் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். கம்பஹா மாவட்ட அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. கம்பஹா மாவட்ட தலைவர் அஷ்ஷெய்க் நுஹ்மான் இன்ஆமி, செயலாளர் அஷ்ஷெய்க் ஸைபுல்லாஹ் இஹ்ஸானி, பொருளாளர் அஷ்ஷெய்க் ஷாபி ஹுஸைன் நழீமி ஆகியோர் உள்ளிட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர்களின் அயராத உழைப்பினால், மூத்த ஆலிம்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களுக்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள்

கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார். நஷ்டஈடு வழங்கும் விபரங்கள் அந்தந்த மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்

இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

முப்படையினரின் ஒத்துபைப்புடன், பாதுகாப்பு மத்திய நிலையங்களில் உள்ள மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் சுகாதார வசதிகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை காப்பாற்ற கடற்படையினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது. அவசிய சூழ்நிலையிலும் நிவாரணப் பணிகளுக்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி நிதி வழங்கப்படும் என்றும் பாதுகாப்பு இராஜாங்க பிரமித பண்டார தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

# தினகரன் 92 வருடங்களுக்கு முன்

தினகரன் THINAKARAN

**92**

வருடங்களுக்கு முன்

**தினகரன்**

**இன்று 03 ஜூன் 1932**


அரசியல் திருத்தத் திட்டம்
லிபரல் சங்கத்தின் பொதுக் கூட்டம்
மந்திரிகள் மீது கண்டனம்

## அரசியல் திருத்தத் திட்டம்

லிபரல் சங்கத்தின் பொதுக் கூட்டம்

### மந்திரிகள் மீது கண்டனம்

**தேசிய கோரிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை**

சென்ற புதன்கிழமை மாலை லிபரல் சங்கத்தின் பொதுக்கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் அகில இலங்கை லிபரல் சங்கத்தின் கொள்கையைச் சென்ற காலத்தில் அசட்டை செய்ததற்காக லிபரல் கட்சியைச் சேர்ந்த மந்திரிகளாகிய திருவாளர்கள் பட்டுவாந்துடாவ, பனபொக்கே, பெரி சுந்தரம் ஆகிய மூவரும் பலமாகக் கண்டிக்கப்பட்டனர்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# மிளகு இறக்குமதி செய்யுமளவுக்கு உற்பத்தி வீழ்ச்சியடையவில்லை

## இறக்குமதி செய்யப்படுவதாக போலிப்பிரச்சாரம்



நாட்டில் 30,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான மிளகு அறுவடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள விவசாய அமைச்சு,

இறக்குமதி செய்யப்படுவதாக வரும் செய்திகள் போலியானவை எனவும் மறுத்துள்ளது.வருடாந்தம் 23,000 மெற்றிக் தொன் மிளகு அறுவடை செய்யப்படுகிறது. 2023 முதல் மிளகுச் செய்கையில் புதிய தொழினுட்பம் அறிமுகஞ் செய்யப்பட்டது டன்,மானியங்களும் வழங்கப்பட்டன.

இதனால்,மிளகு விளைச்சல் அதிகளவு அதிகரித்தது. கடந்த வருடம் வரட்சி நிலவியதால்,விளைச்சல சற்று வீழ்ச்சியடைந்தாலும் இறக்குமதி செய்யும் அளவுக்கு இருக்கவில்லை.மிளகு இறக்குமதி செய்யப்படுகிறதா என்று சிலர் கேட்கின்றனர். மிளகு இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உலகில் சிறந்த மிளகு இலங்கையிலே பயிரிடப்படுகிறது.

சீரற்ற கால நிலையால்

# மத்தளையில் விமானங்கள் நேற்று தரையிறக்கம்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க வந்த சகல விமானங்களும் நேற்று (02) மத்தளைக்கு திருப்பப்பட்டன.

இப்பகுதியில் சீரற்ற காலநிலை நிலவியதாலே, விமானங்கள் மத்தளை விமான நிலையத்துக்கு திருப்பப்பட்டன.

இவ்வாறு இரண்டு விமானங்கள் நேற்று திருப்பப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். அபுதாபியிலிருந்து வந்த விமானம் மற்றும் சிங்கப்பூரிலிருந்து வந்த விமானங்களே மத்தளைக்கு திருப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும், அபுதாபியிலிருந்து வந்த விமானத்திலிருந்த பயணிகள் மத்தளையில் இறங்க மறுத்ததால் இவ்விமானம் மீண்டும் கட்டுநாயக்கவுக்கு திருப்பப்பட்டது.சிங்கப்பூரிலிருந்து வந்த ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் விமான பயணிகள், பயணிகள் மத்தளையில் இறங்கியதையடுத்து இவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது.

# களுத்துறை மாவட்ட தாழ்நில பகுதிகளில் மக்கள் வெளியேறல்

**பேருவளை தினகரன் நிருபர்**

களுத்துறை மாவட்டத்தில் பெய்த கடும் மழையால்,அகலவத்தை மற்றும் புளத்சிங்கள தொகுதிகளிலுள்ள கிராமங்கள் நீரில் மூழ்கி உள்ளன.இதனால் வெளியேறிய மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.தாழ்நிலப்பகுதிகளில் வசிப்போரை மிகப்பாதுகாப்பாக இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. மதுகமை தொகுதியில் உள்ள வெலிப்பன்னை அகல வத்தை தொகுதியில் உள்ள பலாந்தை புளத்ஸிங்கள தொகுதியில் உள்ள வியங்கல்ல கிராமங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.வீதிகளில் வெள்ளம் பாய்வதால் வெளியேற விரும்பும்

மக்களை அழைத்துவர வேறு வழிகள் இல்லாதுள்ளன.தோணி, படகுகள் மூலம் மக்கள் கரையேற்றப்படுகின்றனர். இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்படுகின்றன.

# அருணாசல பிரதேசத்தில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சி

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இந்திய பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நிறைவடைந்துள்ள நிலையில்,அருணாச்சல் மாநில ஆட்சியை பாரதீய ஜனதா கைப்பற்றி உள்ளது.இங்குள்ள அறுபது தொகுதிகளில் வேட்பாளரை நிறுத்திய பாரதீய ஜனதா கட்சி,

48 தொகுதிகளை கைப்பற்றி வெற்றியீட்டி உள்ளது. பாராளுமன்ற தேர்தலுடன் ஆந்திரா, ஒடிசா, அருணாசல், சிக்கிம் ஆகிய 4 மாநிலங்களின் சட்டசபைக்கும் தேர்தல் நடைபெற்றன. அருணாச்சல் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சி 19 தொகுதிகளில் மட்டுமே வேட்பாளர்களை களமிறக்கியது. தேசிய மக்கள் கட்சி உட்பட பிற கட்சிகளும் களமிறங்கின. களத்தில் போட்டி வேட்பாளர்கள் இல்லாததால் முதல்வர் பெமா காண்டு அடங்கலாக 10 பா.ஜ.க. வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து எஞ்சிய 50 சட்டசபை தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. இதில்,48 தொகுதிகளை பாரதீய ஜனதா கட்சி வென்று மாநில ஆட்சியைப் பிடித்தது.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் நாளை (04) வெளியாக உள்ள நிலையில் அருணாச்சல் வெற்றி பாரதிய ஜனதாவுக்கு பலமாக அமைந் துள்ளதாக பலரும் பேசுகின்றனர்.

# மரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் மரணம், படுகாயம்

இரத்தினபுரி, கஹவத்தை, ஓபாவத்த தோட்டத்தில் பிரிவு மூன்றில் மரம் முறிந்து விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் இரண்டு பெண்கள் காயங்களுடன் இரத்தினபுரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 48 வயது ஒரு பிள்ளையின் தாயான தமிழ்ச் செல்வி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.நேற்றுக் காலை தேயிலை தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்த இடம்பெற்றுள்ளது.

# களனி வெளி ரயில் சேவைகள் நிறுத்தம்

கொஸ்கம, புவக்பிட்டி, ரன்வல அவிசாவளை வரையான பகுதியில் மண்சரிவு அபாயம், பாலம் இடிந்துவிழும் நிலை காணப்படுவதால் இப்பகுதிகளுக்கான ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

களனிவெளி ரயில் பாதையில் வெள்ளம் ஏற்றபட்டதையடுத்தே இத்தீர்மானத்தை எடுத்ததாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

களனிவெளி ரயில் பாதையில் கொழும்பு முதல், வக நிலையம் வரை மாத்திரமே ரயில் சேவை இடம்பெறும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இதேவேளை, வகயிலிருந்து இரண்டு ரயில்களும், பாதுக்கையிலிருந்து இரண்டு ரயில்களும் கொழும்புக்கிடையில் சேவையில் ஈடுபடும் என ரயில்வே அதிகாரிகள் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.



# அரசியலமைப்புக்கு அமைவாக பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## அதற்கு எதிராக பேசுவது அரசியல் அமைப்பை மீறும் செயல்

## அரசின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் மகா சங்கத்தினருக்கு கௌரவமான நன்றிகள்

**ஹோமாகம, "குருதேவ சுவ அரண" பிக்குகளுக்கான நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு**



தேரருக்கு ஜனாதிபதி கௌரவிப்பு



இந் நிகழ்வில் கலந்துகொண்ட தேரர்கள்



இந் நிகழ்வில் கலந்துகொண்ட தேரர்கள்



ஜனாதிபதி, அமைச்சர்கள், எம்.பிக்கள், தியவதன நிலமே, இராணுவ தளபதி

### இவ்வாறான வைபவங்கள் நடாத்துவதற்கு வாய்ப்பு கிடைத்திருப்பது வரிசை யுகத்துக்கு ஜனாதிபதி முடிவுகட்டி நாட்டை மீட்டதால் ஆகும்

கொஹுவளை ஸ்ரீ தாதுமாலு விகாரையின் விகாராதிபதி வண.பிடிகல சோனுத்தர நாயக்க தேரர்

### வைத்தியசாலைகளில் பிக்குகளுக்கான வார்டுகள் இருந்தாலும், அவர்களுக்கே உரிய தனியான வைத்தியசாலை இதுவே

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன



வைத்திய உபகரணங்கள் வழங்க பங்களிப்பு நல்கிய தென்கொரிய பிரஜைகள்

(1ஆம் பக்கத் தொடர்)

முன்னுரிமையளிக்கப்படும். இந்த முன்னுரிமைக் கொள்கையை பாதுகாக்கும் பொறுப்பு நிறைவேற்றுத் துறை, சட்டவாக்கத்துறை, மற்றும் நீதித்துறைக்கு உள்ளன. இதை எவரும் மறுக்க முடியாது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்தப் பொறுப்பு உள்ளன. பௌத்தத்துக்கு முன்னுரிமையளிக்காவிடின் அரசியலமைப்பை மீறியதாகவே அர்த்தப்படும்.

இம் முன்னுரிமையை மாற்ற விரும்பினால், அரசியலமைப்பையே மாற்ற வேண்டும்.

மக்கள் இறைமை, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குதல், ஒருமைப்பாட்டைப் பேணுதல் என்பவையே அரசியலமைப்பின் அடிப்படை கோட்பாடுகளாகும். இந்த கோட்பாடுகளைப் பாதுகாத்து எப்பொழுதும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இவற்றுக்கு எதிராகப் பேசுவது அரசியலமைப்பை மீறுவதாக அமையும் எனவும் அவர் வலியுறுத்தினார்.





மேலும், இறக்கும் நிலையில் உள்ள நோயாளியை குணப்படுத்தும் பொறுப்பு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தற்போது நோயாளி படிப்படியாக குணமடைந்து வருவதாகவும், அந்த வேலைத்திட்டத்திற்கு இலங்கை மகா சங்கத்தினரிடமிருந்து கிடைத்த வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார்.

கொஹுவளை விகாரையின் விகாராதிபதியாகவும், இலங்கை ரமண்ய நிக்காயாவின் தலைமைப் பதிவாளராவும் இருந்த, மறைந்த வண. மாபாலகம சிறி சோமிஸ்ஸர நாயக்க தேரரின் எண்ணக்கருவுக்கு அமைய இலங்கை மற்றும் வெளிநாட்டு பிக்குகளுக்காக இந்த “குருதேவ சுவ அரண” நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்து மாடிக் கட்டடம் கொண்ட இந்த நிலையத்தில், 3 மாடிகளில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ நிலையத்தில் ஒரே நேரத்தில் ஐம்பது பிக்குகள் சிகிச்சை பெறலாம். அலுவலக அறைகள், வார்டு, அம்பூலன்ஸ், மருந்தகம், மருத்துவர்களுக்கான தங்குமிடங்கள், அவசர சிகிச்சை பிரிவு உள்ளிட்ட வசதிகள் இங்கு உள்ளன.

பிக்குகளுக்கான தியான வசதிகளும் இங்கு காணப்படுவதோடு, இந்த நிலையத்தை அமைக்க, கொரியாவில் வசிக்கும் விஜிதவங்ச தேரர், கொரிய உல்சான் பௌத்த வைத்தியசாலையின் பணிப்பாளர் Neunghaeng பிக்குனி மற்றும் தாய்வான் கொசோன் Long Fong ஆசிரமத்தின் சிந்தாவோ (SinDaw) பிக்குனியும் இந்த நிலையத்திற்கு மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான உதவிகளை வழங்கியுள்ளனர். இந்த வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது. குருதேவ சுவ அரண பிக்கு வைத்திய நிலையத்தின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்த ஜனாதிபதி, அதனைப் பார்வையிட்டார்.

இதன் போது, வைத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக காணியை நன்கொடையாக வழங்கிய சந்தியா காந்திலதாவுக்கு ஜனாதிபதியால் நினைவுப் பரிசு வழங்கி வைக்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“இலங்கையில் பிக்குகளுக்காகக் கட்டப்பட்ட முதலாவது வைத்தியசாலை இதுவாகும். நம் நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் பிக்குகளுக்கான வார்டுகள் மட்டுமே இருந்தன. இந்த மருத்துவமனை நோய்வாய்ப்பட்ட பிக்குகளுக்காகக் கட்டப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி.

இதன் பணிகளை முன்னெடுத்துச் செல்ல சுதேச வைத்திய அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. அதேபோல் இதன் அபிவிருத்திக்கு அரசாங்கம் ஆதரவளிக்கும். இப்போது அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

அதன் சட்டத் தன்மை பற்றி சிந்திக்கும்போது, நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அவரவர் விருப்பப்படி ஒரு மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. மேலும் எந்த மதத்திலும் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கான உரிமையும் உள்ளது.

மேலும், எந்தவொரு அரசாங்கமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது.

அந்தப் பொறுப்பு தற்போதைய அரசாங்கத்துக்கும் உள்ளது. ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுத் துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத் துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட 3 துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கு ஆதரவளிக்கத் தவறுவது அரசியலமைப்புக்கு எதிரானதாகும். எம்.பி.க்கள் அனைவரும் அரசியலமைப்பை பின்பற்றுவோம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். எனவே, இந்த நாட்டில் யுத்தம் இடம்பெற்றிருந்தாலும் இவ்வாறானதொரு கோரிக்கை இதுவரை முன்வைக்கப்படவில்லை. அது பற்றிப் பேசப்படவும் இல்லை.

சட்ட ஏற்பாடுகள் பற்றி விவாதிக்கலாம். ஆனால், கோட்பாடுகள் தொடர்பில் விவாதிக்க முடியாது. அரசாங்கம் என்ற வகையில் அதனைப் பின்பற்ற வேண்டும். இதை மாற்ற விரும்புவோர் அரசியலமைப்பையே மாற்ற வேண்டும்.

இறக்கும் நிலையில் உள்ள நோயாளியை குணப்படுத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது நோயாளி படிப்படியாக குணமடைந்து வருகிறார். அது பற்றி தொடர்ச்சியாக ஆலோசிக்கிறோம். உலகில் எந்த நோயாளியும் ஒரே தடவையில் குணமடைந்ததில்லை. இந்த நோயாளியை குணப்படுத்த இன்னும் மூன்று முதல் நான்கு ஆண்டுகள் ஆகும். ஆனால் இந்தப் பணியை மேற்கொள்ள எங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அந்த வேலைத்திட்டத்திற்கு மகா சங்கத்தினரிடமிருந்து கிடைத்த ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.” என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

**கொஹுவளை ஸ்ரீ தாதுமாலு விகாரையின் விகாராதிபதி வண.பிடிகல சோனுத்தர நாயக்க தேரர்:**

நாட்டில் நெருக்கடியான நிலைமை காணப்பட்டது. மக்கள் வரிசையில் நிற்கும் நிலைமை இருந்தது. ஆனால் ஜனாதிபதி இந்த நாட்டை பொறுப்பேற்றதன் காரணமாகவே இன்று இந்த நிலையை அடைய முடிந்துள்ளது. சந்தேகமில்லாமல் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை. நாட்டை இந்த நிலைக்குக் கொண்டு வந்ததால் தான் இன்று இந்த சமய விழாவை நடத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதை எப்போதும் நன்றியுடன் நினைவுகூர்வோம்.

**அமைச்சர் பந்துல குணவர்தன,**

இந்நாட்டில் புத்த மதத்தைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் விசேட தியாகங்களைச் செய்த மகா சங்கத்தினருக்கு பண்டைய காலத்தில் விசேட வைத்தியசாலைகள் கட்டப்பட்டமை வரலாற்றில் பதிவாகியுள்ளது. அண்மைக்கால வரலாற்றில், சுதந்திரத்திற்குப் பிறகு, பல்வேறு அரசாங்கங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மருத்துவமனைகளில் துறவிகளுக்கு தனி வார்டுகளை தயார் செய்துள்ளன.

மூன்று ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் உள்ளூர் மேற்கத்திய வைத்தியசாலைகளில் பிக்குகளுக்கான வார்டுகள் இருந்தாலும், அவர்களுக்கு தனியான வைத்தியசாலை கட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மகா சங்கத்தினர், சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, ஸ்ரீ தலதா மாளிகை தியவடன நிலமே நிலங்க தெல பண்டார மற்றும் உள்நாடு வெளிநாட்டு பக்தர்கள், தென்கொரிய பௌத்த பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 21ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 25

## குறள் தரும் சிந்தனை

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்

விருந்தோம்புதலாகிய வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவுபடுத்தி கூறத்தக்கது அன்று, விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினதாகும்.

# அரசியலமைப்புக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டியது அவசியம்

இலங்கையில் பிக்குகளுக்கான முதலாவது வைத்தியசாலை கிரிவத்துவாவவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமங்கவினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'குருதேவ சுவ அரண' என்ற பெயர் கொண்ட இந்த நிலையம் கொஹுவளை விகாரையின் விகாராதிபதியாகவும், இலங்கை ரமண்ய நிக்காயாவின் தலைமைப் பதிவாளராவும் இருந்த மறைந்த வண. மாபாலகம சிறி சோமிஸ்ஸர நாயக்க தேரரின் எண்ணக்கருவுக்கு அமைய இலங்கை மற்றும் வெளிநாட்டு பிக்குகளுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டடமாக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள இந்நிலையத்தில், 3 மாடிகளில் மருத்துவ நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் ஐம்பது பிக்குகள் சிகிச்சை பெற இங்கு வசதிகள் உள்ளன. அலுவலக அறைகள், வார்ட், அம்யூலன்ஸ், மருந்தகம், மருத்துவர்களுக்கான தங்குமிடங்கள், அவசர சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட வசதிகளையும் இந்நிலையம் கொண்டுள்ளது.

இற்றைவரையும் இந்நாட்டிலுள்ள மருத்துவமனைகளில்தான் பிக்குகளுக்கென தனியான வார்ட்டுகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் தற்போதுதான் பிக்குகளுக்கென தனியான வைத்தியசாலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றது.

இது வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாகும்.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அவரவர் விருப்பப்படி ஒரு மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. மேலும் எந்த மதத்திலும் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கான உரிமையும் உள்ளது.

மேலும் எந்தவொரு அரசாங்கமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று நாட்டின் அரசியலமைப்பு கூறுகிறது. அதனால் ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுத்துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத்துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட மூன்று துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியம். அதற்கான பொறுப்பு தற்போதைய அரசாங்கத்துக்கும் உள்ளது. எம்.பி.க்கள் அனைவரும் அரசியலமைப்பை பின்பற்றுவோம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். இதற்கு ஆதரவளிக்கத் தவறுவது அரசியலமைப்புக்கு எதிரானதாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாட்டிலும் அதன் சட்டம், ஒழுங்குக்கு அடித்தளமாக அமைவது அந்நாட்டின் அரசியலமைப்பாகும். அந்த சட்ட அமைப்புக்கு அமையவும் ஏற்பவும் வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வது அந்நாட்டில் வாழும் ஒவ்வொரும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

அந்த வகையில் ஜனநாயக நாடான இலங்கையினதும் அடிப்படை சட்டக் கட்டமைப்பாக அரசியலமைப்பே விளங்குகிறது. அதன்படி ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுத்துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத்துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட மூன்று துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியம்.

இது இந்நாட்டின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடிப்படை விடயமாகும். இந்த அரசியலமைப்பைப் பின்பற்றுவோம் என்றே ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் உறுதிமொழி எடுத்துள்ளனர். அதற்கு ஏற்ப செயற்படுவது அவசியம். அதற்கு ஆதரவளிக்க தவறுவது அரசியலமைப்பு எதிரானதாகும். அது தண்டனைக்குரிய குற்றமாகவே அமையும்.

இந்நிலையில் அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டியது அவசியம் என்ற கருத்து இப்போது முன்வைக்கப்படுகிறது. இந்த அரசியலமைப்பின் அடித்தளமான ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுத் துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத் துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட மூன்று துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. நாட்டின் அடிப்படைச் சட்டக் கட்டமைப்பான அரசியலமைப்பு பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கையில் அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டும் என்ற கருத்து எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகும்.

இந்த நிலையில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, 'சட்ட ஏற்பாடுகள் பற்றி விவாதிக்கலாம். கோட்பாடுகள் தொடர்பில் விவாதிக்க முடியாது. அரசாங்கம் என்ற வகையில் அதனைப் பின்பற்ற வேண்டும். இதை மாற்ற விரும்புவோர் அரசியலமைப்பையே மாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மை. அரசியலமைப்புக்கு முரணாக செயற்பட வேண்டும் என்றால் அந்த அரசியலமைப்பையே முதலில் மாற்ற வேண்டும். அதனை விடுத்து பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கும் அரசியலமைப்புக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தையும் பௌத்தத்தையும் பிரிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பது மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதாகவே இருக்கும்.

ஆகவே அரசியமைப்பை மதித்து அதன் செயற்படுவது ஒவ்வொரு பிரஜையினது பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் விரைவில் தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு ஆரம்பம்

1. தகவல் தொழில்நுட்பப் பாடம் உயர்கல்வி நிலைக்குச் செல்ல வேண்டும்.
2. வேலை அல்லது வேறு கல்வியை மேற்கொண்டவாறு இந்த பட்டப்படிப்பைப் படிக்கலாம்.
3. வேலைவாய்ப்புக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்குவதே எங்கள் நோக்கம்.
4. தகவல் தொழில்நுட்பப் பாடம் இருந்தாலும், அது முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதை ஆராய வேண்டும்.

**மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி நிலையம் விரைவில் தகவல் தொழிநுட்பப் பட்டப்படிப்பை ஆரம்பிக்கவுள்ளதுடன், அதற்காக மாணவர்களை இணைக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட விரிவுரையாளர் விசாகா நாணயக்காரவுடன் இந்த பட்டப் படிப்பின் முக்கியத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்ப கற்கையின் முக்கியத்துவம் குறித்த கலந்துரையாடல் இது.**

**கே: இன்றைக்கு உலகின் மிக முக்கியமான பாடங்களில் தகவல் தொழிநுட்பமும் ஒன்றாகும். மேலும் அது உலக எழுத்தறிவின் ஒரு பகுதி. இந்நிலையில், இந்தப் பாடத்தை மாணவர் சமூகத்துக்கு எடுத்துச் செல்ல பல்கலைக்கழகம் மேற்கொள்ளும் திட்டங்கள் என்ன?**

பதில்: நீங்கள் சொன்னது போல் தகவல் தொழில்நுட்பம் என்பது இன்று சூப்பர் பாடமல்ல. சாதாரண உலகிற்கு இன்றியமையாத பாடம். அன்று போலல்லாமல், இன்று தகவல் தொழில்நுட்பம் என்பது அன்றாடப் பணிகளின் செயல்திறனில் கூட வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, தகவல் தொழில்நுட்பப் பாடம் குறித்து பல்கலைக்கழக அளவிலான புரிதலும், பட்டதாரி அளவிலான விழிப்புணர்வும் இருப்பது நல்ல சூழ்நிலை. மேலும் இது ஒரு நேர்மறையான விஷயம் என்று குறிப்பிடுவதில் தவறில்லை. எனவே, இன்றைய மாணவர்கள் தகவல் தொழில்நுட்பப் பாடத்தைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில், நீங்கள் உதவியற்றவர்களாகவும், எதிர்காலத்தில் எதையும் சாதிக்க முடியாதவர்களாகவும் இருப்பீர்கள்.

கடந்த கொவிட் தொற்றுநோய்களின் போது, தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்து வம் மற்றும் அதிலிருந்து பெறக்கூடிய நன்மைகள் குறித்து நாங்கள் நன்கு பு ரிந்துகொண்டோம். எனவே, தகவல் தொழில்நுட்பப் பாடத்தை பாடசாலை மட்டத்தில் மட்டுமல்ல, டிப்ளோமா சான்றிதழ் அளவைத் தாண்டி உயர் கல்வி நிலைக்குக் கொண்டுச் செல்ல வேண்டும்.

இதன்படி மொரட்டுவை பல்கலைக்கழகம் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப் படிப்பை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பட்டத்தை வெளிவாரிப் பட்டமாக அறிமுகப்படுத்தலாம். மொரட்டுவை பல்கலைக்கழகம் இந்நாட்டின் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் தொடர்பான பல்கலைக்கழகமாகும். இப்பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவதை மிகவும் சிறப்பான பட்டம் என்று குறிப்பிடலாம்.

**கே: இந்தப் பட்டப்படிப்புக்குத் தேவையான அடிப்படைத் தகுதிகள் எவை?**

பதில்: உயர்தரத்தில் மூன்று சாதாரண சித்தி அதாவது மூன்று எஸ் லெவல் பொதுத்தேர்ச்சி பெற்ற எந்த மாணவரும் இந்தப் பட்டப்படிப்பைப் படிக்கலாம். சாதாரண தர பரீட்சையில் கணித பாடத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறான மாணவர்களுக்கு ஐடி பட்டப்படிப்பு படிக்கும் தகுதி உள்ளது. இந்த பட்டப் படிப்பு மூன்றாண்டு கால பாடநெறியாக கற்பிக்கப்படுகிறது.

**கே: மொரட்டுவை பல்கலைக்கழகம் போன்ற முக்கிய அரச பல்கலைக்கழகம் வழங்கும் இந்த பட்டத்திற்கு அதிகக் கட்டணம் வசூலிக்கிறீர்களா?**

பதில்: இல்லை. மற்றைய பல்கலைக் கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடும் போது, சராசரி பெற்றோர் தங்கள் குழந் தை களுக்காக வழங்கக்கூடிய தொகையையே நாங்கள் இந்தப் பாடநெறிக்கு அறவிடுகிறோம். மூன்றாண்டு கால கட்டணமாக சராசரியாக இரண்டு இலட்சம் ரூபா அறவிடப் படுகிறது.

**கே: இந்தத் தொகையை ஒரேயடியாகச் செலுத்த வேண்டுமா?**

பதில்: இல்லை, மொத்த தொகையையும் உடனடியாக செலுத்தத் தேவையில்லை. இத்தொகையை தவணை முறையில் செலுத்துவதால், இப்படிப்பை படிக்கும் மாணவர்கள் அதிக வசதியைப் பெறுவார்கள். சாதரணமாக பன்னிரண்டாயிரத்து ஐநூறு ரூபாவே தவணைக் கட்டணமாக அறவிடப்படுகிறது.



சிரேஷ்ட விரிவுரையாளர்
**விசாகா நாணயக்கார**
பணிப்பாளர், திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி மத்திய நிலையம், மொரட்டுவை பல்கலைக்கழகம்

**கே: இந்த தொழில்நுட்பப் பட்டப்படிப்பைப் படிக்க மாணவர்கள் பல்கலைக்கழகம் வர வேண்டுமா?**

பதில்: இல்லை, இந்தப் படிப்பு ஒன்லைனில் நடத்தப்படுகிறது. எனவே ஒருவர் வேறொரு வேலை செய்யும் போது அல்லது வேறு படிப்பை மேற்கொள்ளும்போது இந்தப் பட்டத்தைத் தொடரலாம். தேவையான அனைத்து விரிவுரைகளையும் வீடியோ வடிவில் வழங்குகிறோம். அதனால் மொரட்டுவைக்கு வரத் தேவையில்லை. ஆனால் தேர்வுகள் நடத்தப்படும் போது மட்டுமே பல்கலைக்கழகத்திற்கு வர வேண்டும். மேலும் ஒருவர் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வார இறுதியில் மொரட்டுவைக்கு வர வேண்டும்.

**எங்கள் தகவல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு பாடநெறி மிக உயர்ந்த தரம் வாய்ந்தது**

**கே: உயர்தரப் பரீட்சைக்குப் பிறகு ஒரு மாணவருக்கு சிறு இடைவெளி கிடைக்கிறது, அதற்கு ஏற்ற பாடமாக இந்தப் பாடத்திட்டத்தை அமைக்கிறீர்களா?**

பதில்: ஆம், உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்குப் பின்னர் ஒரு குறிப்பிட்ட இடைவெளி காலம் உள்ளது. அந்த நேரத்தில், இந்த பட்டப்படிப்பை ஒரு பயனுள்ள கல்வியாகப் பயன்படுத்தலாம்.

கேள்வி: இந்த பட்டப் படிப்பபை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமா? அல்லது ஒரு வருடத்தில் இந்தப் படிப்பை முடிக்க முடியுமா?

பதில்: அடிப்படைக் கட்டத்தை முடித்து சான்றிதழைப் பெற்ற பிறகு, படிப்பின் மற்றைய கட்டங்களுக்குச் செல்லலாம். எனவே, இந்தப் பட்டப் படிப்பின் சிறப்புச் சாதக நிலைமையாக அதனை சுட்டிக்காட்டலாம்.

**கே: அரச பல்கலைக்கழகத்தில் இரண்டு பாடநெறிகளை படிக்கும் போது, ஒரே மாணவர் இரண்டு பாடநெறிகளை படிக்க முடியுமா?**

பதில்: உதாரணமாக, மாணவர் ஒருவர் மருத்துவப் பட்டப்படிப்பில் நுழைகிறார். ஆனால் அந்த மாணவர் இந்த பட்டப் படிப்பையும் படிக்கலாம். மறுபுறம், மருத்துவம் போன்ற பாடத்துடன் தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடத்தையும் படிப்பது பெரும் நன்மையாக இருக்கும்.

**கே: கட்டணம் செலுத்தி படிக்கும் படிப்புகளின் தரம் குறித்து சிலருக்கு சந்தேகம் உள்ளது. மேலும் இதுபோன்ற பாடத்தை அரச பல்கலைக்கழகத்தில் நடத்த முடியுமா என்று மற்றவர்கள் கேட்கிறார்களே?**

பதில்: அவ்வாறு கேட்பவர்களும் இருக்கலாம். இந்த மாதிரியான பாடத்தில் தரம் இருக்குமா என்று இன்னொரு குழு நினைக்கலாம். உண்மையில், இந்தப் படிப்பு மிகவும் உயர்தர பட்டப் படிப்பு என்பதை நான் மிகுந்த பொறுப்புடன் சொல்கிறேன். பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் பெரிய சம்பளம் பெற வாய்ப்பு உள்ளது. ஒரு அரச பல்கலைக்கழகத்திலிருந்து மலிவு விலையில் மிக உயர்ந்த தரத்தில் IT பட்டத்தை வழங்க முடிவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

**கே: இந்தப் பட்டப் படிப்பின் விரிவுரைகளில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்கள் யார்?**

பதில்: இந்தப் பாடத்தின் அனைத்து விரிவுரைகளிலும் இந்தப் பாடத்தில் அதிக புலமை கொண்ட விரிவுரையாளர்களையே ஈடுபடுத்தியுள்ளோம். இவர்கள் மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தகுதி பெற்றவர்கள். ஒரு பல்கலைக்கழகமாக எங்களின் தரம் மற்றும் நற்பெயரைப் பற்றி நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். பாரம்பரிய எல்லைகளைக் கடந்து செயல்படுகிறோம்.

**கே: இந்தப் பட்டப் படிப்பின் மூலம் ஒரே நேரத்தில் இணையாக இயங்கும் நிறுவனங்களுக்குத் தேவையான வேலைவாய்ப்புகளை வழங்க முடியுமா?**

பதில்: ஆம். ஒரு பல்கலைக்கழகமாக, தற்போதைய வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற பட்டதாரிகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்தத் தகவல் தொழில்நுட்பப் பட்டப் படிப்பை வழங்குவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கியுள்ளோம், மேலும், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது எப்படி என்பது குறித்தும், அத்தகைய நிறுவனங்களுடன் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி நிலையம் விரைவில் செயற்படும்; மாணவர்களை இணைக்கும் நடவடிக்கை ஆரம்பம்**

**கே: ஐடி பாடம் சர்வதேச பாடம், அத்தகைய பாடத்திற்கு ஆங்கில மொழி அறிவு எவ்வளவு தேவை?**

பதில்: உண்மையில், அத்தகைய பாடத்திற்கு, ஆங்கில மொழி அறிவும் ஓரளவு தேவை. ஆனால் அந்த ஆங்கில அறிவு மிகவும் பரந்த அறிவாக இருக்க வேண்டியதில்லை. இந்தப் படிப்பை படிக்கும் போது, உங்கள் ஆங்கில அறிவை படிப்படியாக மேம்படுத்திக் கொள்ளலாம். நாங்கள் ஆங்கிலத்தில் சாதாரண சித்தியே கே ட்கின்றோம். ஊக்கமும் தேவையும் இருந்தால் இந்தப் படிப்பைப் படித்து அதில் வெற்றியும் பெற முடியும். முதல் ஆண்டில் கட்டமைக்கப்பட்ட கட்டுரை கேள்விகளை நாங்கள் அளிப்பதில்லை. விருப்பம் இருந்தால் எத்தகைய கடினமான தடைகளையும் கடக்க முடியும் என்பது என் நம்பிக்கை.

**கே: தகவல் தொழில்நுட்பம் படிப்பது மற்றும் பட்டப்படிப்பு மட்டத்துக்கு செல்வதால் என்ன நன்மைகள்?**

பதில்: தகவல் தொழில்நுட்பம் மற்றும் தேவைகளுக்குப் பயன்படுத்துவதில் நிறைய நன்மைகளைப் பெறலாம். தகவல் தொழில்நுட்பம் என்று அழைக்கப்படும் இந்த விடயத்தை சிறப்பாகப் பயன்படுத்திய பல குழுக்கள் உள்ளன. ஆனால் இவை அனைத்திலும் மிக நெருக்கமான உதாரணமாக பத்திரிகையை அறிமுகப்படுத்தலாம். இருபது ஆண்டுகளுக்கு முன்பு, செய்தித்தாள்கள் வெறும் செய்தித்தாள்கள் என்று நாம் நினைத்தோம், ஆனால் இன்று அது முற்றிலும் மாறிவிட்டது. இன்றைக்கு, தகவல் தொழில்நுட்பத்துக்கும் பத்திரிகைக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. இன்று காகிதத்தில் படிக்காமல் கைபேசியில் செய்தித்தாளைப் படிக்கும் அளவிற்கு தொழில்நுட்பம் முன்னேறியுள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால், அச்சு ஊடகக் கலை அழிந்து விடும் என்று நினைத்தோம், ஆனால் இப்போது புதிய தொழில்நுட்பத்துடன் பத்திரிகைத்துறை முன்னேறி வருகிறது.

2020 இற்கு முன், ஐடி என்பது அதிக வேலைவாய்ப்புகளைத் தேடுவதற்கான ஒரு பாடமாக மட்டுமே உள்ளது. ஆனால் கொவிட் தொற்றுநோயால் அந்த நிலை மாறியது. கொவிட் சமயத்தில், மருந்து உட்கொள்வது முதல் அனைத்தும் ஒன்லைனில் மேற்கொண்டோம். எனவே, இன்று நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும், தகவல் தொழில்நுட்பப் பாடம் முக்கியமானது. கடந்த காலங்களில் மொழி, கணிதம், பொது அறிவு போன்ற பாடங்கள் இன்றியமையாததாக இருந்த போதிலும், தற்போது தகவல் தொழில்நுட்பம் என்ற பாடம் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**கே: தகவல் தொழில்நுட்ப கல்வியறிவு இன்றைய சமூகத்தின் இன்றியமையாத அங்கமாகிவிட்டதா?**

பதில்: நம் நாட்டில் இன்னும் தகவல் தொழில்நுட்பம் என்ற பாடம் இருந்தாலும், அது முறையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை ஆராய வேண்டும். இன்று, உலகின் வங்கி அமைப்பு ஒன்லைனில் செயல்படுகிறது. அந்த நாடுகளில் உள்ள நுகர்வோர் வங்கிக்கு செல்வதில்லை. எல்லாம் ஒன்லைனில் செய்யப்படுகிறது. ஆனால் நம் நாட்டின் வங்கி அமைப்பு அந்தளவுக்கு வளர்ச்சியடையவில்லை. அதனால்தான் தகவல் தொழில்நுட்பப் பாடத்தை மேற்கொண்டு படிப்பதும், அது தொடர்பான உயர்கல்வியைப் பெறுவதும் முக்கியம் என்பது உறுதியாகிறது.

**இன்றைய மாணவர்கள் தகவல் தொழில்நுட்பப் பாடத்தைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில், அவர்கள் உதவியற்றவர்களாகவும், எதிர்காலத்தில் எதையும் சாதிக்க முடியாதவர்களாகவும் இருப்பார்கள்**

**உதித்த குணவர்தன...**
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# மானுடவியல்



166

அப்பொழுது பிள்ளையார் பரமசிவனை வணங்கிக் கொண்டு, திருப்பதிகத்தின் உண்மை பூமியிலுள்ளோருடைய கண்டத்திலும் யாழிலும் இசைநூலிற் கூறப்பட்ட இசை முயற்சிகளினால் அடங்காமையைக் காட்டும் பொருட்டு, "மாதர் மடப்பிடி" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். திருநீலகண்டப் பெரும்பாணர் அத்திருப்பதிக இசையைத் தம்முடைய யாழ் நரம்பிலே முன்போல இட்டு வாசிக்கப்புக; அது அதனிடத்தே அடங்கிற்றில்லை அப்பொழுது திருநீலகண்ட பெரும்பாணர் அதனை விட்டு அச்சங்கொண்டு பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து, "சுவாமி அருளிச் செய்த திருப்பதிகத்தினிசையை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப்பண்ணியது. இந்த யாழன்றோ" என்று அதனை உடைக்கும்படி ஓங்கினார். உடனே பிள்ளையார் தடுத்தருளி, "ஐயரே நீர்! இந்த யாழைத் தாரும்" என்று வாங்கிக்கொண்டு, "ஐயரே நீர்! இந்த யாழை முரிப்பது என்னை! பரமசிவனும் பார்வதியம்மையாரும் அருளிச் செய்த திருவருளின் பெருமையெல்லாம் இந்தக் கருவியில் அளவுபடுமா! மனசினாலும் அளவுபடாத இசைப்பெருமை செய்கையினால் அளவுபடுமோ! அளவுபடாதே. நீர் இந்த யாழைக்கொண்டே சுவாமியுடைய திருப்பதிக இசையை இயன்ற மட்டும் இதில் அமைத்து வாசியும்" என்று சொல்லி, திருநீலகண்டப் பெரும்பாணர் கையிலே யாழைக் கொடுத்தருளினார். பெரும்பாணர் பிள்ளையாரைத் தொழுது, யாழை வாங்கி, சிரமேற்கொண்டார்.

சிலநாட் சென்றபின், பிள்ளையார் தருமபுரத்தை அகன்று, திருநள்ளாற்றை அடைந்து திருக்கோயிலிற் பிரவேசித்து சுவாமியை வணங்கி"போகமார்த்த பூண் முலையாள்" என்னும் திருப்பதிகத்தை யாழ்நரம்பிலே இசை கூடும்படி பாடிமுடித்து, புறத்தணைத்து, பெரும்பாணரை நோக்கி, யாழில் இட்டு வாசிக்கும்படி பணித்து, திருத்தாளங் கொண்டு பாடினார். பெரும்பாணர் அத்திருப்பதிக இசையை யாழில் இட்டு வாசித்தார். அதுகேட்டுப் பிள்ளையார் திருவுள மகிழ்ந்தருளினார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# கண்ணபுரம் ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் 09ஆம் திகதி

கிழக்கிலங்கை, மட்டுமாநகர், 35ஆம் கிராமம், கண்ணபுரம், அருள்மிகு ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய பிரதிஷ்ட பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2024.06.09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 2024.06.07ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகும். எதிர்வரும் 2024.06.08ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய் காப்பு சார்த்தும் நிகழ்வு இடம்பெறும்.

2024.05.07ஆம் திகதி காலை 6 மணிக்கு கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, பிரம்மன் அனுஞ்ஞை, திரவிய சுத்தி, குபேர லக்ஸ்மி ஹோமம், தானிய வாசகம், ஜலாதிவாசம், சுவாமிகளுக்கு கண் திறத்தல், சாந்தி ஹோமம், சமிதா ஹோமம், கிஷா ஹோமம், மூர்த்து ஹோமம், ரஷா ஹோமம், கோமாதா பூஜை, கங்கை பூஜை, சூர்யாக்கினி சங்கிரணம், பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு விநாயகர் வழிபாடு, கிராம சாந்தி, பிரவேச பலி, வாஸ்து சாந்தி, மூர்த்தி ஹோமம், சமிதா ஹோமம், கிஷா ஹோமம், மூர்த்தி ஹோமம், ரஷா ஹோமம், கோமாதா பூஜை, கங்கை பூஜை, சூர்யாக்கினி சங்கிரணம், பிரசாதம் வழங்குதல் என்பன இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு விநாயகர் வழிபாடு, கிராம சாந்தி, பிரவேச பலி, வாஸ்து சாந்தி, புண்ணியாவாசனம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், குருமார்களுக்கு காப்புக் கட்டுதல், தர்மத்துவஜம், கடஸ்தாபனம், யாகபூஜை, பஞ்ச அக்கினி, விமர்சனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் சாத்துதல் பிரசாதம் வழங்குதல் என்பன இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு வேத சிவாகம வித்யா பூசணம், கிரியா கிரம ஜோதி, சிவாகம பிரதிஷ்டா கிரியா ஜோதி, அச்சல் ஆதீன குருமணி சிவஸ்ரீ சிதம்பர கிருஸ்ண மூர்த்தி குருக்கள், நாவிதன்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு கிரியாமணி



சிவஸ்ரீ தர்ம சுதந்திரன் குருக்கள் ஆகியோர் கும்பாபிஷேக கிரியைகளை மேற்கொள்வார்கள்.

சிவஸ்ரீ சந்திரகுமார் குருக்கள், சிவஸ்ரீ சுதர்சனக் குருக்கள், சிவஸ்ரீ பிணைவக் குருக்கள், சிவஸ்ரீ தா. நேசராச குருக்கள் ஆகியோரும் இந்த கிரியைகளை மேற்கொள்வார்கள்.

யாழ் அராலியூர் நேசன் குழுவினர் கட்டடக் கலைகளை மேற்கொண்டுள்ளதுடன் பனங்காடு, அக்கரைப்பற்று மகேஷ்வரன் சிற்பக் கலை வேலைகளை மேற்கொண்டுள்ளார். மட்டக்களப்பு, புதுநகர் அமுதராஜ் வர்ணக்கலை வேலைகளை செய்துள்ளார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரண்டு நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். பன்னிரண்டாவது நாளான 2024.06. 20ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறும். 2024.06. 20ஆம் திகதி காலை 7 மணிக்கு பாற்குட பவனி நடைபெறும். அன்று 35ஆம் கிராமம் ஸ்ரீ நாராயண ஆலயத்திலிருந்து பாற்குட பவனி ஆரம்பமாகும். ஆலயத் தலைவர் சந்திரசேகரம் ரவிச்சந்திரன், செயலாளர் கணபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன், பொருளாளர் ஐயாத்துரை சுகுமார் ஆகியோர் இதற்கான திருப்பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். தனரஞ்சன் குழுவினர் நாதஸ்வர மேள வாத்திய இசையை வழங்கவுள்ளார்கள்.

**2024.06.08ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய் காப்பு**

தனுசன் தர்சனா, சேதுராமன் கெங்கேஸ்வரி, பிரபா கிஷோக்குமார், து. கணபதிப் பிள்ளை, சுகுமார் தனலெட்சுமி, விஜயகுமார் வசந்தி, சி.சச்சிதானந்தம், தியாகராசா சந்திரா, சிறிதரன், பற்மசதன் ஆகியோர் மண்டலாபிஷேகத்திற்கான உபயங்களை செய்துள்ளார்கள்.



கலாபூஷணம்
இராசையா கிருஷ்ணப்பிள்ளை

# சைவ மஞ்சரி

# நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்



1823ம் வருடத்தின் பின் ஏற்பட்ட மலையக மக்களின் புலம்பெயர்வு காலத்திலேயே நாவலப்பிட்டியில் முத்துமாரியம்மன் ஆலயம் அமைக்கப்பெற்றிருந்தமைக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

குயின்ஸ்பெரி தோட்டத்தில் நவநாத சித்தர், நாவலப்பிட்டிக்கு அருகாமையிலுள்ள குயில்வத்தை தோட்டத்தில் நாகநாத சித்தர் ஆகியோரது அபரீத செயற்பாடுகள் கவனிக்கத்தக்கது. 1870 காலப்பகுதியில் கோயில் அமையப்பெற்றுள்ள இடத்தில் கிழக்கு முகம் பார்த்த நிலையில் கோயில் அமையப்பெற்றுள்ளது. கொரக்காவத்தை தோட்டத்தின் தொழிலாளர்களும் நகர வர்த்தகர்களும் இணைந்து அமைக்கப்பட்ட அவ் ஆலயத்திற்கு முன்னால் தற்போது காணப்படும் வைத்தியசாலையும் அமையப்பெற்றுள்ளது. இவ் ஆலயத்தில் காணப்படும் குஸ்டரோக நோயினால் அவதியுற்ற நோயாளி ஒருவரை இரவு வேளையில் பயணித்த நவநாதர் சித்தர் அவரை கண்டு வைத்தியசாலைக்கு முன்பு இருக்கும் அம்மனின் அருளால் அது குணமாகும். என்னுடன் வாருங்கள் என குயின்ஸ்பெரிக்கு அழைத்து சென்றுள்ளார். அவரின் பேச்சைக் கேட்டு சென்ற குறிப்பிட்ட நோயாளிக்கு குயின்பெரி செல்லும் முன்பே அவரது நோய் குணமாகியது தொடர்பில் செவிவழியாக கதைகள் உள்ளன.

தொள்ளாயிரம் ஆண்டின் முற்பகுதியில் சன்னியாசி ஒருவர் நாவலப்பிட்டிக்கு வருகை தந்துள்ளார். இவ் ஆலயத்தின் செயற்பாடுகளில் பொறுப்பாக இருந்த அப்பாவு ஆச்சாரி, வேலு ஆச்சாரி ஆகியோரை சந்தித்து தான் சமயபுரயத்தில் இருந்து வருவதாக கூறியுள்ளார். இவ் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டதுடன் சமயபுரத்தில் இருந்து கொண்டு வந்த அம்மனின் திருமுகத்தை இவ் ஆலயத்தில் வைத்து கொடுத்துவிட்டு தான் சுகவீனமடைந்திருப்பதால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற போவதாக கூறிவிட்டு சென்றுள்ளார். விக்கிரகத்திற்குறிய பூசைகளை உரியவாறு செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கமைய வேலு ஆச்சாரியினுடைய வீட்டு பூஜை அறையில் வைத்து பூஜித்துள்ளார்கள். பின்னர் ஆச்சாரிகள் இருவரும் குறித்த சன்னியாசியைத் தேடி வைத்தியசாலைக்குள் சென்ற போது அவ்வாறு ஒருவர் வரவில்லை என வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளதாக அறியக்கிடைக்கிறது. மாறாக சிகிச்சைப் பெற்று மீளவும் வருகைத்தந்து வேலு ஆசாரியின் வீட்டில் அச் சிலை பூஜிக்கப்பட்ட முறையை அவதானித்து மகிழ்ச்சியுற்று ஆலயத்தில் வைத்து பூஜை செய்யுமாறு ஆலோசனை வழங்கிச் சென்றதாகவும் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும் சமயபுர அம்பாளின் அனுகிரகத்தால் அம்மனே இயலபாக அருள் பாலிக்க வந்துள்ளதான நம்பிக்கை இப் பிரதேசத்தில் நிலவுகிறது. குறித்த அமமனின் தலை உருவம் இன்னமும் இவ் ஆலயத்தில் பூஜிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். அதன் பின்னர் ஆச்சாரிகள் இருவர் உட்பட பிரமுகர்கள் இணைந்து அவ் ஆலயத்தை நிரந்தர கட்டிடமாக அமைக்க முற்பட்டுள்ளார்கள்.

கோப்பி பயிரச்செய்கை அதன் பின்னர் கோப்பி பயிர்ச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்திய நோய் நிலைமை, பிளேக் நோய் பரவல் போன்ற காரணங்களோடு நாவலப்பிட்டியில் இந்திய வமசாவளி தமிழர்கள் தொடர்பு படுகிறார்கள். நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் அமைந்துள்ள கொத்மலை வீதியிலுள்ள கடைகள், வீடுகள் கொடூர பிளேக் நோயினால் பாதிக்கப்பட்ட காரணத்தினால் அப் பகுதியில் வசித்தவர்கள் அப் பகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டவர்கள் தற்போது ஐ.டீ.எச் பிரதேசத்தில் வைத்தே பராமரிக்கப்பட்டார்கள். இப் பகுதிக்கு அக் காலத்தில் வைக்கப்பட்ட பெயரே இது வரையில் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. அப் பகுதியில் அருகிலேயே அக் காலத்திலும் பொது மையவாடியும் அமைக்கப்படடிருந்தமை குறிப்பிடத்தக்கது. கொத்மலை வீதியில் அப்புறப்படுத்த வேண்டிய பட்டியலில் கோயில் கட்டிடமும் உள்வாங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பணியில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் தயங்கினார்கள். கோயிலையும் உடைக்க வேண்டும் என்ற ஆங்கிலேயே பொது சுகாதார ஊழியரும் பணிக்கவே அருகில் இருந்தவரகள் உடைக்க வேண்டாம் என மன்றாடியுள்ளார்கள். வேலையாட்கள் ஒதுங்கிய நிலையில அப் பணியை பொது சுகாதார உத்தியோகத்தரே செய்வதற்கு துணிந்துள்ளார். அவரினால் கதவு உடைக்கப்பட்ட போது பார்த்தவர்கள் அதிசயிக்கும் வகையில் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இரண்டு மாதமளவில் மூடி வைக்கப்பட்டிருந்த கருவறையில் காலையில் பூ வைத்து அலங்கரித்தது போன்றும் இரண்டு மாதத்திற்கு முன்னர் ஏற்றி வைத்த விளக்கும் எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்து அனைவரும் வியந்துள்ளார்கள். குறித்த பொது சுகாதார உத்தியோகத்தரும் கோயிலை உடைக்க வேண்டாம் என கூறி வழிபட்டுள்ளார்.

அருணாசலம் லெட்சுமணன்

## நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய கும்பாபிஷேகம்

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக கிரியைகள் இன்று (03.06.24) ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது. மஹா கும்பாபிஷேகத்தன்று காலை 9.00 மணி முதல் பிரதிஸ்டாசார்ய சாதக போதக வர்ணம் விக்னேஸ்வர பூஜை பிரதிஷ்டா சங்கல்பம், பிராமண, தேவ அனுக்ஞை, தனபூஜை, திரவிய சுத்தி, திரவிய விபாகம் முகூர்த்த படலம், கோ பூஜை என்பன நடைபெறவுள்ளன. 09.06.24 காலை 7.00 மணி முதல் விநாயகர் வழிபாடு, யாக பூஜை, ஹோமம், மஹா பூர்ணாகுதி விசேட தீபாராதனை வேதஸ்தோத்திர நிருத்த கீத திருமுறை பாராயணம் அந்தர் பலி, பகிர்பலி, யாத்ரா தானம் என்பன நடைபெவுள்ளன. காலை10.45 மணிக்கு ராஜகோபுரம் மற்றும் விமானங்களின் கும்பாபிஷேகம் சிம்ம பூஜை, வேத கோஷ, சங்கநாத மங்கள பேரீ வாத்தியங்கள் முழங்க அரேரஹார கோஷத்துடன் அடியார்கள் புடைசூழ பிரதான கும்பங்கள் வீதியுலா வரவுள்ளது. அன்று காலை 11.30 மணிக்கு அன்னை ஸ்ரீ முத்துமாரியம்பாளுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் மஹா கும்பாபிஷேகம். அன்னைக்கு மாங்கல்ய தாரணம், மஹா ஹவிர், நிவேதனம் மங்கள தச தரிசனம் எஜமான் அபிஷேகம், மஹாபிஷேகம், விஷேட பூஜை, மகேஸ்வர பூஜை(அன்னதானம்) ஆசியுரை ஆசார்ய சம்பாஷணை என்பன இடம்பெறும்.

# அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20075) தீவினைகள் எத்தனை வகைப்படும்?**
அறநெறி
மூன்று

**20076) தீவினைகள் மூன்றையும் தருக.**
வந்தவை, வந்திருப்பவை, வரவிருப்பவை.

**20077) இவற்றைத் தொலைக்கக்கூடியது எது?** நாமஜபம்.

**20078) இறைவனைப் பூஜிப்பதற்கு எந்த எந்தப் பூக்களைப் பயன்படுத்தக்கூடாது?**
வாசனை இல்லாத பூக்களையும் மகரந்தமில்லாத பூக்களையும் பூஜைக்கு உபயோகிக்கும் வழக்கமில்லை.

**20079) எந்த எந்த நேரங்களில் கோயிலுக்குப் போகக்கூடாது?**
கோயிலில் சந்நிதி திறந்திருக்கும் நேரங்கள் அனைத்தும் கோயிலுக்குப் போவதற்கு உரிய நேரங்கள்தான்.

**20080) பூஜையின்போது மணி அடிக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?**
நாத தத்துவத்தை நினைவுபடுத்தும் பொருட்டு பூஜையின்போது மணி அடிக்கப்படுகிறது. இது முதலாவது காரணம்.
உலகியல் வேலைகளில் மூழ்கியிருக்கும் மக்கள் மணியோசையைக் கேட்டுத் தெய்வ சிந்தனையில் ஈடுபட வேண்டும். இது இரண்டாவது காரணம்.

**20081) முக்கியமாகக் கோயில்களில், பல விதமான தீபங்களை சுவாமிக்கு ஆராதனையின் போது காட்டுகிறார்கள். அதன் கருத்து என்ன?**
தீபாராதனையில் வரிசையாக அலங்கார தீபம், ஐந்து தீபம், மூன்று தீபம், ஒரு தீபம், முடிவில் கர்ப்பூர தீபம் என்று தீபங்களைக் காட்டும் வழக்கம் இருந்துவருகிறது. பலவாகக் காணும் உலகம், ஐம்பூதங்களில் ஒடுங்கி, அது முக்குணங்களில் ஒதுங்கி, அதுவும் ஒன்றுபட்டு, முடிவில் திரியின் கரியான அகங்காரமும் அழிந்து, கர்ப்பூரம் போல் நிர்க்குணமான பரம்பொருளில் மறைகிறது என்பது கருத்து.

**20082) மனித வாழ்க்கையின் இலட்சியம் என்ன?**
மறைமுகமாகச் சொன்னாலும், வெளி ப்படையாகச் சொன்னாலும், சுருக்கமாகச் சொன்னாலும், விளக்கமாகச் சொன்னாலும், நேரடியாகச் சொன்னாலும், சுற்றி வளைத்து சொன்னாலும் மனித வாழ்க்கையின் இலட் சியம் ஆத்மஞானம் பெறுவதும், உலகிற்கு நன்மை செய்வதுமே ஆகும்.

**20083) வரப்போகும் துன்பத்தை எதனால் நீக்கிக்கொள்ள முடியும்?**
போதிய அளவு மேற்கொள்ளப்படும் ஜபம், தியானம் போன்ற தவ சாதனைகளினால் விலக்கிக்கொண்டுவிடலாம்.

**20084) வரப்போகும் துன்பத்தை வேறு எதனால் நீக்கிக்கொள்ள முடியும்?** சில பரிகாரங்கள், தான தர்மங்கள் போன்றவற்றாலும் துன்பங்களை நீக்கிக் கொள்ள முடியும்.

**20085) கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தபிறகு, அங்கேயே சிறிது நேரம் உட்கார்ந்து வர வேண்டும் என்ற நியதி இருக்கிறதா?**
கோயிலுக்குச் சென்று தெய்வத்தை வழிபட்ட பிறகும் தெய்வத்தைப் பற்றிய சிந்தனை நம் உள்ளத்தில் தொடர வேண்டும். கோயிலில் தெய்வத்தைத் தரிசித்த பிறகு அங்கு அமைதியாகச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தால், தெய்வம் நமக்குக் கூறுவது என்ன என்று விளங்கும்.
நாம் தெய்வத்தை வழிபட்டால் மட்டும் போதாது. தெய்வத்தின் பதிலுக்கும் நாம் அமைதியாகச் செவிசாய்க்க வேண்டும் என்பது இந்த வழக்கத்தின் நோக்கமாகும்.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 89



செல்வ செழிப்புடன் வாழ விரும்புபவர்கள், கடவுளின் கிருபையை பெற வேண்டும். அந்த கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார். அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப் பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.

தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப் படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறிவிட்டால் அந்த கோட்பாடு அர்த்த மற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும். கடவுளின் ஆதரவு பொருந்திய போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது.ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடி பணியும்.

மனவலிமை இழப்பது அல்லது தாழ்வு மனப்பான்மை கொள்வது என்பது மனிதனுக்கு மனிதனே தேடிக் கொள்ளும் ஒரு சாபக் கேடாகும். சரீர பலமிருந்தும், வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் உள்ள போதும். தாழ்வு மனப்பான்மை கொண்டவன், மனவலிமை இல்லாதவன் வாழ்வில் வெற்றி பெற இயலாது. உடல் வலிமை இல்லாத போதும், மன வலிமை உள்ளவன் வெற்றி பெறுவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொள்வான்.

ஏதோ சில காரணங்களினால், சில சூழ்நிலைகளில் ஒருவன் மனவலிமை இழந்து விட்டான் என்றால், அவன் அந்த சாபக்கேட்டிலிருந்து வெளிவர முடியாது என்றில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. சூழ்நிலை காரணமாக மனவலிமை இழந்தவன், அதிலிருந்து மெல்ல மெல் விடுபட முயற்சிக்க வேண்டும். அதற்காக அவன் தன் உடல் சக்தி முழுமையையும் ஈடுபடுத்தி தன் ஆண்மையை நிலை நாட்ட வேண்டும். தோல்வியடைந்ததும் அவநம்பிக்கை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். நிதானமாக முயற்சிக்கும் போது மனவலிமையும், நற்தகுதிகளும் நிச்சயம் உருவாகும்.

மனிதனுக்கு மற்ற வலிமைகளை விடவும் மனவலிமையே போற்றுவதற்குரியதாகும். மனவலிமை மிகுந்தவனுக்கு சமுதாய ரீதியாக, பொருளாதார ரீதியாக, ஆன்மீக ரீதியாக அனைத்து துறைகளிலும் வெற்றி கிடைப்பது உறுதி.

எனவே மன வலிமையை பெருக்கிக் கொள்ளும் முயற்சியில ஈடுபடவும்.



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்துசமய கலாசார அலுவல்கள் கற்கைகள் நிறுவகமும் இணைந்து நடாத்திய திருமுறையினை முறைப்படி பாடும் ஆற்றலை வலுப்படுத்தும் பண்ணிசை பயிற்சிநெறியை பூர்த்தி செய்து திறமை சித்திய டைந்த ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிமணிய சுவாமி ஆலய அறநெறி பாடசாலை ஆசிரியை திருமதி செல்லத்துரை சந்திரதேவிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# கலஹா குரூப் தொழிற்சாலை பிரிவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கண்டி மாவட்டம் கலஹா குரூப் தொழிற்சாலை பிரிவு ஸ்ரீ முத்துமாரி அம்மன், ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவ குண்ட பக்ஷ, பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம். 05.06.2024 புதன்கிழமை கிரியாரம்பத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 07.06.2024 முதல் 08.06.2024 ஆம் திகதி வரை எண்ணெய் காப்பு சாத்துதல் நடைபெறும். 09.06.2024 காலை 6,30மணிக்கு விநாயகர் வழிபாடு புண்ணியாகவாசனம், துவஜ பூஜை யாகசாலப்பிரவேசம், யாக பூஜை மகா பூர்ணாகுதி தீபாராதனை சதுர் வேத சமர்ப்பணம் ராக தான கீத நர்த்தன ஸ்தோத்திர திராவிட பாராயணம் ஆசிர்வாதம் அந்தர்பலி பகிர்பலி ஆகியன இடம்பெறும். காலை 8.45 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள கடகலக்ன சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

# இன்றைய பலன்கள் (03.06.2024)

**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**



**மேஷம் :** சுப செலவுகள் அதிகரிக்கும். பணப்பற்றாக் குறை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**ரிஷபம் :** கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர் உடல் நலனில் கவனம் தேவை. வாரிசுகளின் வளர்ச்சி மகிழ்ச்சி தரும்.

**மிதுனம் :** குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. கடன் சுமை குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம் :** பெண்களுக்கு குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும்.

**சிம்மம் :** பெண்களுக்கு மனக்கலக்கம் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். ஆதாயம் குறைவாகவும் அலைச்சல் கூடுதலாகவும் இருக்கும்.

**கன்னி :** பெண்களுக்கு அதிக விரயம் உண்டு. நிம்மதி குறையும். தொழிலைப் பொறுத்தவரை யாரை நம்பியும் எதுவும் செய்ய இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**துலாம் :** குடும்ப விஷயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம் :** உங்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை கண்டறிந்து ஒதுக்குவீர்கள்.

**தனுசு :** யாரேனும் உங்களுடைய தவறுகளை சுட்டிக் காட்டினால் மாற்றிக் கொள்வது நல்லது. தவறு செய்யாமலேயே நீங்கள் தவறு செய்தாக சிலர் வீண் பழி சுமத்துவார்கள்.

**மகரம் :** தந்தையாருக்கு சின்ன அறுவை சிகிச்சை, மூச்சுத் திணறல், வாயுக் கோளாறால் நெஞ்சு வலி வந்துப் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை இருந்துக் கொண்டேயிருக்கும்.

**கும்பம் :** விட்டுக் கொடுத்து போவது நல்லது. அனுமதி பெறாமல் வீடு கட்டத் தொடங்க வேண்டாம். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். மனத்தாபங்களும் வந்து நீங்கும்.

**மீனம் :** கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். சிலர் தனிக் குடித்தனம் செல்வீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு நல்ல விதத்தில் முடியும்.









இரத்தினபுரியில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக நேற்று இரத்தினபுரி நகரத்தின் சில பகுதிகள் உட்பட இரத்தினபுரியின் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கின.
**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் 25 பேராளர் மாநாடு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது, இதன்போது தெரிவு செய்யப்பட்ட புதிய நிருவாக சபையினரான தலைவர் பி.நிசாந்த வண்ணியராச்சி, பிரதித் தலைவராக எம்.கே.ஜி.ரோஹன விஜயரட்ன, நிதிச்செயலாளர் எம்.சுதாகர், உபத்தலைவர்களான எஸ்.இளையராஜா,/கே.ஏ.நிசாந்த மற்றும் பொதுச்செயலாளர் ரொபட் பிரான்சீஸ் ஆகியோர் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு கண்டி கதிர்காம ஆலயத்திலும், கிறிஸ்து ஆலயத்திலும் பூஜை வழிப்பாடுகளில் கலந்து கொண்டனர். நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

## இயற்கை அனர்த்தங்கள்:...

சில தினங்களுக்கு தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் தென் மேற்கு பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்யும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதற்கிணங்க மேல் மாகாணம், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி. மாத்தறை மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங்களிலும் 150 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி காணப்படும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.அந்த வகையில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள சிவப்பு எச்சரிக்கை மேலும் 24 மணித்தியாலங்களுக்கு அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்று பிற்பகல் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனம் புதிய மண் சரிவு எச்சரிக்கை வெளியிட்டுள்ளது .அதன்படி கொழும்பு, இரத்தினபுரி, நுவரெலியா, மாத்தறை குருநாகல், கேகாலை , கண்டி, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, காலி மாவட்டங்களுக்கு அந்த மண் சரிவு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் 20 பிரதேசங்களுக்கு மூன்றாம் மட்ட சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## சல்மான்கானை...

மூலம் இலங்கைக்கு தப்பிச் செல்ல இவர்கள் திட்டம் தீட்டியிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தற்போது சிறையில் இருக்கும் கிரிமினல் கும்பல் தலைவரான லாரன்ஸ் பிஷ்னோய், இந்தக் கொலைக்கான அறிவுரைகளை வழங்கியுள்ளார். இவரது சகோதரர் அன்மோல் பிஷ்னோய் மற்றும் அவரது உதவியாளர் கோல்டி ப்ரார் ஆகியோர் இத்தாக்குதலை திட்டமிட்டுள்ளனர் .

இக்கொலைக்கு துப்பாக்கிகளை வழங்கியவரின் தகவல்களும் கிடைத்துள்ளன. இக்கொலையை புரிவதற்கு கனடாவிலிருந்து இவர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

மும்பை நகருக்கு அருகிலுள்ள பன்வெல் என்ற இடத்தில் சல்மான் கானின் கார் மீது தாக்குதல் நடத்துவதே இவர்களின் திட்டம் .ஏ.கே 47 மற்றும் எம். 16 ரக துப்பாக்கிகள் இதற்காக வழங்கப்பட்டுள்ளன.

ராஜஸ்தான் மாநிலத்தில் 1998 இல், படப்பிடிப் புக்காகச் சென்றிருந்த சல்மான்கான் அங்கு

அபூர்வமான மான் இனமான 'பிளக்பக்'

மானை வேட்டையாடிக் கொன்றிருந்தார். இந்த மானினம்,ஆன்மீகத் தலைவரான குரு பகவான் ஜம்பேஷ்வரின் ஆவி என்று இந்த கும்பல் குழுவினர் நம்புகின்றனர்.இதற்குப் பழிவாங்கவே சல்மானைக் கொலை செய்ய இவர்கள் முயன்று வருகின்றனர்.

## கைதானோரின் வங்கி...

புலனாய்வுத்துறை நீதிமன்றில் சமர்ப்பித்து அனுமதி கோரியிருந்தது.

இணையத் தளம் மூலம் பண பரிமாற்றங்கள் இடம் பெற்றுள்ளனவா? என்பதை ஆராய்ந்து அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அது தொடர்பான சிசிரிவி காட்சிகளை பெறவும் கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களை வழிநடத்தியவராக கருதப்படும் ஒஸ்மான் ஜெராட் கொழும்பில் கடந்த (31) கைதானமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கைதானவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர் என, தெமட்டகொடையில் கைதானவர் 46 வயதான ஜெராட் புஷ்பராஜா ஒஸ்மான் ஜெராட் என,பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## சீரற்ற காலநிலையால்...

சீர் செய்து போக்குவரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் பணிப்புரையின் கீழ்,இதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி நிலைமைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதில் ரயில்வே திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை எதிர்கொள்ளும் அசௌகரியங்களை நிவர்த்திக்க அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஒத்துழைப்புக்கள் பெறப்படவுள்ளன.

ஜனாதிபதியின் நேரடி வழிகாட்டலின் கீழ், முப்படையினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பை பெறுவதற்கும் ஆலோசிக்கப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொது போக்குவரத்தை முறையாக முன்னெடுக்கத் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா க அமைச்சர் பந்துலகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அனைத்து அனர்த்த நிலைமைகளையும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு ரயில்வே திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அந்தந்த மாகாணங்களின் கீழ்மட்ட அதிகாரிகளுக்கு, நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாகாண பொறியியலாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் தீர்மானங்களை மேற்கொண்டு,பொதுப் போக்குவரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரஞ்சித்மத்தும...

எவ்வாறாயினும், கட்சி அங்கத்துவம் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளை தொடரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில், நேற்றுக் காலை (02) கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இந்த செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திலே இம்முடிவு எடுக்கப்பட்டது.

## டெங்கு நுளம்பு உருவாகும்...

மீளாய்வு நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேற்படி டெங்கு ஒழிப்பு வாரத்தில் 93, 974 இடங்கள் விசேட கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. அந்த இடங்களில் நுளம்புகள் உருவாகும் 28,310 இடங்கள் தொடர்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நுளம்பு முட்டைகள் காணப்பட்ட 4890 இடங்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், அந்த இடங்கள் உடனடியாகவே சுத்திகரிக்கப்பட்டு வழமை நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த வகையில் நுளம்புகள் உருவாகும் இடங்கள் இனங்கானப்பட்டு, அதனுடன் சம்பந்தப்பட்ட 981 நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழக அனுமதி...

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள கல்வியமைச்சர்;

இம்முறை கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், முதல் 10 மாணவர்களில் ஐந்து பேர், தென் மாகாணத்திலிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஏனைய ஐந்து பேர் நாடளாவிய ரீதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒப்பீட்டளவில் இது சிறந்த முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.வழமையாக பெறுபேறுகளின் அடிப்படையில் தென் மாகாணத்திலேயே முதலாவது மாணவர் தெரிவு செய்யப்படுவார். இம்முறை இது மேலும் முன்னேற்றமடைந்துள்ளது.

இதற்காக நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்முறை பரீட்சை பெறுபேறுகள் வெளியான தினத்தில், ஆசிரியர் தொழிற்சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டது.

எனினும் அப்போராட்டம் தோல்வியடைந்துள்ளது. 75 வீதமான பாடசாலைகள் வழமை போன்று இயங்கின.நாம் திட்டமிட்டபடி அனைத்து பாடசாலைகளிலும் தவணைப் பரீட்சைகளையும் நடத்த நடவடிக்கை எடுத்தோம். கல்வியமைச்சர் என்ற வகையில் நான், அனைத்து ஆசிரியர் தொழிற்சங்கங்களிடமும் கேட்டுக் கொள்வது; பெரியவர்களாகிய நமது பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு பெற்றுக் கொள்வோம். அதற்காக மாணவர்களை பலிக்கடாக்காளாக்க வேண்டாம்.

அந்த வகையில் இம்முறை பெறுபேறுகள் தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

## பஸ்கள் மோதி...

இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸூமே,விபத்தில் சிக்கின. இவ்விபத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியின் நடத்துநரே உயிரிழந்தார். காயமடைந்தோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

பாணந்துறை பிரதான வீதியிலிருந்து பஸ் நிலையத்தை நோக்கி வீதிக்கு திரும்ப முற்பட்ட போது, கொழும்பிலிருந்து பாணந்துறையை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸுடன் மோதியே இவ்விபத்து நிகழ்ந்தது.

## ஹெலிகொப்டர்களில்...

உடுகம வைத்தியசாலைக்கு பயணிகள் மாற்றப்பட்டனர்.விஷேட ஹெலிகொப்டரில் நோயாளர்களை அனுப்பியதாக காலி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அமில சந்திரசிறி தெரிவித்தார்.

இதேவேளை, கடும் மழை காரணமாக ஜின்கங்கை பெருக்கெடுத்து, தவலம பிரதேசத்தில் இருவர் காணாமல் போயுள்ளதாக காலி மாவட்ட பதில் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## திறைசேரி...

91 நாட்கள் காலம் நிறைவடையும் 40 ஆயிரம் மில்லியன் ரூபா,

182 நாட்கள் காலம் நிறைவடையும் 75,000 மில்லியன் ரூபா, 364 நாட்கள் காலம் நிறைவடையும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மில்லியன் ரூபா ஆகியவை உண்டியல்களே இவ்வாறு ஏலத்தில் விடப்படவுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## நிலவும் சீரற்ற காலநிலை...

அமைச்சர் அரவிந்த குமார் தெரிவித்தார்.

பாடசாலைகளை திறப்பதா அல்லது மூடுவதா என்ற தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரம் அந்தந்த பகுதி மாகாண கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையி லேயே,சகல பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

## மக்களின் பாதுகாப்புக் கருதி...

தெரிவித்துள்ளார். நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.இதனால், பொது மக்களின் பாதுகாப்புக் கருதி,பல பிரதேசங்களின் மின்சார இணைப்புக்கள் தற்காலிகமாக துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

Dialog Schools Rugby League 2024

# 84 அணிகள் போட்டியிடும் மாபெரும் போட்டி!!

## ஜுன் 14 ஆம் திகதி ஆரம்பம்

இளம் விளையாட்டுத் திறமைகளை வளர்ப்பதற்கும் எதிர்கால சாம்பியன்களை வளர்ப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் இலங்கையின் முதன்மை இணைப்பு வழங்குனரான Dialog Axiata PLC, Dialog Schools Rugby League 2024 க்கு மீண்டும் அனுசரணை வழங்குகின்றது.

84 பாடசாலை அணிகள் மூன்று பிரிவுகளில் போட்டியிட்டு, புதிய சாதனையை உருவாக்கவுள்ளன. கடந்த ஆண்டுகளில் பாடசாலை ரக்பிக்கு ஆதரவளிப்பதில் டயலொக் மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாகப் போட்டியிடும் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இப்போட்டிகள் ஜுன் 14 ஆம் திகதி ஹெவ்லொக் மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

நடப்பு சம்பியனான புனித பீட்டர்ஸ் கல்லூரி, கடந்த ஆண்டு இரண்டாம் இடத்தைப் பெற்ற ரோயல் கல்லூரி மற்றும் இசிபதன கல்லூரிகள், புனித ஜோசப் கல்லூரி, திரித்துவக் கல்லூரி, வெஸ்லி கல்லூரி, வித்யார்த்த கல்லூரி, பரிதோமாவின் கல்லூரி, புனித அந்தோனியார் கல்லூரி, தர்மராஜா கல்லூரி, கிங்ஸ்வுட் கல்லூரி, டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, சாஹிரா கல்லூரி, கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி, கண்டி சுமங்கலா கல்லூரி போன்ற 84 அணிகள் இப்போட்டியில் மோதுகின்றன.













கொழும்பு 13 கலாநிதி பதீயுடீன் மஹ்மூத் கல்லூரியில் பாடசாலை அதிபர், பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க தரம் 5 மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சுமார் 300 மாணவர்கள் பங்குபற்றிய கருத்தரங்கை சபான் ஆசிரியர் வழிநடத்தினார். இந் நிகழ்வை பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

படம்: எம்.நசார்.


பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

# இலங்கைப் பிரஜைகள் அனைவருக்குமான தயவான அறிவித்தல்

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது சில விண்ணப்பதாரிகள் சேதமடைந்த, உருக்குலைந்த அல்லது உருக்குலைக்கப்பட்ட அல்லது தெளிவற்ற தேசிய அடையாள அட்டைகளை சமர்ப்பிப்பதனால் சரியாக ஆட்களை அடையாளம் காண முடியாத காரணத்தினால் எமது சேவைகளை துரிதமாக சரியான முறையில் வழங்க முடியாதுள்ளது. அவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக **1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவுசெய்யும் சட்டத்திற்கு திருத்தமாக கொண்டுவரப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க சட்டத்தின் 18 ஆம் பிரிவில்** குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் குறித்து இலங்கைப் பிரஜைகள் அனைவரும் தமது தயவான கவனத்தை செலுத்துதல் வேண்டும்.

**“தேசிய அடையாள அட்டையொன்று சேதப்படுத்தப்படுமிடத்து, உருக்குலையுமிடத்து அல்லது வாசிக்க முடியாததாகவிருக்குமிடத்து அல்லது வாசிக்க முடியாததாக வருகின்ற ஆபத்துள்ளவிடத்து அல்லது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்ற தகவல் மாறியுள்ளவிடத்து, அல்லது வைத்திருப்பவரின் அபிப்பிராயத்தில் பிழையான எத்தகவலை அது கொண்டுள்ளதென அவர் அறிந்துள்ளாரோ அந்தப் பிழையான தகவலை அது கொண்டுள்ளவிடத்து, அவ்வட்டையை வைத்திருப்பவர், உடனடியாக அவ்வட்டையின் இணைப் பிரதியொன்றுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.”**

தேசிய அடையாள அட்டை மூலம் உத்தேசிக்கப்படுவது யாதெனில் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதாகும். அதற்காக தெளிவான அடையாள அட்டையொன்றை சமர்ப்பிக்க வேண்டியது தங்களது பொறுப்பாகும்.

**தங்களது தேசிய அடையாள அட்டையின் புகைப்படத்தைக் கொண்டு தங்களை அடையாளம் காணும் வகையில் தெளிவாக இருத்தல் வேண்டுமென்பதுடன் தங்களுக்கும் புகைப்படத்துக்குமிடையில் தெளிவான ஒற்றுமை காணப்படுதல் கட்டாயமாகும்.**

அதற்கிணங்க, இதன் பின்னர் கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது விண்ணப்பதாரிகள் மேற்படி விடயங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தெளிவான தேசிய அடையாள அட்டையொன்றை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**ஐ.எஸ்.எச்.ஜே. இலுக்பிட்டிய**
**குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**
**“சுஹுருபாய” ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**


# மொரட்டுவை சொய்சாபுர தொடர்மாடி கட்டட பிரச்சினையை தீர்த்து வைத்தார் ஜனகன்!

நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக மொரட்டுவை சொய்சாபுர பிரதேசத்தில் அமைந்துள்ள சீ தொகுதி தொடர்மாடி கட்டடத்தில் ஏற்பட்ட பாதிப்பினை ஐ டி எம் என் சி (IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி.வி.ஜனகன் சீர்செய்தார். தொடர்மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதி சேதம் அடைந்துள்ளது. அங்கு வசிக்கும் 64 குடும்பத்தினரும் அப்பாதிப்பினால் அவஸ்தை அடைந்து வந்தனர்.

இதனை ஐ டி எம் என் சி (IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி.வி.ஜனகனின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து நேற்று முன்தினம் களத்துக்கு விஜயம் செய்த கலாநிதி ஜனகன் சேதமடைந்த பகுதியைப் பார்வையிட்டதுடன், தொடர்மாடிக் கட்டட தொகுதியில் பல சிறார்களும் வசித்து வருகின்றர்கள் என்பதை அறிந்து கொண்டார். பாதுகாப்பற்ற நிலையில் அக்கட்டடம் உள்ளதை இனம் கண்டு அதனை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதற்காக ஒரு தொகை நிதி யையும் வழங்கினார். ஜனனம் அறக்கட்டளையின் முக்கியஸ்தர்களும், அக்குடியிருப்பில் உள்ள மக்களும் இதில் பங்கெடுத்தனர்.






ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வெள்ளி 2024.05.31

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5490 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,264,780.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 5 9 7 1 4 5

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 065 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 7 1 4 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3732 — சீட்டிழுப்பு திகதி 2024.05.31 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 79,802,562.72
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 01 09 13 24 — விசேட எழுத்து T — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 52243

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1838 — 2024.05.31 — 69964 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 434,365,778.00
ஆங்கில எழுத்து O — சுப்பர் இலக்கம் 12 — வெற்றி இலக்கங்கள் 14 18 66 69
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.05.31 — சீட்டிழுப்பு இலக்கம் 0316
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 3 3 1 3 1 3 — L7 எழுத்து W
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 30,709,916.96

ராசி சுப பலன் — திகதி 2024.05.31 — சீட்டிழுப்பு இலக்கம் 799 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,527,510.60
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 14 26 46 58 — தனயோக இலக்கம் 55192 — நாளுக்கான விதி எண் 15

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1520 — 2024.05.31 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,180,020.16
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 06 23 28 53 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 41125

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

சனி 2024.06.01

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5491 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,335,444.00
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 2 2 2 5 9 4

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 066 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 2 5 9 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3733 — சீட்டிழுப்பு திகதி 2024.06.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 79,970,471.12
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 23 59 65 76 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 13749

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1839 — 2024.06.01 — 43697 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 434,480,066.00
ஆங்கில எழுத்து Y — சுப்பர் இலக்கம் 22 — வெற்றி இலக்கங்கள் 11 16 31 69
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.06.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0317
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 8 2 5 2 2 5 — L7 எழுத்து B
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 30,709,916.96

ராசி சுப பலன் — திகதி 2024.06.01 — சீட்டிழுப்பு இலக்கம் 800 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,527,510.60
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 20 37 41 44 — தனயோக இலக்கம் 56434 — நாளுக்கான விதி எண் 25

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1521 — 2024.06.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,207,236.96
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 12 21 27 71 — விசேட எழுத்து H — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 37942

# தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்கு தினகரன் ஊடாக பெரும் பங்களிப்பு வழங்கியவர் அமரர் கலாசூரி சிவகுருநாதன்



திினகரன் நாளிதழும் வாரமஞ்சரியும் தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்கு கூடுதலான பங்களிப்புச் செய்த பத்திரிகைகளாகும். இந்த இரு பத்திரிகைகள் மூலமும் கூடுதலாக முஸ்லிம் எழுத்தாளர்கள் உருவாகுவதற்குக் காரணமாக அமைந்தவர் கலாசூரி சிவகுருநாதன் என்றால் அது தவறாகாது என்று டொக்டர் அமீர் அலி தெரிவித்தார்.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் அமரர் கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடகப் பணியை கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலியா, பேர்த் (Perth) மாநகரில் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் கடந்த முதலாம் திகதி டொக்டர் அமீர் அலி தலைமையில் வெளியிடப்பட்டது.

அந்நிகழ்வில் தலைமையுரையாற்றிய டொக்டர் அமீர் அலி மேலும் தெரிவித்ததாவது:

"எப்போதும் தமிழ், முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைத்த கலாசூரி சிவகுருநாதன், தாம் ஆசிரியராகப் பணிபுரிந்த காலப்பகுதியில் தனது பத்திரிகையை இரு சமூகங்களையும் ஒற்றுமைப்படுத்துவதற்குப் பயன்படுத்தினார் என்பதனை இப்பத்திரிகை பற்றிய ஆய்வு நடத்துபவர்கள் அறிந்து கொள்வர்.

இலங்கையில் முஸ்லிம்களுக்காக புறம்பான தேசியப் பத்திரிகை ஒன்று இல்லாத போது, சிவகுருநாதன் அதனை உணர்ந்து தினகரனை முஸ்லிம்களின் குரலாகவும் வெளிப்படுத்தினார்.

இலங்கையில் ஆகக் கூடுதலான காலம் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் பதவியை வகித்து சாதனை புரிந்த இவர், இனநல்லிணக்கத்திற்கு முன்மாதிரியாகச் செயற்பட்டார். அத்துடன் முஸ்லிம்கள் விவகாரங்கள் தொடர்பாக அடிக்கடி தினகரனில் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதப்பட்டு, முஸ்லிம்களுக்காக ஊடகங்கள் இல்லாத குறையை நிறைவு செய்தார்.

முஸ்லிம்களின் முதுசமாகக் கருதப்படும் கொழும்பு சாஹிரா கல்லூரியில் கலாசூரி சிவகுருநாதன் கல்வி பயின்றதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டிருந்தார். அதன் மூலம் தமிழ், முஸ்லிம் உறவினைப் பேணுவதற்காக தனது எழுத்துக்களைப் பயன்படுத்தினார். தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய, கலாசூரி இ.சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களைச் சொல்வதில் அவருக்கு நிகர் அவரேயாவார். அவரின் நினைவாக இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஹில்வியூ இன்டர் கல்ச்சுரல் கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்திரளான இலக்கிய ஆர்வலர்கள், பத்திரிகை நண்பர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின்



## அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூல் வெளியீட்டு விழாவில் டொக்டர் அமீர் அலி உரை



இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் பேர்த் மாநகரில் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவு தினம் கடந்த வருடம் (08.08.2023) இலங்கையில் சிறப்புற நினைவு கூறப்பட்டது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். அவரை நினைவு கூரும் வகையில் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' என்ற நூலினை எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்துள்ளார். மூத்த தமிழ் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான டொக்டர் அமீர் அலி தலைமையில் இந்நூல் வெளியீடு நடைபெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்ப வரவேற்புரையை இளம் மாணவன் கௌசிக் ராஜ் கதிர்காமன்குமார் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார். அதன் பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்தினார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவண காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றினார். தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலைநிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கினார்.

இதன் பின்னர் பேர்த் மாநகரில் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கிய புகழ் பெற்ற பாடகரும், இலக்கிய ஆர்வலருமான ராஜன் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவு பெற்றது.

# ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்க போராட்டம் நடத்திய அமெரிக்க மாணவர்கள் வரலாற்றில் இடம்பிடித்துள்ளனர்

காஸாவின் ஒடுக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாக்க மனசாட்சி தூண்டிய இளைஞர்களுக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன்.

அமெரிக்காவிலுள்ள அன்பான பல்கலைக்கழக மாணவர்களே! இச்செய்தி உங்களுடனான எங்களின் பச்சாதாபம் மற்றும் ஒற்றுமையின் வெளிப்பாடாகும். வரலாற்றின் பக்கங்களைப் புரட்டும் போது, நீங்கள் அதன் வலதுபக்கத்தில் இப்போதிருந்தே நிற்கிறீர்கள்.

நீங்கள் இப்போதே எதிர்ப்பு முன்னணியின் ஒரு பகுதியை உருவாக்கிவிட்டீர்கள். அபகரிப்பு மற்றும் ஈவு இரக்கமற்ற சியோனிச ஆட்சியை வெளிப்படையாகப் பாதுகாத்து ஆதரிக்கும் உங்கள் அரசாங்கத்தின் கொடூரமான அழுத்தத்தின் கீழும், நீங்கள் ஒரு கௌரவமான போராட்டத்தை ஆரம்பித்துள்ளீர்கள்.

## அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஆன்மீகத் தலைவர் செய்யத் அலி காமெனெய் எழுதிய கடிதம்

இன்று உங்களுக்கு இருக்கும் அதே புரிதல்களையும் உணர்வுகளையும் கொண்ட மாபெரும் எதிர்ப்பு முன்னணி, வெகு தொலைவில் உள்ள ஒரு இடத்தில் பல ஆண்டுகளாக இதே போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது.

சியோனிஸ்ட்கள் என்ற பயங்கரவாத மற்றும் ஈவு இரக்கமற்ற வலையமைப்பு பல ஆண்டுகளுக்கு முன்பு பாலஸ்தீன தேசத்தின் மீது செலுத்திய தெளிவான அடக்குமுறையை நிறுத்துவதே இப்போராட்டத்தின் குறிக்கோளாகும். அந்த சியோனிஸ்ட்கள் பலஸ்தீனத்தைக் கைப்பற்றிய பின்னர், பலஸ்தீனர்களை மிகக் கடுமையான அழுத்தங்களுக்கும் அநீதிகளுக்கும் உட்படுத்தினார்கள். இனவெறி சியோனிச ஆட்சியின் இனப்படுகொலை என்பது பல தசாப்தங்களாக நடந்து வரும் தீவிர அடக்குமுறை நடத்தையின் தொடர்ச்சியாகும்.



பலஸ்தீனம் என்பது முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் போன்றவர்கள் வாழ்ந்த மற்றும் வாழும் ஒரு தேசமாகும் மற்றும் அது நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு சுயாதீன சுதந்திர பூமியாகும். உலகப் போருக்குப் பிறகு நகரங்கள் மற்றும் கிராமங்களை ஆக்கிரமித்தார்கள். பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தார்கள் அல்லது அவர்களை அண்டை நாடுகளுக்கு விரட்டினார்கள். அவர்களின் வீடுகள், சந்தைகள், விவசாய நிலங்களை அபகரித்தார்கள், அபரிக்கப்பட்ட பலஸ்தீனத்தில் 'இஸ்ரேல்' என்ற ஒரு அரசை நிறுவினார்கள்.

சியோனிச ஆட்சி ஆரம்பத்திலிருந்தே பாதுகாப்பற்ற பலஸ்தீனர்களுக்கு எதிராக இரும்புக்கரம் கொண்ட கொள்கையைப் பயன்படுத்துவதுடன், அனைத்து தார்மீக, மனித மற்றும் மத விழுமியங்களையும் புறக்கணிப்பதுடனும், நாளாந்தம் கொடூரம், பயங்கரவாதம் மற்றும் அடக்குமுறையை தீவிரப்படுத்தியது.

காசாவில் நடக்கும் கொடூரமான குற்றங்கள் தொடர்பான அமெரிக்கவின் சில அறிக்கைகள் இன்றளவிலும் பாசாங்குத்தனமானவையாகவே இருக்கிறன. இந்த இருண்ட மற்றும் அவநம்பிக்கையான சூழலிருந்து தான் எதிர்ப்பு முன்னணி உருவானது. ஈரான் இஸ்லாமிய குடியரசு அதை விரிவுபடுத்தி பலப்படுத்தியது.

பெரும்பாலான அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஊடக நிறுவனங்களை வைத்திருக்கும் அல்லது நிதி மற்றும் இலஞ்சம் மூலம் செல்வாக்கு செலுத்தும் சர்வதேச சியோனிச தலைவர்கள் இந்த மனிதாபிமான மற்றும் துணிச்சலான எதிர்ப்பு இயக்கத்தை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தினார்கள்.

தனது சொந்த நிலத்தில் தங்களை தற்காத்துக் கொள்ளும் ஒரு தேசம் பயங்கரவாத தேசமா? இவ்வாறான தேசத்துக்க உதவுவது மற்றும் அதை வலுப்படுத்துவது பயங்கரவாத்திற்கு உதவுவதாக கருதப்படுமா?

உலக மேலாதிக்கத்தின் தலைவர்கள் மிக அடிப்படையான மனிதக் கருத்துகளைக் கூட கருணை காட்டுவதில்லை, இவர்கள் பயங்கரவாத மற்றும் ஈவு இரக்கமற்ற இஸ்ரேலிய ஆட்சி தங்களை தற்காத்துக் கொள்ளவே போராடுகின்றது என்பது போன்று பாசாங்குத்தனம் செய்கிறார்கள் மற்றும் தனது சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் தனது தலையெழுத்தை நிர்ணயிக்க போராடும் பலஸ்தீனர்களை 'பயங்கரவாதிகள்' எனறு சித்தரிக்கிறார்கள்.

இன்று நிலைமைகள் மாறி வருகின்றன என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். மேற்கு ஆசியாவின் முக்கிய பிராந்தியத்துக்கு வேறொரு விதி காத்திருக்கிறது. சர்வதேச மட்டத்தில் மக்களின் மனசாட்சி விழித்துவிட்டது, உண்மை வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. எதிர்ப்பு முன்னணி கொஞ்சம் சொஞ்சமாக வலுப்பெற்றுக் கொண்டிருக்கிறது. வரலாற்றின் பக்கங்களும் மாறிக் கொண்டேயிருக்கிறன.

அமெரிக்காவிலுள்ள பல பல்கலைக்கழகங்களின் மாணவர்களாகிய உங்களைத் தவிர, ஏனைய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் மக்களுக்கு மத்தியில் எழுச்சிகள் ஏற்பட்டுள்ளன. உங்களின் பேராசிரியர்களின் ஆதரவும் துணையும் முக்கியமான மற்றும் பயனுள்ள நிகழ்வாகும். இளைஞர்களாகிய உங்களுடன் துணைநிற்பவர்களில் நானும் ஒருவன். உங்களின் விடாமுயற்சினை மதிக்கிறேன்.

# இலங்கைத் தமிழரின் வரலாற்றை ஆவணப்படுத்திய கதிர் பாலசுந்தரம்

எழுத்தாளரும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் முன்னாள் அதிபரும், சமூகச் செயற்பாட்டாளருமான கதிர். பாலசுந்தரம் அவர்கள் கனடாவில் காலமானார். கதிர் பாலசுந்தரம் எழுதிய 'தங்கத் தாரகை' தமிழ் மக்கள் சந்தித்த ஐந்து காலகட்டங்களையும் பேசுகிறது. சுதந்திரத்திற்கு முன்னரும் அதற்கு பின்னர் வந்த காலமும், போர்க் காலமும், அதற்குப்பிற்பட்ட சமகாலமும், மக்கள் அந்நியம் புலம் பெயர்ந்த காலமும் அதன் பின்னர் தொடரும் காலமும் சித்திரிக்கப்படுகிறது. 425 பங்கங்களில் இக்காலங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனைத்தொகுத்திருக்கும் பாரிய பணியை மேற்கொண்டவர் யூனியன் கல்லூரியின் முன்னாள் அதிபர், எழுத்தாளர், ஆய்வாளர், அரசியல் பிரக்ஞையுள்ள கதிர். பாலசுந்தரம் அவர்கள்.

இதுவரையில் நான் நேரில் பார்த்திருக்காத பேசியுமிருக்காத மின்னஞ்சலில் மாத்திரம் தொடர்பில் இருந்தவர் மதிப்பிற்குரிய கதிர். பாலசுந்தரம் அவர்கள்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அமெரிக்க வெள்ளை இன அதிபர்களுக்குப் பின்னர் அதிபராக பதவியேற்றவர் ஐ.பி. துரைரத்தினம் எனவும், அதன்பின்னர் நான்காவது அதிபராக வந்தவர் கதிர்.பாலசுந்தரம் எனவும் அறிந்துள்ளேன்.

இவர் யாழ் குடாநாட்டிலிருந்து முன்னர் வெளியான *Saturday Review* ஆங்கில வார




இதழின் ஆசிரிய தலையங்கத்தில் யாழ் குடாநாட்டின் அதிசிறந்த கல்லூரி அதிபர் என வர்ணிக்கப்பட்டவர். கல்விப்பணியுடன் கலை, இலக்கியப்பணியும் இவரது ஏனைய பக்கங்கள்.

கதிர். பாலசுந்தரம் அவர்களின் எழுத்துக்கள் எப்போதும் அது நாவலாக இருந்தாலென்ன, வாழ்க்கைச் சரிதமாயிருந்தால் என்ன அனைத்திலும் தேடலும் தெளிவும், சுவாரஸ்யங்களும், அங்கதமும் வெளிப்பட்டிருக்கும்.

தங்கத்தாரகையில் இடம்பெற்றிருக்கும் ஏனையவர்களின் ஆக்கங்களை தவிர்த்துவிட்டுப்பார்த்தால், கதிர். பாலசுந்தரம் அவர்களின் தேடலின் ஆழம், அதில் இழையோடும் தேசத்தின் வரலாறு, அதற்குள்ளும் இழையோடும் பல கதைகள், அவற்றிலும் இழையோடும் செய்திகள், சுவாரஸ்யங்கள், அவற்றுக்குள் இழையோடும் அங்கதம் என அனைத்துமே அந்த ஆவணத்திற்கு மெருகூட்டுகின்றன.

இலங்கையில் முதலில் தோன்றிய 'உதயதாரகை' என்ற தமிழ்ப்பத்திரிகையின் அறிமுகத்திற்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகம் அமைந்த இடம்தான் காரணம். ஈழத்தில் அச்சு எழுத்தில் வெளிவந்த முதலாவது தமிழ்ப்பத்திரிகை 'உதயதாரகை'. 1841 இல் இருந்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வளாகத்திலிருந்து தொடர்ந்து வெளிவந்தது. தமிழிலும் ஆங்கிலத்திலும் (*Morning Star*) வெளிவந்த இருமொழிப்பத்திரிகை. இந்தத் தகவல்களும் தங்கத்தாரகையில் இடம்பெற்றுள்ளன.

## எழுத்தாளரும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி முன்னாள் அதிபருமான கதிர் பாலசுந்தரம் காலமானார்




கதிர். பாலசுந்தரம் அவர்கள் தான் வாழ்ந்த காலத்திலேயே இலங்கைத் தமிழர் வரலாற்றை கல்வி, சமூகம், அரசியல் சார்ந்து ஆவணப்படுத்தியவர்.

**லெ.முருகபூபதி...**
அவுஸ்திரேலியா

# கிழக்கின் குரல்



## திருகோணமலையில் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் சான்றிதழ்

கிண்ணியா தினகரன் நிருபர்

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் 'தொழிற் துறைகளை கௌரவிக்கும் பாராட்டுகள்' எனும் மகுட வாசகத்தில் Smart youth club ஊடாக இளைஞர்களுக்கான தொழிற் பயிற்சி இம்மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் திருகோணமலை மக்கைசர் மைதானத்தில் நடாத்தப் படவுள்ளது.

இப் பயிற்சிநெறியானது அனுபவம் இருந்தும் சான்றிதழ் இல்லாத இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் திறனை பரிசீலித்து தொழிற் சான்றிதழ் வழங்குவதோடு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக




காத்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல்களும் வழங்கப்படவுள்ளன.

தொழிற் தகுதி இருந்தும் சான்றிதழ் தேவையான இளைஞர் யுவதிகள் மற்றும் தொழில் தேடுபவர்கள் இந்நிகழ்வில் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தங்களுடைய பெயர் மற்றும் ஏனைய விடயங்களை இன்று திங்கட்கிழமை முதல் திருகோணமலை மாவட்ட பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

நிகழ்வுக்கான போக்குவரத்து வசதிகள் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## காணாமல்போன மீனவர்களின் வீடுகளுக்கு ஸ்ரீதரன் எம்.பி விஜயம்



தம்பலகாமம் குறுாப் நிருபர்

திருகோணமலையில் சல்லி பகுதியில் கடலுக்குச் சென்று காணாமல் போன மீனவர்கள் இருவரின் வீடுகளுக்கு இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் கடந்த வெள்ளியன்று விஜயம் செய்தார்.

கடந்த 20.5.2024 அன்று சல்லி பிரதேசத்தில் இருந்து காலை 10மணியளவில் கடலுக்கு சென்ற மீனவர்கள் இருவர் காணாமல் போயுளளனர். சல்லி பிரதேசத்தை சேர்ந்த குட்டிராசா சசிக்குமார் வயது (45), முருகையா சுஜந்தன் வயது (22) என்பவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. காணாமல் போன மீனவர்களின் உறவினர்களைச் சந்தித்து எஸ்.ஸ்ரீதரன் எம்.பி இது குறித்து கலந்துரையாடியுள்ளதுடன் இது தொடர்பான தேடுதல் நடவடிக்கைக்காக உரிய தரப்புக்களுடன் பேசுவதாகவும் உறுதியளித்தார்.

## வரலாற்று சாதனை


( காரைதீவு குறுாப் நிருபர்)



நாவிதன்வெளி கோட்ட வரலாற்றில் முதல்முறையாக ஒரு மாணவன் வைத்திய துறைக்குத் தெரிவாகியுள்ளார். நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வெளியான க.பொ.த உயர் தர பரீட்சைப் பெறுபேற்றினடிப்படையில் உயிரியல் துறை மாணவன் செல்வன் துரைரத்னம் அபினேஸ் 2 ஏ, 1பி பெற்று வைத்திய துறைக்கு தெரிவாகியுள்ளார்.

## ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு ஆரம்பம்

(மட்டக்களப்பு விசேட நிருபர்)



கிழக்கிலங்கையில் புகழ்பெற்ற மட்டக்களப்பு புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு நேற்று (02) மாலை 7.00 மணிக்கு திருக் கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து அம்பாளை எழுந்தருளப் பண்ணி வருடாந்த பூஜைகள் நடைபெற்றன.

தொடர்ந்து இன்று திங்கள் (03) முதல் வெள்ளி (07) வரை பகல் பூஜை தினசரி பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும்.

வெள்ளிக்கிழமை (07) பிற்பகல் 4.00 மணிக்கு ஆயிரக்கணக்கான அடியவர்கள் கலந்து கொள்ளும் தீமிதிப்பு வைபவத்துடன் திருச்சடங்கு நிறைவு பெறும்.

அடியார்களின் நலன்கருதி சுகாதார சேவைகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## அரசியலில் யாருக்கும் குழிபறிக்க நாங்கள் அம்பாறைக்கு வரவில்லை !

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் காணப்பட்ட அரசியல் வெறுமையை உணர்ந்துதான் நாங்கள் இந்த மாவட்டத்தில் காலடி எடுத்து வைத்தோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கிழக்கிலங்கையின் சிரேஷ்ட முஸ்லிம் அரசியல்வாதியும், முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சருமான காலஞ்சென்ற மயோன் முஸ்தபாவின் புதல்வர் றிஸ்வி முஸ்தபா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைவது தொடர்பான சிறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை (31) தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எல்.எம்.ஐயூப்கான் தலைமையில் சாய்ந்தமருது பாவா றோயலி மண்டபவத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றம் போதே அவர் இவ்வாறு தெரிவித்தர். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் அரசியல் அதிகாரம் இருந்தும் இந்த மாவட்டத்துக்கு எதுவும் அந்தக் கட்சியினர் செய்யவில்லை. வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்த நாங்கள், இந்த மக்களின் பரிதாப நிலையை உணர்ந்துதான் இங்கு நாம் காலடி எடுத்து வைத்தோம். அதைவிடுத்து, இந்த மாவட்ட எம்.பி பதவியை தட்டிப் பறிக்கவோ அல்லது இன்னொரு கட்சியை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனோ வரவில்லை. என்றார்.

## கியூ.ஆர். முறை அறிமுகம்



(மாளிகைக்காடு குறுாப் நிருபர்)

பொதுமக்களின் முறைப்பாடுகளை துரிதமாக தீர்க்கும் திறனை அதிகரிப்பதற்காக காரைதீவு பிரதேச செயலாளரினால் QR முறை அறிமுகப்படுத்தப்பட்டு பொது இடங்களில் அவற்றை காட்சிப்படுத்துவதற்காக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது. இம் முறையை பொதுமக்கள் தங்களது கையடக்க தொலைபேசி மூலம் scan செய்து தங்களது முறைப்பாடுகளை பிரதேச செயலாளருக்கு தமிழ் மொழி மூலம் நேரடியாக அனுப்பி வைக்கமுடியும் என காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தெரிவித்தார்.



(பாலமுனை தினகரன் நிருபர்)

மறைந்த ஈரானிய ஜனாதிபதி இப்றாஹிம் ரைஸிக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில்

இலங்கை ஜனநாயக முன்னணியின் தலைவர் ஏ. பீ. கமால், அனுதாபத்தை பதிவிட்டார். பின்னர், ஈரானிய தூதுவர் கலாநிதி அலி ரிஸா டெல்கோஷுடனும் அவர் கலந்துரையாடினார்.

## அம்பாறையில் முதலாம் இடம்

பாலமுனை தினகரன் நிருபர்



வெளியிடப்பட்ட க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மாணவன் பிர்தௌஸ் இஹ்ஸான் அஹமட் உயிரியல் விஞ்ஞான துறையில் சகல பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் தேசிய ரீதியில் 216 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

## கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம் முதலிடம்

(மாளிகைக்காடு குறுாப் நிருபர்)

வெளியிடப்பட்ட க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மத்திய வலயம் முதலிடத்தில் உள்ளது.

17 வலயங்களைக் கொண்ட கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் கந்தளாய் கல்வி வலயம் இறுதி இடத்தில் உள்ளது.

இதனடிப்படையில் முறையே மூதூர், மட்டக்களப்பு மேற்கு, மகா ஓயா, கிண்ணியா, திருக்கோவில், திருகோணமலை, பட்டிருப்பு, சம்மாந்துறை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, கல்குடா,தெஹியத்தக்கண்டிய, திருகோணமலை வடக்கு, அம்பாறை, கந்தளாய் கல்வி வலயங்கள், அதற்கடுத்த நிலைகளில் உள்ளன.

## க.பொ.த. சா/தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான வழிகாட்டல்



இவ்வருடம் க.பொ.த (சாதாரண) தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டுதல்களை வழங்கும் முகமாகவும் அவர்கள் உரிய பாடநெறிகளைத் தெரிவு செய்யும் முகமாகவும் “பைத்துல் ஹிக்மா” கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட வழிகாட்டல் நிகழ்வு பைத்துல் ஹிக்மா மண்டபத்தில், நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிறுவனத்தின் வளவாளர்கள், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இழந்த காணிகளை மீளப்பெறல்: ஒலுவிலில் கலந்துரையாடல்

(அட்டாளைச்சேனை குறுாப் நிருபர்)



காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி மற்றும் காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியினரது காலாண்டு ஒன்று கூடலில் அம்பாறை மாவட்டத்தில் பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக இழந்த காணிகளை மீளப்பெறுவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவுகளும் எடுக்கப்பட்டன.

காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் இந்த மாவட்ட சந்திப்பு கடந்த திங்கட்கிழமை காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மனித எழுச்சி நிறுவனத்தின் பணிப்பாளருமான கே நிஹால் அஹமட் தலைமையில் ஒலுவிலிலுள்ள தனியார் விடுதி மண்டப மொன்றில் நடைபெற்றது.

இதில் விசேட அதிதியாக காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் இணைப்பாளர் சட்டத்தரணி சந்துன் துடுகல மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டார்கள். சொந்தக் காணிகளை இழந்த அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிமுள்ள விவசாயிகள், தமது நீண்ட கால காணிப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

நிறுவனத்தின் பணிப்பாளரான கே.நிஹால் அஹமட் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் பாராளுமன்ற உறுப்பினர் முஷார்ரப் மேற்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவரது முயற்சியின் பயனாக விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பாகவும் விளக்கினார்.

அரசாங்கத்தின் உருமய வேலைத் திட்டத்தின் கீழ் காணிகளுக்குரிய உறுதிப் பத்திரம் வழங்கும் திட்டம் தொடர்பான விழிப்புணர்வூட்டலும் நடைபெற்றது.

## மட்டு– கல்முனை வீதியில் விபத்து: ஒருவர் பலி



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியின் குருக்கள் மடத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (01.06.2024) மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றொருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் களுவதாளைக் கிராமத்தைச் சேர்ந்த 18 வயதுடைய திவாகரன் ஹபிசாயன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கிரான்குளம் பகுதியிலிருந்து இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் களுதாவளை நோக்கிச் சென்றுள்ளனர். மிகவும் வேகமாக சென்ற மோட்டார் சைக்கிள் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடம் வளைவில் மின்கம்பத்தில் மோதியுள்ளது.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

ஓட்டமாவடி தினகரன் நிருபர்



வாழைச்சேனை 05, அறபா வீதியை பிறப்பிடமாகவும், ஓட்டமாவடி 02, எம்.பீ.சீ.எஸ் குறுக்கு வீதி என்ற முகவரியை வதிவிடமாகவும் கொண்ட நூறு முகம்மது, மஸாகிறா தம்பதிகளின் புதல்வரான நூறு முகம்மது முகம்மது மர்சூக் (தீவு முழுவதற்குமான) அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியினை மட்/மம பிறைந்துரைச்சேனை அஸ்ஹர் மகா வித்தியாலயத்திலும், உயர்தர கல்வியினை மட்/மம/வாழைச்சேனை அந்நூர் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) கலைப் பிரிவிலும் கற்றார்.

## தோப்பூர் வைத்தியசாலையில் சிரமதானப் பணி

தோப்பூர் குறுாப் நிருபர்

தோப்பூர் முச்சக்கரவண்டி சங்கத்தினர் தோப்பூர் வைத்தியசாலையில் நேற்று பாரிய சிரமதானப் பணியினை மேற்கொண்டதாக முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கத் தலைவர் வி. சபுர்தீன் தெரிவித்தார். தோப்பூர் பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைய இது மேற்கொள்ளப்பட்டது. இச்சிரமதானத்தின் போது வைத்தியசாலையின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் துப்புரவு செய்யப்பட்டதோடு டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களும் துப்புரவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இச்சிரமதானத்தில் 40க்கும் மேற்பட்ட முச்சக்கரவண்டி சாரதிகள் கலந்து கொண்டனர்.





(ராஜகிரிய குறுாப் நிருபர்)

கிழக்கு மாகாண மாணவர்களின் கற்கை நெறிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கில், அக்கரைப்பற்றில் EPL பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பணிப்பாளர்களாக அறிஞர் சித்திலெவ்வை மன்றத் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மர்சூம்மௌலானா மற்றும் பன்னூலாசிரியரான ரபியுதீன்ஜமாலி ஆகியோர் நியமிக்கப்பட்டனர். பல்கலைக்கழக பணிப்பாளர் அஹ்மட் நிப்ராஸிடமிருந்து இவர்கள் கடிதங்களை பெற்றுக்கொள்வதை காணலாம்.

# பொது வேட்பாளர் தெரிவுக்கு எப்போதுமே எதிரானவன் நான்!

## வடமாகாண சபை முன்னாள் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம்

**யாழ்.விசேட நிருபர்**

மக்களை இனிமேலும் உசுப்பேற்ற முடியாது. தங்களுக்கு எது சரி என்பதை அவர்களே தீர்மானிப்பார்கள். சரியென்றால் ஏற்றுக் கொள்வார்கள், இல்லையென்றால் விலக்கி வைப்பார்கள் என வடமாகாண சபை முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துக் கூறுகையில்



நான் பொது வேட்பாளர் தெரிவுக்கு எதிரானவன். எங்களுக்கு பொது வேட்பாளர் தேவையில்லையென அரசியல்வாதிகளிடம் முதன் முதலில் சொன்னவனும் நான் தான்.

பொது வேட்பாளர் சாத்தியமில்லை என்பதையும் அதற்கான காரணங்களையும் நான் கூறியிருக்கிறேன். இப்பவும் சொல்கிறேன் பொது வேட்பாளர் யார் என்ற தெரிவிலேயே அது முடங்கிப் போகும்.

இப்போது நாங்கள் மேலும் பிளவுபட்டு இருக்கிற போது என்ன நடக்கும் என்பதையும் சிந்தித்து பார்க்க வேண்டியது அவசியம்.

பொது வேட்பாளர் தொடர்பில், தமிழரசுக் கட்சி, கட்சி ரீதியாக எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. ஆனாலும் கட்சி உறுப்பினர்கள் தனியாக இது பற்றிப் பேசி வருகிறார்கள். இந்த விடயம் தொடர்பில் சில தினங்களிற்கு முன்னர் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுவில் நாங்கள் பேசியிருந்தோம்.

மக்களை உசுப்பேத்தி எதுவும் செய்யலாம் என யாராவது நினைத்தால் அது நடக்காது என மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## கைத்துப்பாக்கியை திருடிய பொலிஸ் உத்தியோகத்தர் கைது

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் உள்ள கைத்துப்பாக்கியினை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். மைதிரிபுர பதவிய பகுதியினை சேர்ந்த 31 வயதுடைய பொலிஸ் கன்ஸ்டபிளே நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். திருடப்பட்ட கைத்துப்பாக்கியானது பொலிஸ் நிலையத்தில் மறைத்துவைக்கப் பட்டிருந்த நிலையில் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை கெப்பற்றிகொலாவ நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் வெலிஓயா பொலிசார் ஈடுபட்டுள்ளார்கள்.

## கணிதப் பிரிவில் முதலிடம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் மதியழகன் டினோஜன் அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சை பெறுபேற்றில் கணிதப் பிரிவில் யாழ் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். குறித்த மாணவன் அகில இலங்கை மட்டத்தில் 47 வது நிலையை பெற்று தென்மராட்சி மண்ணுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் கடத்தல் 45 நாட்களில் 180 வழக்குகள்!

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ். மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் மே மாதம் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் போதைப்பொருள் கைதுகள் தொடர்பில் 180 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கமைய ஹெரோயின்' போதைப்பொருள் தொடர்பில் 51 வழக்குகளும், ஐஸ் போதைப் பொருள் தொடர்பில் 8 வழக்குகளும், கஞ்சா போதைப்பொருள் தொடர்பில் 121 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தின் யாழ். பொலிஸ் பிராந்தியம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்தப் போதைப்பொருள்கள் கைப்பற்றப் பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.


## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய இரதோற்சவம்



**சாவகச்சேரி விசேட நிருபர்**

வரலாற்றுப் புகழ் பெற்ற யாழ். தென்மராட்சி வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. இதன்போது பக்தர்கள் தூக்குக்காவடி, பறவைக் காவடி, பாற்குடம் மற்றும் கற்பூரச் சட்டி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர்.

## நயினாதீவு – குறிகாட்டுவான் படகு சேவை புதிய நேர அட்டவணையில்



**கரவெட்டி தினகரன் நிருபர்**

நயினாதீவு குறிகாட்டுவான் படகு சேவை நேற்று முன்தினம் முதல் புதிய நேர அட்டவணையில் இயங்கவுள்ளது.

புதிய நேர அட்டவணையை வேலணை பிரதேச சபை நயினாதீவு உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி வெளியிட்டுள்ளார்.

நயினாதீவு குறிகாட்டுவான் இடையேயான படகுச் சேவை காலை 6.30 முதல் மாலை 5.30 மணிவரை ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் ஒரு தடவை நடைபெறும். மற்றும் குறிகாட்டுவான் நயினாதீவுக்கு இடையேயான படகு சேவை காலை 7 மணி முதல் மாலை 6.30 வரை ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் ஒரு தடவை நடைபெறும்.

நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். சேமக்காலையில் பெண் எரித்துக் கொலை



**யாழ்.விசேட நிருபர்**

சேமக்காலைக்கு பெண்ணொருவரை அழைத்து சென்று பெற்றோல் ஊற்றி அவரை எரித்துக் கொன்ற சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி மட்டுவில் பகுதியை சேர்ந்த 45 வயதுடைய இரத்தினவடிவேல் பவானி எனும் பெண்ணே அவ்வாறு எரிக்கப்பட்டவராவார்.

# மலைச்சாரல்

## மில்லனியவில் வெள்ளம் 300 வீடுகள் சேதம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

களுகங்கையின் நீர் மட்டம் உயர்ந்து வரும் நிலையில் களுகங்கையின் மிகவும் தாழ்வான பகுதியான மில்லனிய பகுதி நீரில் மூழ்கியுள்ளது. இப்பகுதி உட்பட நீரில் மூழ்கியுள்ள ஏனைய பகுதிகளில் 300க்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை நேற்று எஹலியகொடை பிரதேசத்தில் 400 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் களுகங்கையின் கிளையாறுகள் பெருக்கெடுத்துள்ளதால் தொடர்ந்து மழை பெய்தால் இரத்தினபுரி நகரின் தாழ் நிலங்கள் நீரில் மூழ்கும் என இரத்தினபுரி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மாத்தளை தோட்டப்புற மக்களின் வீடுகள் புனர்நிர்மாணம்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன்

மாத்தளை, ரத்தோட்டை, பிட்டகந்த தோட்டத்தில் லயன் வீடுகளில் வாழும் மக்களின் வீட்டுக் கூரைகளை புனரமைக்கும் பணிகளை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த புனரமைப்பு பணிகளை இரண்டு மாத காலப்பகுதிக்குள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் மிக நீண்ட கால தேவையாக கருதப்படும் இதனை பூர்த்தி செய்யுமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது



இதேவேளை, பின் தங்கிய மற்றும் தோட்டப்புறங்களில் வாழும் மக்களுக்கு தேவையான நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் தங்களுக்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இதற்கமைய இந்த வேலைத் திட்டம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக இரண்டு மாத காலப் பகுதிக்குள் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர் எம். சிவஞானம் உட்பட ரத்தோட்டை மற்றும் அம்பன் கோறளை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள் பலரும் கலந்துக்கொண்டனர்.

## பலாங்கொடையில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

வெளிநாட்டு வைத்திய அதிகாரிகள் பங்குகொள்ளும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் இம் மாதம் 5ஆம் திகதி பலாங்கொடை தும்பகொடை ஸ்ரீ சுதர்சன ராம பௌத்த விகாரையில் இடம் பெறும்.

பலாங்கொடை வியாபார சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த இலவச சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலை 8:30 க்கு ஆரம்பிக்கப்படும் இந்த சிகிச்சை முகாம் மாலை வரை இடம்பெறும்.

பல்வேறுபட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட உள்ளதால் இப்பகுதியில் உள்ள நோயாளர்களை இந்த சிகிச்சை முகாமில் கலந்துகொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டியுள்ளனர்.

## போக்குவரத்துக்கு தடை

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

அவிசாவளை மற்றும் ஹங்வெல்ல கல்துவை ஆகிய பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டதால் ஹட்டனிலிருந்து அவிசாவளை மற்றும் கொழும்புக்கிடையிலான போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கினிகத்தேனையிலிருந்து பிட்டவளை, கலுகல்ல, கித்துல்கல மற்றும் அவிசாவளை ஆகிய பகுதிகளுக்கு செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

## பாரிய மண்சரிவு: மயிரிழையில் நால்வர் உயிர் தப்பினர்



**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சிங்கராஜ வனத்தின் இரத்தினபுரி மாவட்ட எல்லைப் பிரதேசமான லங்காகம ஹேனபொல பிரதேசத்தில் நேற்று (2) பிற்பகல் ஏற்பட்ட பாரிய மண்சரிவில் நால்வர் உயிர் தப்பியுள்ளனர்.

அவர்களது வீடு பாரிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. மண்சரிவு இடம்பெற்ற நேரத்துக்கு சற்று முன் இவ்வீட்டின் தாய், தந்தை, மற்றும் பிள்ளைகள் இருவரும் அருகில் உள்ள ஆற்றின் வெள்ள நிலைமையை பார்க்கச் சென்றதால் அவர்கள் மயிரிழையில் தப்பியதாக இவ்வீட்டின் உரிமையாளர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.



## வெள்ளத்தால் சூழப்பட்ட ஹோட்டலில் 85 பேர் வள்ளங்களில் மீட்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

ஹொரணை வகவத்த பகுதி ஹோட்டல் ஒன்றில் நிகழ்ச்சி ஒன்றுக்கு தயாராக வந்திருந்த 85 பேர் வெள்ள அச்சுறுத்தலுக்கு உள்ளான நிலையில் நேற்று ஞாயிறன்று பொலிசார் மற்றும் ஹொரணை பிரதேச சபை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

பொலீசாருக்கு கிடைத்த தகவலை அடுத்து இந்த அச்சுறுத்தலை எதிர்கொண்ட அனைவரும் வள்ளங்களில் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். அப்பகுதி பொது மக்களும் பொலிசாருக்கு உதவி செய்தனர்.

# மொன்சூன் பருவக்காற்றின் ஆரம்பமும் வங்கக் கடலின் வானிலைப் போக்குகளும்



ஐக்கிய நாடுகளின் உலக வளிமண்டலவியல் ஸ்தாபனத்தின் அண்மைய அறிக்கையில் 2024ஆம் ஆண்டில் வெப்பம் மிக மோசமானதாக இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகாவின் வட பகுதி, ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், மத்திய பிரதேசத்தின் மேற்குப் பகுதிகள் ஆகியவற்றில் வெப்ப அலைகளின் தாக்கம் இவ்வருட முற்பகுதியில் அதிகமாக காணப்பட்டது. கடந்த வருடத்தில் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்புக்கு, எல்நினோ வானிலைத் தோற்றப்பாடு பகுதியளவில் பொறுப்பாக இருந்தாலும் காலநிலை மாற்றமே இதற்கு அடிப்படையான ஊக்கியாக இருந்தது. எல்நினோ தாக்கங்களைத் தூண்டி, சமுத்திர வெப்பநிலைகளைப் புதிய கட்டத்திற்கு நகர்த்தி விட்டது. சமுத்திரங்கள் தொடர்ச்சியாக வெப்பமடைவதனால் புவியின் காலநிலையை ஒழுங்குபடுத்துவதற்கான அவற்றின் திறனில் இணக்கமின்மை காணப்படுகின்றது. கிழக்கு ஆபிரிக்காவிலும், அரேபியக் குடா நாட்டிலும் ஏற்பட்ட மோசமான மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளப் பெருக்குகளினால் உயிர்ச் சேதங்கள், பொருளாதார மற்றும் விவசாய இழப்புகள் ஏற்பட்டுள்ளன. மிகச் செறிவான வெப்பநிலைகள் ஆசியாவின் பெரும் பகுதிகளைத் தாக்கியுள்ளதுடன், மக்களின் நாளாந்த வாழ்க்கையினைப் பாதித்து கடுமையான சுகாதார அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது. எல்நினோ நிகழ்வுடன் இந்து சமுத்திர இருமுனைவு எனக் கூறப்படும் தோற்றப்பாடானது கிழக்கு ஆபிரிக்காவில் வெள்ளப்பெருக்கு, தென்னாபிரிக்காவில் வரட்சி, தென்கிழக்கு ஆசியாவில் உயர் வெப்பநிலைகள் ஆகியவற்றில் முக்கிய வகி பங்கினைக் கொண்டிருந்தது. மனித நடவடிக்கைகளினால் தூண்டப்பட்ட பச்சைவீட்டு வாயுக்களினால் சமுத்திரத்திலும், வளிமண்டலத்திலும் தேங்கியிருந்த பெருமளவு சக்தியானது வெப்ப அதிகரிப்பில் பாரிய செல்வாக்கைக் கொண்டிருக்கின்றது, என உலக வளிமண்டலவியல் ஸ்தாபனம் குறிப்பிட்டது. காலநிலை மாற்றத்தின் நிகழ்வுகள் கடுமையாக இருப்பதனால் நாம் வாழும் சூழலும் மிக முக்கியமாக, மனித வாழ்க்கையும் குறிப்பாக சமூகங்கள் மற்றும் பொருளாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. உலக வளிமண்டலவியல் ஸ்தாபனத்தின் துணைச் செயலாளர் 'ஜெனரல் கோ பரட்; (Ko Barrett) என்பவர் ஏப்ரல் 23 நிகழ்ந்த ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான எண்பதாவது பொருளாதார மற்றும் சமூக ஆணைக் குழுவின் அமர்வில் குறிப்பிடும் போது, 2023இல் ஆசியாவானது வானிலை, காலநிலை மற்றும் நீருடன் தொடர்பான இடர்களினால் பாதிக்கப்படும் ஒரு பிராந்தியமாக இருக்கும் என கூறப்பட்டதற்கு ஏற்பவே தற்போதைய போக்குகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன, என்ற கருத்தை தெரிவித்தார். வெள்ளப்பெருக்குகள், இடி முழக்கத்துடன் கூடிய கடுமையான புயல்களின் பாதிப்புகள் பல நாடுகளில் அதிகளவு ஏற்படுகின்றது. துபாய், சீனா, தன்சானியா, பிறேசில், கொலம்பியா, ஆப்கானிஸ்தான், ஜேர்மனி ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குகள் இதற்கு சான்றாகும். இவற்றின் தாக்கங்களினால் விவசாயத்தில் இழப்புகள் மாத்திரமன்றி தொழிலாளரின் உற்பத்தித் திறனிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மின்சக்தி வலைபின்னலிலும் அதிக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

பூகோள வெப்பமடைதல் போக்குகளுக்கு மனித நடவடிக்கைகள் மற்றும் இயற்கைக் காரணிகளால் தூண்டப்படும் காலநிலை மாற்றம் முதல்நிலை ஊக்கியாகச் செயற்படுகின்றது. 2023ஆம் ஆண்டு ஒரு எல்நினோ வருடமாகக் காணப்பட்டது. இயற்கையான காலநிலை மாறுதன்மை அல்லது படிவுவீழ்ச்சி, வெப்பநிலை என்பன சராசரியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதற்கான காலநிலைக் கூறுகளிலேயே இது தங்கியுள்ளது. இவற்றினை விட நாசா புவி அவதான நிலையம் மேலும் மூன்று பங்களிக்கும் காரணிகளைப் பட்டியலிட்டுள்ளது. அவை: (1) சமுத்திரம் வெப்பமடைதல் (2) காற்றுத் தொங்கல்களில் ஏற்படும் வீழ்ச்சி (3) தென் பசுபிக்கிலுள்ள டொங்கா தீவில் 2022இல் கடலுக்கு கீழ் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு. புவி மேற்பரப்புக்கு அண்மையில் சராசரி வளி வெப்பநிலை அதிகரித்து வருகின்றது. இம் மாற்றத்திற்கான அளவுக்கதிகமான பங்களிப்பை காபனீரொட்சைட் வழங்குகின்றது. இது நிலக்கரி, வாயு மற்றும் நிலநெய் போன்ற சுவட்டு எரிபொருட்களின் எரிவிலிருந்து வெளியேற்றப்படுவதாகும். இது வீடுகள், வியாபாரம், நகரங்கள் மற்றும் மக்களின் தேவைகளுக்கு ஒளி வழங்குவதற்கானது. விவசாயம் மற்றும் விலங்கு வளர்ப்பு, நிலப் பயன்பாட்டு மாற்றங்கள், கட்டுமானம், கழிவு முகாமைத்துவம் மற்றும் கைத்தொழில் செயல்முறைகள் ஆகியவற்றினால் மெதேன் மற்றும் நைதரஸ் ஒக்சைட் மற்றும் பல்வேறு செயற்கை இரசாயனங்கள் வெளியேற்றப்படுகின்றன. இவ் வாயுக்கள் ஒரு போர்வையாகப் புவியைச் சுற்றி வெப்பத்தை உறிஞ்சி தன்னகத்தே வைத்திருக்கின்றன. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் வெப்பமடைதலினால் தாக்கங்கள் அதிகரிக்கின்றன. ஆறு தொடக்கம் பன்னிரெண்டு மாதங்களுக்கு உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளூர் வானிலையை மாற்றுவதற்குப் போதுமான வளிமண்டலப் பாய்ச்சலை எல்நினோ மாற்றியமைக்கின்றது. தென் பசுபிக் சமுத்திரத்தில் தகிட்டித் தீவுக்கும், அவுஸ்திரேலியாவின் டார்வினுக்கும் இடையில் தென் ஊசலி என அழைக்கப்படும் தோற்றப்பாட்டுடன் இணைந்து கடல் மட்ட வளியமுக்கப் பாங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. எல்நினோ நிலைமைகளில் சராசரி வளியமுக்கம் தகிட்டியிலும் பார்க்க டார்வினில் அதிகமாக இருக்கும். மாறாக குளிர் நிலையில் லாநினாவின் போது இது மாறிக் காணப்படும்.

தென் ஆசியாவில் சராசரிக்கு மேல் மழைவீழ்ச்சியையும் வெள்ளப்பெருக்கினையும் மே இரண்டாவது வாரத்தில் இலங்கையில் ஆரம்பித்து ஜூன் முதல் வாரத்தில் இந்தியாவினை வந்து சேரும் மொன்சூன் பருவக்காற்று ஏற்படுத்தப் போகின்றது. அடுத்த சில மாதங்களில் பசுபிக் சமுத்திரத்தில் ஆரம்பிக்கப் போகும் லாநினா வானிலைத் தோற்றப்பாட்டுக்கான நிலைமைகள் சாதகமாகத் திரும்பியுள்ளன என ஐக்கிய அமெரிக்காவின் தேசிய சமுத்திரவியல் மற்றும் வளிமண்டலவியல் நிர்வாகத்தின் காலநிலை எதிர்வுகூறல் மையம் குறிப்பிட்டுள்ளது. வலிமையான எல்நினோ நிகழ்வுகளுக்குப் பின்னரே பொதுவாக லாநினா ஆரம்பிப்பது வழக்கம். இத்தோற்றப்பாடு 2024 இல் ஜூன் - ஆகஸ்ட் மாதங்களில் இடம்பெறும். முன்னர் மென்சூன் பருவக்காற்று மாதங்களில் இடம்பெற்ற லாநினா நிகழ்வுகளினால் இந்தியாவில் வழமைக்கு மாறான மழைவீழ்ச்சியும் சில பகுதிகளில் அளவுக்கதிகமான வெள்ளப்பெருக்குகளும் ஏற்பட்டிருந்தன. இந்தியாவைப் பொறுத்தவரை எல்நினோ கடுமையான கோடையையும், பலவீனமான மொன்சூனையும் கொண்டது. லாநினா மறுபக்கத்தில் வலிமையான மொன்சூனையும், சராசரிக்கு மேலான மழைவீழ்ச்சியையும் குளிரான மாரியையும் உபகண்டத்தில் கொண்டிருக்கும்.இந்தியாவின் பெரும்பாலான மொன்சூன் பருவக்காற்று மழைவீழ்ச்சி ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இடம்பெறும். தொடர்ச்சியான மற்றும் நடுத்தர அளவான மழை இந்தியாவைப் பொறுத்தவரை மிக முக்கியமானது. ஏனெனில் நாட்டின் ஏறக்குறைய அரைவாசி விவசாய நிலங்கள் நீர்ப்பாசனப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளன. மழைவீழ்ச்சி போதுமானதாகக் கிடைக்கும் போதுதான் குறிப்பாக கரும்பு, தானியங்கள், நெல், மற்றும் மரக்கறி வகைகளின் விலைகள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். இதனால் நாட்டின் பணவீக்கம் உறுதியான நிலையில் பேணப்படும். இந்திய வளிமண்டலவியல் திணைக்களத்தின் மொன்சூன் திட்டத்தின் எதிர்வுகூறல் முறைமையின் மூலம் மொன்சூன் பருவத்தில் லாநினாவின் சாதகமான விருத்தி பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் மேலாக இந்து சமுத்திர இரு முனைவு நிலைமைகள் நடுநிலையாகக் காணப்படும். அத்துடன் மொன்சூன் பருவத்தில் இது நேர் கணியமாக விருத்தியடையும். 1950 தொடக்கம் இன்று வரையுள்ள பதிவுகளை அவதானித்தால் பல தடவைகள் எல்நினோவிலிருந்து லாநினாவுக்கான மாற்றம் குறிப்பாக, மிக வலிமையான எல்நினோவுக்குப் பின்னர் விரைவாக இடம்பெற்றுள்ளதை அவதானிக்கலாம். தற்பொழுது முடிவுநிலையை அண்மித்துவிட்ட எல்நினோ கடந்த வருடம் 2023 ஜூனில் விருத்தியடைந்து நவம்பருக்கும் இவ்வருடம் 2024 ஜனவரிக்கும் இடையில் மிக வலிமை கொண்டதாக இருந்தமையை உலக வளிமண்டலவியல் ஸ்தாபனம் மார்ச்சில் குறிப்பிட்டிருந்தது. இதுவரை காலமும் ஏற்பட்ட ஐந்து வலிமையான எல்நினோ நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. ஆனால் 19971998, மற்றும் 2015 - 2016 ஆகிய எல்நினோ நிகழ்வுகளைவிட வலிமை குறைந்ததாக இருந்தது. இக்காலத்தில் கடும் வெப்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இதனை நன்கு உணர்ந்திருப்பார்கள். கிழக்கு மற்றும் மத்திய அயன பசுபிக் சமுத்திரத்துக்கான 1991 - 2020 காலத்துக்குரிய சராசரி கடல் மேல்பரப்பு வெப்பநிலையிலும் பார்க்க இரண்டு பாகை செல்சியஸ் அதிகளவான பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

கிழக்கு ஆசியா, வட அவுஸ்திரேலியா என்பன வழமைக்கு மேல் அதிக மழையைப் பெறும் எல்நினோ செல்வாக்கு குறைவதினாலும் லாநினா நிலைமைகள் முக்கியத்துவம் பெறுவதனாலும் பசுபிக் பிரதேசத்தில் மே மாதத்தின் பின்னர் மொன்சூன் பருவக்காற்றுக் காலத்தில் அதிக மழை கிடைக்கும். மத்திய பசுபிக் சமுத்திரத்தில் பருவகால ரீதியாக நீரினை எல்நினோ சூடாக்குகின்றது. இதனால் இந்திய தீபகற்பத்தின் மேலாகவுள்ள வானிலைப் பாங்குகளில் நேரடித் தாக்கம் ஏற்படுகின்றது. லாநினா என்பது எல்நினோ அல்லது தென் ஊசலி வட்டத்தின் குளிர்க் கட்டமாகும். இதனால் லாநினாவின் காரணமாக மத்திய மற்றும் கிழக்கு மத்திய கோட்டுப் பசுபிக்கில் சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலைகள் பருவகாலக் குளிர்ச்சியைப் பெறுகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை ஜூன் - செப்டெம்பர் காலத்தின் மொன்சூன் மழை அதன் மூன்று டிரில்லியன் டொலர் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானதுடன் தேவையான ஏறக்குறைய 70 சதவீதமான மழைவீழ்ச்சி நாட்டின் பயிர்ச் செய்கைக்கு அவசியமானதாக இருப்பதுடன் நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர் ஊற்றுக்களுக்கு மீள் நிரப்புதலையும் செய்கின்றது. வாளின் கூரான இரு பக்கத்தைப் போன்று இந்தியாவின் உயர் வெப்பநிலைகளும் நீர்ப் பற்றாக்குறையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்களின் வாழ்க்கையினைத் துயரம் மிக்கதாக மாற்றியுள்ளது. 2024 ஆம் ஆண்டில்ன ஜூன் - செப்டம்பர் மொன்சூன் பருவத்தில் வழமைக்கு அதிகமாக, நீண்ட காலச் சராசரியுடன் (87 செண்டி மீற்றர்) ஒப்பிடும் போது ஆண்டு மழைவீழ்ச்சியாக 106 சதவீதம் கிடைக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த எதிர்வு கூறலுக்குப் பல காரணிகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவை: (1) எல்னினோ பின்வாங்கல்: மொன்சூன் பருவ காலத்தின் வருகையுடன் எல்நினோ நிலைமாற்றம் பெறும். (2) சாதகமான லாநினா நிலமைகள்: மத்திய மற்றும் கிழக்கு மத்திய கோட்டு பசுபிக் சமுத்திரத்தில் உள்ள சராசரி கடல் மேற்பரப்பு வெப்பநிலைகளை விட லாநினா நிகழ்வுகள் குளிர்ச்சியான பண்புகளைக் கொண்டிருக்கும். அத்துடன் இந்தியாவில் வலிமையான மென்சூனுடன் இணைந்திருக்கும் லாநினா நிலைமைகள் இந்த வருடம் ஆகஸ்ட் செப்டம்பரில் விருத்தியாகும். (3) நேர்கனிய இந்து சமுத்திர இருமுனைவு நேர்காணியமான IOD நிலைமைகளினால் மேற்கு இந்து சமுத்திரம், கிழக்கு இந்து சமுத்திரத்திலும் பார்க்க சூடாக இருக்கும். இது வலிமையான மொன்சூனுக்கு சாதகமாக அமையும். (4) வட கோளத்தில் குறைந்தளவான பனிப் போர்வை: குறைவடையும் பனிப்போர்வை காரணமாக நிலத்திணிவுகள் விரைவாக வெப்பமடைந்து விடுவதனால் மொன்சூன் பாங்குகளில் செல்வாக்குச் செலுத்த முடியும்.


இம்முறை காலநிலை மாற்றம் தொடர்ந்தும் மொன்சூன் முறைமை மீது தாக்கத்தினை ஏற்படுத்தும். உள்ளார்ந்த ரீதியில் குறைந்த மழை நாட்களைக் கொண்டிருந்தாலும் மிகச்செறிவாகக் கொட்டும் நிலை காணப்படும். இந்திய வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறலின்படி நாடு பூராகவும் மழைவீழ்ச்சியின் பரம்பல் ஒரே சீராக இருக்க மாட்டாது. சில பகுதிகளில் வெள்ளப்பெருக்கும் சில பகுதிகளில் மழைவீழ்ச்சியின் பற்றாக்குறையும் காணப்படும். இந்தியாவின் வடமேற்குச் சமவெளிகள், மேற்கு, மத்திய மற்றும் தென் இந்தியப் பகுதிகள் நான்கு மாத காலத்தில் வழமையான படிவுவீழ்ச்சியிலும் பார்க்க அதிக மழையைப் பெறும். மேற்கு இமாலய பிரதேசம், கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகள் வழமைக்கு மாறாகக் குறைவான மழையைப் பெறும். இன்று எல்நினோ மற்றும் லாநினாவின் பண்புகளை மாற்றும் அளவுக்கு பூகோள வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் அமைந்துள்ளது. சமுத்திரத்தின் வெப்பமடைதல் காரணமாக குளிர்ச்சியான லாநினாக் காலங்கள் 25 -30 வருடங்களுக்கு முன்னர் எல்நினோ வருடங்களில் நிலவியதிலும் பார்க்க வெப்பமாக உள்ளது. சமுத்திர வெப்ப நிலையில் ஏற்படும் அதிகரிப்பு எல்நினோ லாநினா தோற்றப்பாட்டில் சிக்கலான நிகழ்வுகளை ஏற்படுத்தி வருவதினால் எல்நினோ தென் ஊசலி (ENSO) வட்டத்தினைக் குறிப்பாக அதன் ஆரம்பம் செறிவுத்தன்மை மற்றும் காலம் என்பதனை எதிர்வுகூறுவது கடினமாக மாறியுள்ளது. பசுபிக் சமுத்திரம் மிகப்பெரிய அளவில் ஆழமான நீரினை கொண்டமைந்துள்ளது. இது பூகோளம் முழுவதும் குழப்பமான காலநிலைப் பாங்குகளை தோற்றுவிக்கின்றது. பசுபிக் சமுத்திரத்தின் வெப்பமடைதலும், குளிர்ச்சியும் எல்நினோ மற்றும் லாநினாவைப் பொறுத்தவரை ஏனைய சமுத்திரங்களிலும் பார்க்கப் பெரிய அளவில் இடம்பெறும். ஆனால் வலிமையான நேர்கணிய இந்து சமுத்திர இரு முனைவு நிகழ்வுகள் இடம்பெறும் காலத்தில் எப்போதாவது தான் இத்தகைய மாறுதன்மையை இந்து சமுத்திரம் கொண்டிருக்கும். இந்நிலையில் பசுபிக் சமுத்திரத்தின் சூடான கட்டம் தற்பொழுது குறைவடைந்து செல்லும் நிலையில் எதிர் நிலையான லாநினா நோக்கி நகர்கின்றது. 2024 ஏப்ரல் - ஜூன் காலத்துக்கு இடையில் எல்நினோ தென் ஊசலி வட்டம் நடுநிலைக்கு நகரும் என்பதற்கு 85 சதவீத சந்தர்ப்பம் இருப்பதாக நோவா செயற்றிட்டம் குறிப்பிடுகின்றதுடன் லாநினா விருத்தியடைவதற்குரிய 60 சதவீத சந்தர்ப்பம் காணப்படுகின்றது. வரலாற்று ரீதியாக நோக்கினால் இறுதியாக நடந்த வலிமையான எல்நினோவின் குறுகிய நடுநிலைக் கட்டம் லாநினா தோன்றுவதற்கு முன் காணப்பட்டது. லாநினாவின் தோற்றம் என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் எப்பொழுது இது உறுதிநிலை அடையும்? எத்தகைய நிலைமை கொண்டதாக இருக்கும்? எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஐக்கிய அமெரிக்க கடற்படையின் தைபூன் எச்சரிக்கை மையம் வங்காள விரிகுடாவின் தாழமுக்கம் பற்றிய எச்சரிக்கையை வழங்கியுள்ளது. அத்துடன் தாழமுக்கத் தொகுதியின் செறிவடையும் தன்மைக்குச் சாதகமான சூழலியல் நிலைமைகளையும், முன்னிலைப்படுத்திக் கூறியுள்ளது. சூடான கடல் மேற்பரப்பு வெப்பநிலைகள் 28 - 29 பாகை செல்சியஸ் ஆகக் காணப்படுவது பற்றியும் தாழ்மட்டத்தில் நிலைக்குத்தான காற்றின் முறிவு தொடர்பாகவும் எடுத்துக்காட்டியுள்ளதுடன் பூகோள வானிலை மாதிரிகள் யாவும் இந்த மதிப்பீட்டுடன் இணக்கமாகக் காணப்படுவது பற்றியும் குறிப்பிட்டுள்ளது. 2024 மே 22 அதிகாலை வேளையில் வங்காள விரிகுடாவின் மத்தியில் மேற்குப் பகுதியை அண்மித்து உருவாகிய தாழமுக்க பகுதி, மே 25 இல் சூறாவளியாக (ரேமால்) மாறி நகரத் தொடங்கியது. சூடான கடல் மேற்பரப்பு வெப்ப நிலைகள் புயல் தொகுதி வளர்ச்சி அடைவதற்குத் தேவையான வெப்பத்தினையும், ஈரப்பதனையும் வழங்குகின்றது. தாழ்மட்டத்தில் குத்தான காற்றின் முறிவு சூறாவளிகளுக்கு அருகாமையில் காற்றுக்களை மேல் நோக்கி நகர்த்தும். அண்மைக் காலங்களில் சூறாவளிகளை எதிர்வுகூறுவதென்பது குறிப்பாக, கடல் மேற்பரப்பு வெப்பநிலைகளில் காணப்படும் எதிர்வுகூற முடியாத அதிகரிப்புக்கு காரணமாகவும், மேற்பரப்புக்குக் கீழாகவும், சூறாவளியைச் சுற்றிக் காணப்படும் காற்றுக்களின் நடத்தை காரணமாகவும் சூறாவளிகளை எதிர்வு கூறுவது என்பது சவால் மிக்க ஒன்றாக காணப்படுகின்றது. வங்காள விரிகுடாவில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை தற்பொழுது 30 பாகை செல்சியஸ் ஆகவும் மத்திய மற்றும் வடக்கு பகுதிகளில் 32 பாகை செல்சியஸ் ஆகவும் உள்ளது. இதனால் சூறாவளியின் விருத்திக்கான சாதகமான சூடான வெப்பநிலை அதற்குத் தேவையான வெப்பத்தையும், ஈரப்பதனையும் வழங்குகின்றது, இந்திய அயன வளிமண்டலவியல் நிறுவனத்தின் காலநிலை விஞ்ஞானி 'றொக்ஸி மத்தியூ' கூறுகையில் 'மாடன் யூலியன் தளம்பலின் செல்வாக்குக் காரணமாக வங்காள விரிகுடாவின் தெற்குப் பகுதி நோக்கி முகில் மற்றும் காற்றுத் தொகுதிகள் கிழக்குப் பக்கமாக நகர்வதைக் காண முடியும். சூறாவளியின் விருத்திக்கு அத்தியாவசியமான சுழலும் காற்றுக்களை வழங்குவதன் மூலம் சூறாவளிகளின் உருவாக்கத்தினை ஆதுனு தூண்ட முடியும். இந்நிலையில் வடக்காக முன்னேறிவரும் மொன்சூன் பருவக்காற்று சூறாவளியின் குத்தான விருத்தியைத் தடுக்கக்கூடிய உள்ளார்ந்த தடைக் காரணியாக இருக்கும் எனக் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் இவ்வருடத்தின் மொன்சூன் பருவகாலத்தில் வரட்சி, வெள்ளப்பெருக்கு என்பவற்றுடன் சூறாவளிகளின் நிகழ்வுகளும் அதிகளவாக இருக்கும்.



*கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்*
*முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்*
*கொழும்புப் பல்கலைக் கழகம்*

## இந்தியா ஒரு நோக்கு
### வாராந்த அலசல்



நந்தவனம் சந்திரசேகரன்

# இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்?

இந்தியாவின் அடுத்த பிரதமர் யார்? என்ற எதிர்பார்ப்புடன் மக்களவைத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இன்னும் இரண்டு நாட்களில் பிரதமர் யார் என்பது தெரிந்து விடும். ஜூன் 4ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு யார் வெற்றி பெற்றார் என்ற அறிவிப்பு வர இருக்கிறது. இதை உலகமே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் அடுத்த பிரதமர் யார் என்பதற்குப் பின்னால் நிறைய மாற்றங்களும் காத்திருக்கின்றன.

அரசியல் கட்சிகள் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகள் மக்களிடம் மிருந்த எதிர்பார்ப்பை உண்டாக்கியிருந்தாலும் இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி குறித்தும் இந்திய மக்களிடம் எதிர்பார்ப்பு இருக்கிறது. காங்கிரஸ். பா.ஜ.க இரண்டு கட்சிகளும் ஒன்றையொன்று விமர்சனம் செய்து தேர்தல் பரப்புரை செய்ததே அதிகம். நாட்டு நலனின் முன்னெடுப்புகள் பற்றிய முழக்கங்கள் மிகக்குறைவாகவே காணப்பட்டன.

இந்தியாவின் உட்கட்டமைப்பை உருவாக்கிய பெருமை காங்கிரஸ் கட்சிக்கு இருந்தாலும் நவீன இந்தியாவை உருவாக்கிய பெருமை பா.ஜ.க.வுக்கு இருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் உலக அரங்கில் இந்தியாவின் பெயரை உயர்த்திய பெருமையும் பா.ஜ.கவுக்கு இருக்கிறது. ஆனால், இதுவே வெற்றியைத் தந்துவிடுமா? என்று உறுதியாக சொல்ல முடியாது. நாட்டுக்காக காங்கிரஸ் கட்சி செய்த தியாகங்களையும் மக்கள் மறந்துவிடவில்லை.

தேர்தல் பரப்புரையில் கட்சிகள் ஒன்றையொன்று விமர்சித்துக் கொள்வது இயல்பானது, என்றாலும் இந்த முறை தேர்தல் பரப்புரைகளில் தரம் தாழ்ந்த சொல்லாடல்கள் பழிவாங்கும் நடவடிக்கைகள், திட்டமிட்ட தனி மனித தாக்குதல்கள் என்பன சற்றுக் கூடுதலாகவே இருந்தன. நாகரிகமற்ற வன்மத்தின் வெளிப்பாட்டையும் காண முடிந்தது. இதை மக்கள் எப்படி எடுத்துக் கொண்டார்கள் என்பது பற்றி ஆராய்வதற்கு யாருக்கும் நேரமில்லை.

நாங்கள் 400 இடங்களை கைப்பற்றுவோம், நாங்கள் அவர்களை வெற்றி பெற விட மாட்டோம் என்ற போட்டியிலேயே கூடுதலான கவனம் செலுத்தினார்கள் என்பதைத் தவிர, மக்களின் எதிர்வினைகள் என்ன என்பது பற்றி யாரும் ஆராயவில்லை. மக்கள் யார் பக்கம் என்று ஜூன் 4ஆம் திகதி தெரிந்து விடும். மூன்றாவது முறையாக நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி அமையுமா? இந்தியா கூட்டணியின் தலைமையில் ஆட்சி அமையுமா? என்ற விவாதங்களும் நடந்து வருகின்றன.

கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலில் பா.ஜ.க 303 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இந்தத் தேர்தலில் 400 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று பா.ஜ.க தலைவர்கள் கூறி வருகிறார்கள். ஆனால் 400 தொகுதிகளில் பா.ஜ.க வெற்றி பெறுவது சாத்தியம் இல்லை என்று அரசியல் நிபுணர்கள் கணித்துள்ளனர்

தென்னிந்தியாவில் மொத்தம் 132 தொகுதிகள் உள்ளன. இதில் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க.வுக்கு தனிப்பட்ட செல்வாக்கு இல்லை. ஆந்திராவிலும் இதே நிலைமைதான். தெலுங்கானாவில் மட்டும் பா.ஜ.க வளரத் தொடங்கியுள்ளது. ஆனால், அங்கு வெற்றி என்பது சாத்தியமில்லை. இந்த நான்கு மாநிலங்களில் பா.ஜ.க வெற்றி பெற்றாலும், ஒரு சில தொகுதிகளைத் தான் கைப்பற்றும். கர்நாடகாவில் மட்டும்தான் பா.ஜ.க இரட்டை இலக்கத்தில் வெற்றி பெற வாய்ப்புள்ளது. இந்த நிலையில் பா.ஜ.க 400 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்பு இல்லை. என்று அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.





மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்க 272 இடங்கள் தேவை. பா.ஜ.க கடந்த முறை 303 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ள நிலையில், இந்த முறை 30 தொகுதிகளுக்கு மேல் இழந்தால் ஆட்சியை தக்க வைக்க போராட வேண்டியதிருக்கும். அதற்கு கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு தேவைப்படும்.

கடந்த மக்களவை தேர்தலில் பா.ஜ.க 77 தொகுதிகளில் ஒரு இலட்சத்திற்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றது. இதில் 40 தொகுதிகளில் மிகவும் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் தான் பா.ஜ.க வென்றது. இந்த 40 தொகுதிகளை பா.ஜ.க மீண்டும் கைப்பற்றுமா என்பதில் கேள்விக்குறி எழுகிறது. இந்த 40 தொகுதிகளும் பா.ஜ.க.வின் கையை விட்டுப் போனால் பா.ஜ.க.வுக்கு பெரும்பான்மை கிடைக்காது. எனவே அதை ஈடுகட்டும் வகையில் பா.ஜ.க கூட்டணியில் உள்ள கட்சிகள் வெற்றி பெற வேண்டும். அப்படி வெற்றி பெறும் பட்சத்தில் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் பா.ஜ.கவால் மீண்டும ஆட்சி அமைக்க முடியும்.

ஆனால் கடந்த முறை ஒரு இலட்சத்திற்கும் குறைவான வாக்குகளுடன் வெற்றி பெற்ற 77 தொகுதிகளிலும் இந்த முறை பா.ஜ.க வெற்றியை இழக்கும் பட்சத்தில் அதன் கூட்டணிக் கட்சிகளால் இந்த தொகுதிகளை ஈடு செய்வது கடினம். அப்படி ஒரு சூழல் ஏற்பட்டால். அது இந்தியா கூட்டணிக்கு சாதகமாக அமையும். இதனால் ஆட்சியை அமைப்பது பா.ஜ.க.வா? இந்தியா கூட்டணியா என்ற நிலையை இந்த 77 தொகுதிகள் தான் நிர்ணயம் செய்ய உள்ளன.

அதே நேரத்தில் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு பா.ஜ.க.வுக்கு சாதகமாக இருப்பதாகவே தேர்தல் வல்லுநர்கள் கணித்துள்ளனர். இந்த தேர்தலில் பா.ஜ.க.வுக்கு 240 முதல் 260 இடங்கள் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளனர். எனவே கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் பா.ஜ.க.வால் ஆட்சியமைக்க முடியும் என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால். மக்களவைத் தேர்தலில் 350 இடங்களை கைப்பற்றுவோம் என்று இந்தியா கூட்டணியில் உள்ள தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிப்போம் என்றும் இந்தியா கூட்டணி தலைவர்கள் உறுதியாக கூறி வருகின்றனர்.

தென்மாநிலங்களில் ஏற்கனவே இந்தியா கூட்டணிக்கு ஆதிக ஆதரவு இருப்பதாகவும், தற்போது வட மாநிலங்களிலும் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு பெருகி வருவதாகவும் அந்த கூட்டணியில் உள்ள தலைவர்கள் கூறி வருகிறார்கள்.

எனவே இந்தியா கூட்டணி 350 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்கும் என்று, அவர்கள் நம்புகிறார்கள். அரசியல் கட்சிகளின் எல்லா வியூகங்களையும், அரசியல் வல்லுநர்களின் கருத்துக்கணிப்புகளையும் கடந்து மக்கள் என்ன தீர்ப்பு வழங்கியுள்ளனர் என்பது நாளை தெரிந்து விடும்.

## பெறுகை அறிவித்தல்

**மென்பொருள் முறையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக உசாத்துணையாளர்களை தெரிவு செய்வதற்காக விலைமனுக்கோரல்களை அழைத்தல் (EPMS)**
**ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சு**
**ஊவா மாகாண சபை**

ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சிற்காக மென்பொருள் முறையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக உசாத்துணையாளர்களை தெரிவு செய்வதற்காக விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

1. மேற்குறிப்பிட்டுள்ள மென்பொருள் முறை அபிவிருத்திக்கான விலைமனு அழைத்தல் மற்றும் முழுமையான விளக்கம் ஆகியன ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
   **தொடர்பு - www.sportsmin.up.gov.lk**
2. உரித்தான விலைமனு விண்ணப்ப படிவங்களை 2024.06.03 ஆம் திகதியிலிருந்து 2024.06.24 ஆம் திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள இயலுமென்பதுடன் விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2024.06.25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு மூடப்படும்.
3. மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கமான 055-2231973 ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**நிஹால் குணரத்ன**
**செயலாளர்**
**ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சு**

**ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சு,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**
**திகதி: 03.06.2024**


# இரத்தினக் கல் துறையில் அறிவியல் தோற்ற அறிக்கையின் முக்கியத்துவம் குறித்து கருத்தரங்கு

ருஸைக் பாரூக்



கொழும்பு ரத்தினக் கல் நிறுவனம் (Gemological Institute of Colombo GIC), அதன் ஆலோசகரும் ஜப்பான் ஜெர்மனி ரத்தினவியல் ஆய்வகத்தின் இயக்குநருமான மசாகி புருயாவால் (Masaki Furuya) , இரத்தினக் கல் துறையில் அறிவியல் தோற்ற அறிக்கையின் முக்கியத்துவம் குறித்து ஒரு கருத்தரங்கு நடத்தியது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பி.பி. டி சில்வா ஹோல்டிங்ஸ் தலைவர் சுனில் அமரசூரிய கலந்து சிறப்பித்தார் மற்றும் GIC இன் தலைமை நிர்வாக அதிகாரி வின் சென்ட் வோங் வரவேற்கப்பட்டார். இலங்கையின் முக்கிய நகை தயாரிப்பாளர்கள் மற்றும் ரத்தின வியாபாரிகள் பார்வையாளர்களாக கலந்து கொண்டனர்.

"தோற்றம் நிர்ணயம் மற்றும் இலங்கைக்கு அதன் நேர்மறையான தாக்கம்" என்ற தலைப்பில் புருயா அவர்களின் உரை, இரத்தினக் கற்களின் தோற்றத்தை தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் அறிவியல் முறைகளை ஆராய்ந்து,

துல்லியமான விலை நிர்ணயம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கைக்கு அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. இரத்தினக் கல்லின் தோற்றம் அதன் மதிப்பை கணிசமாக பாதிக்கிறது என்றும், குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து வரும் கற்கள்,

குறிப்பாக இலங்கையிலிருந்து வரும் கற்கள், அவற்றின் அரிதான தன்மை மற்றும் புவியியல் பண்புகள் காரணமாக அதிக விலையைப் பெறுகின்றன என்றும் அவர் எடுத்துரைத்தார்.




## சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

### சபரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்காக விண்ணப்பங்களை கோரல்

சபரகமுவ மாகாண அரச சேவையில் வெற்றிடமாகவுள்ள மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பதவிக்காக தகைமையுடைய அதிகாரிகளிடம் இருந்து நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் 2020.10.27ம் திகதிய இல. 2199/10 அதிவிசேட வர்த்தமானியின் மற்றும் 2021.10.04ம் திகதிய இல. 2248/9 அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் சேவை யாப்புக் கோவையின் விதிமுறைகள் பொருந்தும்.
02. சேர்த்துக் கொள்ளும் தகைமகள்:-
    இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையின் நிர்வாக I தரத்தின் அதிகாரியாக இருத்தல்
03. தேர்ந்தெடுக்கப்படும் விதம்: கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வை நடத்தி சிரேஷ்டத்துவம் மற்றும் திறமையின் அடிப்படையில் நியமனம் மேற்கொள்ளப்படும்.
04. சம்பள அளவு:
    SL 1 - 2016 - ரூ. 47,615 - 10x1335 - 8x1630 - 17x2170 - 110895/-
05. விண்ணப்பிக்க வேண்டிய விபரம்:
    இச் சேர்த்துக் கொள்ளலுடன் சம்பந்தப்பட்ட முழுமையான அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் www.sg.gov.lk மற்றும் www.psc.sg.gov.lk என்ற இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.
06. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.06.20 ஆகும்
07. இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**ஈ.கே.ஏ. சுனீதா**
**செயலாளர்,**
**மாகாண அரச சேவை ஆணைக்குழு,**
**சபரகமுவ மாகாணம்.**

2024.05.31ம் திகதி


# மணி குருக்களின் மாபெரும் இன்னிசை விருந்து, பாராட்டு விழா



திரையிசைத் திலகம் மணிப்பாடகர் டாக்டர் சாம்பசிவ T.M.S. மணி குருக்கள் வருடாந்தம் நடத்தும் மாபெரும் இன்னிசை விருந்தும், பாராட்டு விழாவும் எதிர்வரும் 2024.06.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை கொழும்பு 13, மேட்டுத்தெருவிலுள்ள கமலாமோடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் 50 கலைஞர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

15 மாணவ மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.மறைந்தும் மறையாது மக்களின் மனங்களில் வாழும் திரையிசைப் பாடகர்களான இசைமேதை கலைமாமணி பத்மஶ்ரீ டாக்டர் டீ. எம். செந்தராஜன், இசை சக்கரவர்த்தி கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜன், முதல் பின்னணிப் பாடகர் கலைமாமணி திருச்சி லோகநாதன், அதிர்வேட்டு குரலோன் கலைமாமணி டீ. ஆர். மகாலிங்கம் ஆகியோரை நினைவு கூரும் முகமாக இந்த இன்னிசை நிகழ்வில், இவர்கள் பாடிய பாடல்கள் பல பாடப்படும்.

இந்த விழாவில், ஆசியுரையை க.செந்தில் நாதக்குருக்கள் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ. வைத்ய வைகுந்தசிவாச்சார்யார் சிவஸ்ரீ வை.கமலநாதக்குருக்கள், சிவஸ்ரீ சிவ. நேசக்குருக்கள் தலைமை ஆறுமுகம் ரவீந்திரன் (குருசாமிகள் ஒன்றியம்)

முன்னிலை ரி.வி.டி.கதிரேசன் (பெரி) ஆகியோர் ஆன்மிக விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வாழ்த்துரை சு.ரவீந்திரகுமார் (குருசாமி ஒன்றியம்) வரவேற்பு டாக்டர் சாம்பவசிவமணிக்குருக்கள்

பிரதமர் விருந்தினர்களாக ஸ்ரீவாசம் லோகநாதன்(JP), அருணாசலம் சந்திரசேகரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், மக்கள் வங்கியின் முகாமையாளர் வேல்ராணி காத்திகேசு, கலைஞர் விஜயராஜ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.ராஜேந்திரன் (குருசாமி), க.ராமதாஸ் (குருசாமி), நந்தாமாஸ்டர் நடிகர் (குருசாமி), ஹரன், நல்லதம்பி, மகேஷ்வரன் (ரவி ஜூவல்லரி), கனக சபை சாமி, டிஸ்கோராஜா, கே.செல்வராஜன், ராஜசேகரன், ஹெலன்குமாரி ஆகியோர் அன்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நிகழ்ச்சியின் உறுதுணையாளரான தமிழ் பேராசிரியர் பிரம்ம ஸ்ரீ சசாங்கன் சர்மா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கவுள்ளார்.சித்தாரா இசையில் நடைபெறும் இன்னிசை நிகழ்வில் பிரபல தென்னிந்திய கலைஞரும் பாடகருமான கலைமோகன், சீர்காழி கோவிந்தராஜனின் மகன் சிதம்பரம் தியாகராஜன் ஆகியோருடன் இவ்விழா அமைப்பாளர் பெரும் பாடகர் திரையிசைத் திலகம் மணிப்பாடகர் டாக்டர் சாம்பசிவ மணி குருக்களும் பாடல்களைப் பாடி பரவசப்படுத்தவுள்ளார்.


## INVITATION FOR BID 2024/01
## DEPARTMENT OF INDUSTRIES (NP)
## JAFFNA

1. The **Chairman, Department Procurement Committee**, on behalf of the Provincial Director, Department of Industries, Northern Province, Adappan Road, Mani Street, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

   "*Bidding will be conducted through National Competitive Bidding (NCB). If the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)*".
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days **from 2024.06.03 -2024.06.18 in between 09:00 hrs to 15:00 hrs.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | **From 2024-06-03 until 2024-06-18** | | | |
| | **Pre-Bid Conference** | | | **At 2.30 P.M on 2024-06-10** | | | |
| | **Closing and Opening of Bids** | | | **At 10.30 A.M on 2024.06.19** | | | |
| | | | | | | **Required Bid Security** | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fees** | **Security Amount** | **Validity Period** |
| PSDG/NP/B/JA/01/2024 | Construction of Office Building for Department of Industries at Jaffna (First & Second floors structural Completion) . | 18.64 | 150 | C6 or C5 (Buildings) | 5,000.00 | 187,000.00 | Till 2024.10.02 |

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Provincial Director, Department of Industries, NP, Adappan Road, Main Street, Jaffna (T.P:021 222 9717, Fax:021 223 1532) from 09:00 hrs to 15:00 hrs. during the period from 2024.06.03 to 2024.06.18 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Department Procurement Committee, Department of Industries, NP, Adappan Road, Main Street, Jaffna on or before 10.30 A.M at 2024.06.19**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Department of Industries, NP, Adappan Road, Main Street, Jaffna** commencing at **2.30 P.M on 2024.06.10**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

**Chairman**
**Department Procurement Committee**
**Department of Industries, NP,**
**Adappan Road, Main Street, Jaffna.**



## கேள்வி அறிவித்தல்

**ஆதார வைத்தியசாலை - கரவனெல்ல**

### பொது உணவகத்திற்கான விலைமனுக்கோரல் 2024/2025ம் ஆண்டு

**கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் -** 2024.06.04 முதல் 2024.06.24 வரை அலுவலக நேரங்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை கரவனெல்ல ஆதார வைத்தியசாலையின் அலுவலகத்தின் கணக்குப்பிரிவில்,

**கேள்விகள் திறத்தல் :**
2024.06.25 மு.ப.10.30 இற்கு கணக்காளர் அறையில்

**மீளளிக்கப்படாத படிவக்கட்டணம்:** ரூ.1000.00
**கேள்விப் பிணை** : ரூ.20,000.00
**குறைந்தபட்ச கேள்வி** : ரூ.25,000.00

**கேள்விக்கு முன்னரான கூட்டம் :**
2024.06.14 மு.ப.10.00 இற்கு மருத்துவ அதிகாரியின் உத்தியோகபூர்வ அறையில்

மேலதிக விபரங்களை 036-2267848 மூலம் விசாரித்து அறியலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை - கரவனெல்ல**


# சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்



மேன்முறையீட்டு நீதியரசர் பிரபாஹரன் குமாரரட்ணம் மற்றும் சுதர்ஷனி பி. குமாரரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியான செல்வி மிதுசனா பிரபாஹரன் குமாரரட்ணம் மே மாதம் 7ஆம் திகதி சட்டத்தரணியாக செய்துகொண்டார்.

இவர் கொழும்பு பிஷப்ஸ் கல்லூரியில் (*Bishop's CollegeColombo 03*) ஆரம்ப கல்வி மற்றும் உயர்தர கல்வியை கற்று இளங்கலை சட்டபடிப்பை (*Bachelor of Laws*) லண்டன் பல்கலைக்கழகத்திலும் (*University of London*), இலங்கை சட்டக்கல்லூரியிலும் (*Sri Lanka Law College*) கற்று சித்திபெற்றவர்.


## கேள்விமனு அறிவித்தல்

### கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை

கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்கு உரிய இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களைக் குத்தகை வழங்குவதற்கெனப் பொருத்தமான விலைமனுதாரரிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கென விலைமனுக்களை முன்வைக்க உத்தேசித்துள்ள கேள்விமனுதாரர்கள் விண்ணப்பப் படிவக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையைக் காசாளரிடம் செலுத்தி நிபந்தனைகளுடனான விண்ணப்பப் படிவத்தை 2024.06.03 ஆம் திகதியிலிருந்து 2024.06.24 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை சபையில் அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்களை முதற்பிரதி, இணைப்பிரதி என வேறாக்கிப் பின்னர் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் உத்தேச குத்தகை நிலையத்தைக் குறிப்பிட்டு 2024.06.25 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் **செயலாளர், கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை, அம்பிட்டிய** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது சபையின் செயலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். மீளளிக்கப்படும் வைப்புத் தொகையான ரூ. 3000.00 பணத்தை அலுவலகக் காசாளரிடம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டையும் விலைமனுக்களுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2024-06-25 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குப் பிரதேச சபையின் அம்பிட்டிய பிரதம அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் டெண்டர் கமிட்டிக்கு உரியது.

| தொடர் இல. | ஆதனம் பற்றிய விபரம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை | கேள்விமனு படிவக் கட்டணம். | அதி குறைந்த மாதாந்தக் கேள்வி |
|---|---|---|---|---|
| 01 | கட்டுடல் பயிற்சி நிலையம் குருதெனிய | ரூ.3000.00 | ரூ.1000.00 | ரூ.50000.00 |

**தொலைபேசி இலக்கம்: 081- 2241222**

**செயலாளர்,**
**கண்டி கடவத் ஸத்தர மற்றும்**
**கங்கவட்ட கோறளே பிரதேச சபை அலுவலகம்,**
**அம்பிட்டிய,**

# கல்வி அமைச்சு

**திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்**

## வெற்றிடங்கள்

**கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவுக்கு இணைக்கப்பட்ட இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் நிரந்தர அடிப்படையில் பின்வரும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### 01. பிரதிப் பணிப்பாளர் - பிரதி அதிபர் (HM 1-3)

**தகைமைகள் -**

**வெளிவாரி -**

(A) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஓட்டோமொபைல்/ பொறிமுறை அல்லது மின் பொறியியல் துறையில் B.Sc பட்டம்.

மற்றும்

கூட்டு நிறுவனம், சபை அல்லது புகழ்பெற்ற வணிக அமைப்பு ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம், அதில் அரச துறை அல்லது தனியார் துறை அமைப்பு ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தில் 02 ஆண்டுகள் அனுபவத்துடன் பொறியியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை

அல்லது

(B) பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் கூட்டு நிறுவன அங்கத்துவம் ஒன்றை பெற்றிருத்தல்.

மற்றும்

அரச துறை அல்லது தனியார் துறை அமைப்பு ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தள பதிவு ஒன்றுடன் குறைந்தது 15 ஆண்டுகள் முகாமைத்துவ தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் அதில் 02 ஆண்டுகளில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி -**

(A) வெளிவாரி அபேட்கர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்

அல்லது

(B) சிரேஷ்ட முகாமைத்துவ (HM 1-1) பிரிவில் தலைமை பொறியியலாளர் (பயிற்சி), தலைமை பொறியியலாளர் (உற்பத்தி, சேவைகள் மற்றும் பராமரிப்பு) பதவியில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்திற்கு அமைய
HM 1-3 - ரூபா 86,865 - 2270 x 15 - 120,195/-
(தவிர, அரசாங்கம் அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறை -** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு செய்யப்படும்.

**வயதெல்லை -**

விண்ணப்ப இறுதித் திகதிக்கு 40 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 02. தலைமை பொறியியலாளர் (பயிற்சி) - (HM 1-1)

**தகைமைகள் -**

**வெளிவாரி -**

(A) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஓட்டோமொபைல்/ பொறிமுறை அல்லது மின் பொறியியல் துறையில் B.Sc பட்டத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் (முதுமாணி) அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பு சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் அனுபவம்.

அல்லது

(B) பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் சக அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவம்.

**உள்வாரி -**

(A) வெளிவாரி அபேட்கர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்

அல்லது

(B) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் தரம் 1 முகாமைத்துவ (MM) பிரிவில் உள்ள பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்திற்கு அமைய
HM 1-1 - ரூபா 80,295 - 2270 x 15 - 114,345/-
(தவிர, அரசாங்கம் அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறை** - கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு செய்யப்படும்.

**வயதெல்லை -**

விண்ணப்ப இறுதித் திகதிக்கு 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 03. பதிவாளர் - (HM 1-1)

**தகைமைகள் -**

**வெளிவாரி -**

(A) மனித வள முகாமைத்துவம், பொது நிர்வாகம், வர்த்தகம், வர்த்தக நிர்வாகம் அல்லது பதவிக்கு தொடர்புடைய ஏனைய பட்டம் ஒன்றை பெற்றிருப்பதுடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட தகைமை (முதுமாணி) மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரத்தில்" குறைந்தது பதின்மூன்று (13) ஆண்டுகள் அனுபவம்.

அல்லது

(B) பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் கூட்டு அங்கத்துவம் மற்றும் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரத்தில்" குறைந்தது பதின்மூன்று (13) ஆண்டுகள் அனுபவம்.

**உள்வாரி -**

(A) வெளிவாரி அபேட்கர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்

அல்லது

(B) தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு (முதுமாணி) தகைமையுடன் பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் தரம் 1 முகாமைத்துவ (MM) பிரிவு பதவி ஒன்றில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்திற்கு அமைய
HM 1-1 - ரூபா 80,295 - 2270 x 15 - 114,345/-
(தவிர, அரசாங்கம் அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறை -** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு செய்யப்படும்.

**வயதெல்லை -**

விண்ணப்ப இறுதித் திகதிக்கு 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 04. திட்டமிடல் அதிகாரி - (JM 1-1)

**தகைமைகள் -**

**வெளிவாரி -**

(A) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பொது நிர்வாகம், வர்த்தக நிர்வாகம் அல்லது பொருளியல் துறையில் பட்டம் ஒன்றுடன் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் முகாமைத்துவ திறன் ஒன்றில் தொடர்புடைய திட்டமிடல்/ திட்ட அமுலாக்கலுக்கு தொடர்புடைய குறைந்தது ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்வாரி -**

(A) வெளிவாரி அபேட்கர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்

அல்லது

(B) திட்டமிடல்/ திட்ட அமுலாக்கலுக்கு தொடர்புடைய குறைந்தது ஓர் ஆண்டு அனுபவத்துடன் தரம் II தொழில்நுட்பம் அல்லாத முகாமைத்துவ உதவியாளர் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்திற்கு அமைய
JM 1-1 - ரூபா 42,600 - 755x10-1135x18 - 70,580/-
(தவிர, அரசாங்கம் அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறை -** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவுகள் மூலம் தேர்வு செய்யப்படும்

**வயதெல்லை -**

விண்ணப்ப இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 05. பயிற்றுனர் - (MA 2-2)

**CGTTI**

(ஓட்டோமொபைல், குளிர்பதனம் மற்றும் வளிச்சீராக்கி, மின் வலு மற்றும் உடல் பகுதி பழுதுபார்த்தல் மற்றும் டிங்கர் வர்ணம் பூசுதல்)

**CGTTI ஆனமடுவ பிராந்திய நிலையம்**

(ஓட்டோமொபைல், Millwright, Auto Electrical, டீசல் பம்பி மற்றும் உருகிணைத்தல்)

**தொழிற்கல்வி -**

ஓட்டோமொபைல்/ Mechatronic/ Millwright/ மின் வலு/ வளிச்சீராக்கி மற்றும் குளிர்பதனம்/ Tool Machinery/ Auto Electrical/ டீசல் பம்பி/ உருகிணைத்தல்/ மோட்டார் வாகன உடல் பாகத்தை பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் அல்லது வகுப்பு சித்தி ஒன்றுடன் (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு) CGTTI முழு நேர சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்ட CGTTI விற்கு தொடர்புடை வேறு ஏதேனும் துறைகளில் தேசிய தொழில் தகைமை (N.V.Q.) தரம் 5 இற்கு குறையாத டிப்ளோமா கற்கை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

ஓட்டோமொபைல்/ Mechatronic/ Millwright/ மின் வலு/ வளிச்சீராக்கி மற்றும் குளிர்பதனம்/ Tool Machinery/ Auto Electrical/ டீசல் பம்பி/ உருகிணைத்தல்/ மோட்டார் வாகன உடல் பாகத்தை பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் துறையில் இறுதிப் பரீட்சையில் வகுப்பு சித்தி (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு) ஒன்றுடன் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் 04/ 3 1/2/ 03 ஆண்டு முழு நேர சான்றிதழை பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் குறைந்தது மூன்று (03) ஆண்டு காலத்திற்காக தொடர்புடைய விடயத்தில் தொழில்துறை அல்லது கற்பித்தல் அனுபவம்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்திற்கு அமைய
MA 2-2 - ரூபா 30,310 - 300x10-350x07-600x04-710x20 - 52,360/-
(தவிர, அரசாங்கம் அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறை -** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவுகள் மூலம் தேர்வு செய்யப்படும்.

**வயதெல்லை -**

விண்ணப்ப இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

### 06. பயிற்றுனர் - தமிழ் மொழி மூலம் - (MA 2-2)

**தொழிற்கல்வி -**

ஓட்டோமொபைல்/ Mechatronic/ Millwright/ மின் வலு/ வளிச்சீராக்கி மற்றும் குளிர்பதனம்/ Tool Machinery/ Auto Electrical/ டீசல் பம்பி/ உருகிணைத்தல்/ மோட்டார் வாகன உடல் பாகத்தை பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் அல்லது வகுப்பு சித்தி ஒன்றுடன் (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு) CGTTI முழு நேர சான்றிதழுடன் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்ட CGTTI விற்கு தொடர்புடை வேறு ஏதேனும் துறைகளில் தேசிய தொழில் தகைமை (N.V.Q.) தரம் 5 இற்கு குறையாத டிப்ளோமா கற்கை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

ஓட்டோமொபைல்/ Mechatronic/ Millwright/ மின் வலு/ வளிச் சீராக்கி மற்றும் குளிர்பதனம்/ Tool Machinery/ Auto Electrical/ டீசல் பம்பி/ உருகிணைத்தல்/ மோட்டார் வாகன உடல் பாகத்தை பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் துறையில் இறுதிப் பரீட்சையில் வகுப்பு சித்தி (முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு) ஒன்றுடன் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் 04/ 3 1/2/ 03 ஆண்டு முழு நேர சான்றிதழை பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் குறைந்தது மூன்று (03) ஆண்டு காலத்திற்காக தொடர்புடைய விடயத்தில் தொழில்துறை அல்லது கற்பித்தல் அனுபவம்.

**சம்பள அளவு -** 02/2016 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்திற்கு அமைய
MA 2-2 - ரூபா 30,310 - 300x10-350x07-600x04-710x20 - 52,360/-
(தவிர, அரசாங்கம் அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறை -** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் முடிவுகள் மூலம் தேர்வு செய்யப்படும்.

**வயதெல்லை -**

விண்ணப்ப இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**அனைத்து பதவிகளின் பொதுவான நிபந்தனைகள்**

- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உள தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
- மேலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். அவர் அந்தக் காலப்பகுதியின் நிறைவில் காண்பிக்கின்ற திருப்திகரமான செயல்திறன் மற்றும் நடத்தைக்கு அமைய பதவியில் நிரந்தரமாக்கப்படும். தற்போது பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்கள் 01 ஆண்டு கண்காணிப்புக் காலத்திற்கு உட்பட்டிருக்கும்.
- மேலுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு குறித்த பதவியின் ஆரம்ப சம்பளப் படிக்கு அமைவானதாகும்.
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு சம்பளத்தில் 08% அறவிடப்படுவதோடு அதற்கு நிறுவனத்தின் பங்களிப்பு 12% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக 3% ஆகும்.

**விண்ணப்பதாரர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நிழல் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.**

**(a) பிறப்புச் சான்றிதழ்**
**(b) கல்வி மற்றும் தொழில் தகைமையை உறுதி செய்யும் சான்றிதழ்கள்**
**(c) ஊழியர் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்**
**(d) தேசிய அடையாள அட்டை**

தற்போது அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை மற்றும் திணைக்களங்களில் பணியாற்றும் நபர்கள் தமது நிறுவன தலைவர் மூலம் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும் என்பதோடு விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்படுவதாயின் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவர் உறுதி செய்தல் வேண்டும். உறவினர் அல்லாத உங்களைப் பற்றி வினவ முடியுமான இருவரை உள்ளடக்கிய முழு விபரங்கள் கொண்ட விண்ணப்பம் ஒன்றை தம்மால் உறுதி செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2024.06.17ஆம்** திகதிக்கு முன்னர் **முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் மனித வளம், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், இலக்கம் 582, காலி வீதி, கல்கிசை** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு குறுகிய பட்டியலிடப்படும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் கருத்தில்கொள்ளப்படமாட்டாது.

ஆட்சேர்ப்புக்கு எந்த ஒரு வகையிலும் ஆதரவு திரட்டல் தகுதி இழப்பாக அமையும்.

**பணிப்பாளர் - அதிபர்**
**இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்**
**இலக்கம் 585, காலி வீதி**
**கல்கிசை.**



சுகாதார அமைச்சு, சுதேச வைத்திய பிரிவு

# இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

## விலை ஒப்பீட்டு முறைமையின் கீழாக இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025ஆம் வருடம்

கீழே காணப்படும் மூலப்பொருள் வகைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையுமோ வழங்க முடியுமான நபர்கள் அல்லது நிறுவனங்கள் எமது கூட்டுத்தாபனத்தில் வழங்குநர்களாக 2025ஆம் வருடத்தில் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-24ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கிராம மட்டத்திலுள்ள மருந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், மருந்தை சேகரித்து வழங்குபவர்கள், மருந்து விவசாய அமைப்புகள், அரச நிறுவனங்கள் மற்றும் மருந்து விவசாய சங்கங்களும் பதிவு செய்யப்படவுள்ளன.

**01. கொள்வனவு செய்யப்படும் மூலப்பொருட்கள் வகை/பொருட்கள்/ சேவைகள்/ வேலைகள்**

i. **உலர்ந்த மூலப்பொருட்கள் (உள்ளூர்)**
   i. **உதாரணம் :** கடுக்காய், அத்தன மற்றும் அசோக பட்டை, விளைச்சல் மற்றும் வேர்கள், எலபட்டு, புளு, பொல்பலா, வில்வம் வேர், எஹல பட்டை போன்ற மூலப்பொருட்கள் அண்ணளவாக 150 வகைகள் அளவில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ வழங்க முடியுமாக இருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தால் எதிர்பார்க்கப்படும் தரத்திற்கேற்ப நன்றாக உலர வைத்து அவற்றை வழங்கல் வேண்டும். (5% - 10% வரையான ஈரப்பதன் மட்டுமே இருத்தல் வேண்டும்)

ii. **உலர்ந்த மூலப்பொருட்கள் (இறக்குமதி செய்யப்பட்டவை)**
   i. பத்பாடகம், ஓமம், கரோல் அரிசி, கந்தகம், அமுக்கரா கிழங்கு, குகுல், களுதுரு, கட்பல பட்டை, மருத்துவ முந்திரிப்பழம், பீணகரோசண ஆகிய அண்ணளவாக 70 வகைக்கும் மேற்பட்ட மூலப்பொருட்கள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கும் தரத்திற்கு உங்களுக்கு வழங்க முடியும்.

iii. **பச்சையாகப் பெற்றுக்கொள்ளப்படும் மூலப்பொருட்கள்**
   i. ஆடாதோடை இலை, பட்டை, ஆடாதோடை வேர், ஆடாதோடை மற்றும் வேர், சாம்பல் வாழை கிழங்கு, எம்புல் எம்புளிய மற்றும் வேர், புளித்தோடை, அங்கென்த இலை பட்டை, அத்தன இலை, அத்தன வேர், எலபட்டு காய், யக்வனஸ்ஸ, எலஒலிந்த, எரபது இலை, பட்டை, அரச மரத்தின் பட்டை, வெற்றிலை, தெமட்ட காய், மாதுளம் பழம், விளாம் பழ மர பட்டை, திய ஹபரல, மிளகு வேர், கஸ்பெலை காய், கிரிநில்ல இலை, கொடி வல்லாரை, ஹம்பில்ல, ஹாதாவாரி கிழங்கு உட்பட உள்ளூரில் விளையும் அதிகளவான மூலப்பொருள் வகைகள் இத்தொகுதிக்குள் உள்ளடங்கும். இத்தொகுதியின் கீழ் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது, மூலப்பொருட்கள் தனித்தனியே கொள்வனவு செய்யப்படமாட்டாது. உங்களால் ஒரு மருத்துவப் பட்டியலிற்காக (வேலைப் பத்திரம்) தேவைப்படும் அனைத்து மூலப்பொருட்களையும் வழங்க வேண்டும்.
   ii. உதாரணமாக நீலயாதி தைலத்தைத் தயாரிப்பதற்காகத் தேவைப்படும் அங்கெந்த இலை மற்றும் பட்டை, மதடிய இலை மற்றும் பட்டை, கொடி கெப்படியா இலை மற்றும் பட்டை, தியபரல, நில்அவரிய இலை என்பன தேவையான அளவு ஒரு வழங்குநரால் வழங்கப்படுதல் வேண்டும்.
   iii. இவ்வாறான 30 வேலைப் பத்திரங்கள் உள்ளதுடன், இஞ்சி, பச்சை மஞ்சள், எலுமிச்சை, ஹாதாவாரி கிழங்கு, சாம்பல் பூசணி, தேங்காய், கித்துள் கருப்பட்டி என்பனவற்றை தனித்தனியாக வழங்கலாம்.
   iv. பச்சை இலை, பட்டை, வேர் வகைகள் என்பவற்றை வழங்கும் போது அவை உயிருள்ள தாவரங்களிலிருந்து பெறப்பட்டு 03 தினங்களுக்குள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

iv. **வாசனைத் திரவியங்கள்**
கிராம்பு, கொரக்கா, வெந்தயம், மிளகு, கொத்தமல்லி, வெள்ளைப்பூடு, சாதிக்காய், ஏலம், வஸாவாசி, பெருஞ்சீரகம், நற்சீரகம் என்பவை ஆயுர்வேத மருந்து உற்பத்திக்கு இயைபான குணாம்சங்களை கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

v. **எண்ணெய் மற்றும் திரவ வகைகள்**
கடுகு எண்ணெய், நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், வெள்ளை தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், டர்பன்டைன், தேன் மற்றும் ஏனைய எண்ணெய் மற்றும் திரவ வகைகள்

இயைபுடைய எண்ணெய் மற்றும் திரவ வகைகள் இலங்கை தரக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் தரத்திற்கு அமைவாக இருக்க வேண்டும் என்பதுடன் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மருத்துவச் சபை மற்றும் ஆய்வுகூடத்தின் பரிசீலனை மூலமாக வழங்கப்படும் எண்ணெய் மற்றும் திரவ வகைகளின் தரம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

vi. **கண்ணாடி போத்தல்கள் (உபயோகிக்கப்படாதது)**
உணவு மற்றும் மருந்து வகைகளை பொதி செய்வதற்கு பொருத்தமான சர்வதேச தரங்களுக்கமைவான உபயோகிக்கப்படாத கீழே குறிப்பிடப்பட்டுள்ள போத்தல் வகைகள்.
1. 1 அவுன்சு முதல் 750 மில்லி லீற்றர் வரையிலான வெள்ளை நிறமான போத்தல்கள்
2. 200/250/400/450 கிராம் வரையிலான வெள்ளை நிறமான ஜேம் போத்தல்கள்
3. 100/200/500 மில்லி லீற்றர் வரையிலான கபில நிறமான போத்தல்கள்

vii. **போத்தல் மூடி (அலுமினியம்)**
அச்சிடப்பட்ட/ அச்சிடப்படாத கீழுள்ள அளவுகளிலான அலுமினியம் மூடிகள்.
31.5 மி.மீ/ 28 மி.மீ./ 25 மி.மீ./ 22 மி.மீ.

viii. **அச்சிடப்பட்ட / அச்சிடப்படாத நெளிவுடைய அட்டைப் பெட்டிகள்** (கொருகேடற்/ Corrugated Boxes)

ix. பொலித்தீன், அச்சிடப்பட்ட பொதிகள், செலோ பேன், அச்சிடப்பட்ட பொலித்தீன் பேக், கிறின்க் கெப், அலுபொயில், அலுமினியம் பொயில், டீ பேக் (Tea Bag) Bopp Cut Sheet
   **கவனிக்கவும்:** (மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 2017-09-05ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பாவனைக்கு உகந்த பொலித்தீனாகவிருத்தல் வேண்டும்)

x. **Maisa Envelope** அச்சிடல் ( Tea bag, Tea Envelope Printing, Customer Tea Bag Printing)

xi. **கணனி/ கணனி துணையுறுப்புகள்/ வலையமைப்பு உபகரணங்கள்/ மை / டோனர் / ரிபன் / கார்ட்ரிச் / அச்சு இயந்திரம்**

xii. **காகிதாதிகள்** (பேனைகள்/ பென்சில்கள் / ஸ்டெப்ளர் / கடித உறைகள்/ புகைப்படப் பிரதி தாள்கள் / வேறு எந்தவொரு வகையான அலுவலக காகிதாதிகள்)

xiii. **மின்சாரப் பொருட்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்கல்** (வயர், ஸ்விட்ச், சொக்கட், பல்ப் போன்றவை)

xiv. **வளிச்சீராக்கி இயந்திரங்கள் / திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல்.**

xv. **கட்டிடப் பொருட்கள்** (கல், மணல், சீமெந்து, உருக்குக் கம்பி, GI Pipe, GI Box, Metal L-Bar, Iron Mesh, Aluminum/Aluminum Partition / Curtains நிறப்பூச்சு ஆகியன)

xvi. **கட்டிட நிர்மாணம், திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு** (சிறிய மற்றும் நடுத்தர அளவுடையது) **அலுமினிய உருப்படிகள்** (நிர்மாணம், நவீனமயப்படுத்துதல் மற்றும் உள்ளக பகுதி பிரிப்புகள் மற்றும் வேறு எந்தவொரு வகையிலான கட்டிட நிர்மாணப் பொருட்கள்)

xvii. **அலுவலக உபகரணங்கள்** (பலகை, இரும்பு, பிளாஸ்டிக், MDF, மெலமைன் போன்றவற்றால் தயாரிக்கப்பட்டுள்ள அலுவலக மேசை, கதிரை, இராக்கை, கபர்ட் போன்ற எந்தவொரு வகையான தளபாடங்களும்)

xviii. **வாகன உதிரிப்பாகங்கள், திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல்**

xix. **உற்பத்தியக இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்**

xx. **உற்பத்தியக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள்**

xxi. **வார்ப்பு / உருக்கியொட்டுதல் மற்றும் கடைசல் இயந்திர வேலைகள்** (இரும்பு / வெள்ளியிரும்பு, MIG Welding, TIG Welding, GAS Welding, SPOT Welding, Electric Welding போன்றன)

xxii. **இரசாயனப் பொருட்கள்**
பேஷ்வொஷ்/ பொடி வொஷ்/ ஷெம்பூ/ ஹர்பல்வைன்/ ஹர்பல் ட்ரிங்க் என்பனவற்றுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள்

xxiii. **ஆய்வுகூட உபகரணங்கள்** (Erlenmeyer Flask/ Buret/ Beaker/ Florence Flask/ Funnel/ Test tubes/ Clamps/வேறு எந்தவொரு வகையான இரசாயனம் சார்ந்த பொருட்கள்)

xxiv. **பிளாஸ்டிக் போத்தல்கள் / பிளாஸ்டிக் போத்தல் மூடிகள்**
கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்படும் மருந்துப் பொருட்களை பொதி செய்வதற்காக பொருத்தமான சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரமொன்றாக இருத்தல் வேண்டும். (Food Grade)

xxv. **அச்சு வேலைகள்** (லேபல்/ ஸ்டிக்கர்/ பொதியிடும் பெட்டிகள் / கையேடுகள் / சுவரொட்டிகள் / பதாகைகள் / பெயர்ப்பலகை/ கடித உறைகள் / கோப்பு உறைகள் போன்றவை)
(இதன் பொருட்டு அச்சக உரிமையாளர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்)

xxvi. **பாதுகாப்பு உபகரணங்கள்** (Construction/Welding/Electrical/Workshop/Lab/கையுறைகள்/முகக் கவசங்கள் / சகல வகையான சப்பாத்துகள்)

xxvii. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (தும்புத்தடி/ ஈர்க்கிள்/ தூரிகைகள்/ கால்துடைப்பம்/ சவர்க்காரம்/ சுத்திகரிப்புத் திரவங்கள்….)

xxviii. **விவசாய உபகரணங்கள்** (வீல்பரோ/மண்வெட்டி/முள்ளு/ இறப்பர் குழாய்கள் /Sekator / Alkathene pipe/ உர வகைள் / நீர்க் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்கள் / மற்றும் எந்தவொரு வகையான விவசாயப் பொருட்களும்)

xxix. **தேயிலை / பால்மா**

xxx. **சீருடைகள் வழங்குதல்** (உடைகள் தைத்தல்/ சீருடைத் துணி வகைகள் வழங்குதல்)

xxxi. **சேதப்படுத்தும் விலங்குகளை கட்டுப்படுத்தும் சேவைகள்** (நுளம்பு/ கரையான் / மூட்டைப்பூச்சி/ இழையான் / எலி/ கரப்பான் பூச்சி போன்ற சேதப்படுத்தும் விலங்குகளைக் கட்டுப்படுத்துதல்)

xxxii. **துப்புரவேற்பாட்டு வேலைகள் தொடர்பான சேவைகள் வழங்குதல்** (அலுவலக சுத்திகரிப்பு / மலசலகூடங்கள் / அலுவலக சுற்றுப்புறங்களை சுத்தம் செய்தல் மற்றும் வேறு எந்த வகையான சுத்திகரிப்பு வேலைகள்)

xxxiii. **பாதுகாப்பு சேவைகள் வழங்குதல்**

xxxiv. **லேபல் வடிவமைப்புகளுக்கான நிறுவனங்கள்.**

xxxv. **சிற்றுண்டிகள் வழங்குதல் காலை மற்றும் இரவு உணவு வழங்குதல்.** (மஹரகம, நுகேகொட, பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய, கொட்டாவ)

02. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :** மாதிரிப் விண்ணப்பப் படிவங்களை www.sladc.lk, www.ayurveda.gov.lk மற்றும் www.health.gov.lk எனும் இணையதளங்களிலிருந்தும் மற்றும் https://www.facebook.com/ayurvediccorp/ முகநூல் பக்கத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பதுடன் அல்லது அந்த மாதிரிப் படிவத்தின் பிரகாரம் உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அல்லது நாவின்ன, தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து விண்ணப்ப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'தலைவர், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

**விசேடம்:** 2025ஆம் வருடத்தின் பொருட்டு நீங்கள் / உங்களது நிறுவனம் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்து கொள்வதானால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு அதாவது 2024-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கூட்டுத்தாபனத்திற்குக் கொண்டு வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்படும். தபால் சேவைகளில் ஏற்படும் தாமதம் காரணமாக உங்களின் / உங்களது நிறுவனத்தின் விண்ணப்பப் படிவங்கள் தாமதமாகக் கிடைக்கும் என்பதுடன் அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (2024-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள்) தபாலில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு உங்களது விண்ணப்பப் படிவத்தை ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு முன் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025'' எனவும் மற்றும் விண்ணப்பிக்கும் பொருள், சேவை மற்றும் வேலை வகுதி என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்.

03. **பதிவுக்கான கட்டணம் :** ஒரு வழங்கல் வகுதிக்கான பதிவுக் கட்டணம் 1000.00 ரூபாவாகும் உதா: உலர்ந்த மருந்திற்கான பதிவு 1000.00 ரூபாவாகும். எண்ணெய் வகைகளுக்கான பதிவு 1000.00 ரூபாவாகும் (அவ்வாறான 3 வகைகளுக்கான பதிவுக் கட்டணம் 3000.00 ரூபாவாகும்.)

இதன் பொருட்டு **''தலைவர் - இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்''** எனும் பெயரில் காசுக் கட்டளையொன்றை அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை செலுத்தும் அலுவலகம் மஹரகம தபால் நிலையமெனக் குறிப்பிடுதல் வேண்டும். இதற்குப் புறம்பாக கூட்டுத்தாபனத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தலாம். அரச நிறுவனங்களுக்கு பதிவுக் கட்டணம் விலக்களிப்புச் செய்யப்படும். விண்ணப்பத்துடன் வங்கிப் பிணை/ காசுக் கட்டளை/ காசாளருக்கு பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்தனுப்புதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. (பதிவு செய்யப்படுவதற்காக செலுத்தப்பட்ட பதிவுக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது)

04. **வழங்குநர்களைப் பதிவு செய்தல் :** உரிய தினத்தில் கிடைக்கப்பெறும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுக்கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்த்து, அவற்றில் தகுதியானவைகள் 2025ஆம் வருடத்தின் பொருட்டு இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் வழங்குநர்களாக பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறு பதிவு செய்யப்படும் வழங்குநர்களுக்கு அது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

**இவ் அறிவித்தல் கீழ்க்காணும் இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.**
- இணையதளம் - www.sladc.lk - இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்
- கூட்டுத்தாபன முகநூல்: https://www.facebook.com/ayurvediccorp/
- இணையதளம் - www.health.gov.lk - சுகாதார அமைச்சு
- இணையதளம் - www.ayurveda.gov.lk - ஆயுர்வேதத் திணைக்களம்

**மேலதிக விபரங்களுக்காக அழைக்கவும்:**
- பொது தொலைபேசி - 011-2850229
- வழங்கல் முகாமையாளர் - 011-2840162
- இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில்
- மின்னஞ்சல் - ayurvedicdrugs@sltnet.lk / chairmanayurveda@gmail.com / itsladc@gmail.com
- தொலைநகல் - 011-2844357

**கலாநிதி அனுர அதுலத்முதலி,**
**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்.**

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 235,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 யூன் 05ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124I067 | LKA18224L068 | LKA36425F061 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 40,000 | 75,000 | 120,000 | 235,000 |

| | |
|---|---|
| ஏலவிற்பனைத் திகதி | : 2024 யூன் 05 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2024 யூன் 07 |
| வழங்கப்படும் திகதி | : 2024 யூன் 07 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2024 யூன் 05 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✳ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**110**

**மாருதி கார்கள்**
விற்பனைக்கு

K L-2855 MARUTI W AGON R, 2010, அதியுயர் விலை க்கு. வெலிப ல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 036348

## வேலைவாய்ப்பு

**320**

**வெற்றிடங்கள்**
ஹோட்டல்கள், பேக்கரிகள்

பேக்கரிக்கு பாஸ்மார்கள், மேசை வேலைக்கார ர்கள், போறணைக்கார ர்கள், உதவியாளர்கள் தே வை. 149, டீன்ஸ் வீதி, கொழும்பு10. வெயிட்டர்கள் தேர்ச்சியு ள்ள, தேர்ச்சியற்றவர்க ள். 0777571207. 035220

Repeat Your ad For Better Offers

---

# அரசாங்க அலுவலர்களின் நலன்புரி சங்கம் (GOBA)

## 115 ஆம் வருடாந்த பொதுக் கூட்டம்
## இறுதி அறிவித்தல்

அரசாங்க அலுவலர்களின் நலன்புரி சங்க சட்டத்தின் 13(i) ஆம் பிரிவின் பிரகாரம் 114 ஆம் வருடாந்த பொதுக் கூட்டமானது கொழும்பு-07, ரோயல் கல்லூரி, ''நவரங்கஹல'' இல் 2024 ஜூன் 15 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செல்லுபடியாகும் தன்மையிலுள்ள அங்கத்துவத்தைக் கொண்டுள்ள அங்கத்தினர்கள் ''வருடாந்த அறிக்கையை'' தபால் மூலம் அவர்களின் தனிப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்வார்கள். ஒப்படைக்கப்படாத, பெற்றுக் கொள்ளப்படாத அறிக்கைகள் தொடர்பாக 2024 ஜூன் 10 ஆம் திகதிக்கு முன்னராக எனக்கு அறிவிக்கும்படி அனைத்து அங்கத்தினர்களையும் நான் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். உங்களின் தற்போதய முகவரியிலுள்ள எந்தவொரு மாற்றங்கள் தொடர்பாக செயலாளருக்கு அறிவிக்காவிடில் உங்கள் விபரங்களின் கீழ் குறிப்பிட்டுள்ள தற்போதய முகவரிக்கு ஆவணங்கள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளதென தயவு செய்து கருத்திற் கொள்ளவும்.

கூட்டத்திற்கு சமுகமளிக்கும் வேளையில் தேசிய அடையாள அட்டை திணைக்களத்தின் ஆவணமொன்று அல்லது செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கடவுச்சீட்டொன்று அல்லது செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சாரதி உரிமம் அல்லது ஓய்வூதியர் அடையாள அட்டையைக் கொண்டுவருவது கட்டாயமானதாகுமென்பதுடன் பைகள் மற்றும் பொதிகள் ஆகியவற்றைக் கொண்டுவருதலை முடிந்தளவு தவிர்த்தல் நல்லது.

அனைத்து பதிவு செய்தல் கருமபீடங்களும் பி.ப. 12.30 மணிக்கு மூடப்படுவதினால் பி.ப. 12.30 மணிக்கு பின்னர் வருகைதரும் எவரும் கூட்ட மண்டபத்திற்கு நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்களென்பதுடன் எந்தவொரு படி (allowance) அல்லது வாக்குச் சீட்டுக்களும் (ballot papers) வழங்கப்பட மாட்டாது.

**முகாமைத்துவ குழுவின் கட்டளைப்பிரகாரம் -**

**பிலிப் எமலினி,**
**செயலாளர் மற்றும் கணக்காளர்,**
**2024 ஜூன் 01 ஆம் திகதியன்று.**

**த.பெட்டி 871. இல. 65/1, அ.அ.ந.ச. அவென்யு,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011 2434598, 2473633, 2473100.**
**இணையதளம்: www.goba.lk**

---

புத்தசாசன, மத, மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு

# மத்திய கலாச்சார நிதியம்

## கொள்முதலுக்கான கோரல்

மத்திய கலாசார நிதியத்தின் யாழ் செயற்திட்ட அலுவலகத்தை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பதற்கு தேவையான அலுவலக வசதிகளுடன் கூடிய கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான கேள்விகோரல் கோரப்படுகின்றன.

01. இக்கட்டிடத்தின் அலுவலக வசதிகளுக்காக உட்புறம் குறைந்தது **4000 சதுர அடியாக** இருத்தல் வேண்டும்.
02. குறித்த கட்டிடத்தில் குறைந்தது **03 கழிவறைகள் மற்றும் குளியலறைகள்** இருத்தல் வேண்டும்.
03. குறித்த கட்டிடத்தின் இடம் யாழ்ப்பாண நகர எல்லையிலிருந்து **03½** கி.மீக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
04. குறித்த இடத்திற்கு இலகுவாக சென்றடைய கூடிய வீதி / போக்குவரத்து வசதிகள் (பேருந்து செல்லும் பாதைக்கு அருகில்) இருத்தல் வேண்டும் மற்றும் குறைந்தது 02 வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தக்கூடிய வாகன நிறுத்துமிடமாக இருத்தல் வேண்டும்.
05. குறித்த கட்டிடத்தில் **தண்ணீர் / மின்சாரம் மற்றும் தொலைபேசி** வசதிகள் இருத்தல் வேண்டும்.
06. குறித்த கட்டிடத்தில் **ரூ.15,000.00** க்குக் குறைவான பழுதுபார்ப்புகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் மேலும் **ரூ.15,000.00** க்குக் அதிகமான பழுதுபார்ப்புகள் கட்டிட உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
07. உரிமையாளர் மட்டுமே விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்க வேண்டும் மேலும் உரிமையாளர் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக சொத்தின் தெளிவான உரிமையைக் கொண்டிருக்க வேண்டும். அந்தந்த இடத்திற்கான பத்திரங்கள் மற்றும் உரிமை ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
08. பூர்த்தி செய்யப்பட்ட கொள்முதல் ஆவணங்களை **2024.06.07** ஆம் திகதிக்கு **பி.ப.2.00 மணிக்கு** முன்னர் **"தலைவர், கொள்முதல் குழு, மத்திய கலாச்சார நிதியம், இல-28, மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம அனுப்ப வேண்டும் அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடல் வேண்டும்.
09. மனு ஆவணங்களை மத்திய கலாச்சார நிதியத்தின் யாழ் திட்ட அலுவலகத்தில் **2024.06.07** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம். தொ.பே.021-2213711 இலக்கத்தினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
10. மனுக்கள் **2024.06.07** ஆம் திகதி **பி.ப.2.05** மணிக்கு மனு ஏற்றுக்கொள்ளப்பட்ட அதே இடத்தில். திறக்கப்படும். மேலும் அச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது உரிமம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்.
11. தாமதமான அல்லது முழுமையடையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
12. கொள்முதல் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதி தீர்மானமாக கருதப்படும்.

**பணிப்பாளர்,**
**மத்திய கலாச்சார நிதியம்**
**கொழும்பு - 07**
**தொ.பேசி இல : திட்ட முகாமையாளர் - 011-2552671, 076-1890672 வழங்கல் உதவியாளர் 077-9143436**

SELACINE

The Housewives' companion
Classifieds on
Daily News

# பெறுகை அறிவித்தல்

## பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி

**வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்**

### பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி – 2024ஆம் வருடம்

2024ஆம் வருடத்தினுள் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரிக்குரித்தான பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

அ. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களினால் சகல பொருட்களும் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரிக்கு போக்குவரத்து செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

ஆ. இதில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் வேலை நாட்களில் 1000 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை உருப்படிகளுக்கு முன்னால் தரப்பட்டுள்ள திகதிகளில் பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரியில் அந்த விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்காகவும் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தை பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரிக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரர்களினால் முறையாக கையொப்பமிடப்பட்ட விலைக்கோரல்களை உத்தியோகபூர்வ முத்திரையைப் பதித்ததன் பின் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்தில் (பொருள் வகை) விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்'' கேள்வி இலக்கம் (DSCSC/2024/CAPITAL/ES/050) திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**சூரிய சக்தி முறைமையொன்றை நிறுவுதல்**

| தொ. இல. | கேள்வி அடையாள இலக்கம் | விபரங்கள் | பெறுகை முறை | அளவு | | விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும் திகதி | விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திறக்கப்படும்/ முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | DSCSC/2024/ CAPITAL/ES/50 | Establishment of Grid Tie 40 KW Inverter Pv Solar Power System | தேசிய போட்டி ரீதியில் விலைக் கோரல் | 1 | எண்ணிக்கை | 2024-06-03ஆம் திகதி முதல் 2024.06.25ஆம் திகதி வரை | 2024-06-26ஆம் திகதி மு.ப. 1100 மணிக்கு | **1,000.00** |

2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தேவையான மேலதிக விபரங்களை 0112962189 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**இராணுவத் தளபதி,**
**பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலை கல்லூரி,**
**சப்புகஸ்கந்த.**

---

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**கமத்தொழில் அமைச்சு**

**விவசாயப் பிரிவு**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**கமத்தொழில் அமைச்சு**

## விவசாய துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்

## IDA Credit No.: 5873 LK

# பெறுகை அறிவித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பின்வரும் வேலைகளுக்காக இந்த ஒப்பந்தத்தின் கீழ் தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் சார்பாக மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சிவில் ஆகுசெலவு (மில்.ரூபா) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவைப்படும் தரம் | பிணைப் பாதுகாப்பு தொகை (ரூபாவில்) | பிணைப் பாதுகாப்பு செல்லுபடி யாகும் காலப் பகுதி | மீளளிக்கப் படாத ரொக்கப்பண வைப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| LK/MOA-PMU-260975-CW-RFB | பொலன்னறுவ மாவட்டத்தில் செவணபிட்டியவில் காய்ந்த மிளகாய் பதனிடும் நிலைய நிர்மாணம் | 25,139,815.55 | 5.0 மாதங்கள் | சி-5 அல்லது மேற்பட்டது கட்டடம் | 251,398.15 | 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதியன்று வரையும் | 7000.00 |
| LK/MOA-PMU-260973-CW-RFB | அநுராதபுர மாவட்டத்தில் கிரலோகமவில் காய்ந்த மிளகாய் பதனிடும் நிலைய நிர்மாணம் | 25,857,034.20 | 5.0 மாதங்கள் | சி-5 அல்லது மேற்பட்டது கட்டடம் | 258,570.34 | 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதியன்று வரையும் | 7000.00 |
| LK/MOA-PMU-364761-CW-RFB | பொலன்னறுவ மாவட்டத்தில் கல்தலாவயில் பப்பாளிப்பழ சேகரிப்பு நிலைய புனர்நிர்மாணம் | 30,619,479.67 | 5.0 மாதங்கள் | சி-5 அல்லது மேற்பட்டது கட்டடம் | 306,194.79 | 2024 செபடெம்பர் 23 ஆம் திகதியன்று வரையும் | 8000.00 |

3. செல்லுபடியாகும் திகதியுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு விலைமனுப் பிணையொன்றுடனும் மேலேயுள்ள பணிக்காக ஒரு விலைமனுவை மாத்திரம் முன்வைப்பதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் பெற்றவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்திற்காக உரித்தான நிர்மாணத்துறையில் பதிவுபெற்றிருத்தல் வேண்டும்.

4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

5. விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.

6. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, NIPHM இடப்பரப்பு, விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், மாகாண செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்டு (தொலைபேசி: 025 2227890/0718072078/0712801063) (மின்னஞ்சல்: asmpncp17@gmail.com) கேள்வி ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் 2024 ஜுன் 3 ஆம் திகதியிலிருந்து 2024 ஜுன் 24 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் பரீட்சிக்கலாம்.

7. அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, NIPHM இடப்பரப்பு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

8. விலைமனுக்கள் 2024 ஜுலை 31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. 2024 ஜுன் 3 ஆம் திகதியிலிருந்து 2024 ஜுன் 24 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணிவரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், அநுராதபுரம், ஜயந்தி மாவத்தை, NIPHM இடப்பரப்பு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் மாகாண செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

11. 2024 ஜுன் 26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மாகாண செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம், விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், NIPHM இடப்பரப்பு, ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம் என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2024 ஜுன் 26 ஆம் திகதியன்று பி.ப. 2.15 மணிக்கு குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

12. பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**NIPHM இடப்பரப்பு, ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்.**
**திகதி: 2024 ஜுன் 03 ஆம் திகதி.**

---

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

**மல்வத்த வலி பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி**
**(Malwatte Valley Plantations PLC)**

## வருடாந்த பொதுக் கூட்டம் – 2024

மல்வத்த வலி பிளாண்டேசன்ஸ் இன் முப்பதாவது (30) வருடாந்த பொதுக் கூட்டமானது 2024 ஜுன் 25 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-12, டாம் வீதி 280 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனியின் சபை அறையில் மெய்நிகராக்கல் வழியாக நடைபெறும்.

பதிலாள் பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புள்ள ஆவணங்கள் இக்கம்பனியின் **www.malwattevalley.com** என்ற உத்தியோகபூர்வ இணையதளத்திலும் **www.cse.lk** என்ற கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

---

**தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் – களுத்துறை**
**கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் - 2024**

# கேள்விக்கான அழைப்பு

களுத்துறை தேசிய சுகாதார நிறுவனத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பழுது பார்த்தல்கள் மற்றும் மேம்படுத்தல் வேலை விடயங்களுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த விபரம் | ICTAD குறைந்த பட்ச தரம் | அடிப்படைச் செலவு ரூபா மில்லியன் | ஒப்பந்த காலம் நாட்கள் | கேள்விப் பிணைப் பெறுமதி ரூபா | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | Renovation of the existng EVE Celing at Female Hostel (Three Story Building) | C8 C7 C6 | 4.5 | 63 | 91,400.00 | 3500.00 |
| 02 | Roof Renovation Work at Beruwala MOH | C5 C6 C7 | 6.8 | 63 | 136,400.00 | 3500.00 |
| 03 | Improvements of the 98/4B Quarters | C8 C7 C6 | 4.0 | 63 | 80,000.00 | 3500.00 |

மேற்படி வேலை பற்றிய சகல விபரங்களையும் கேள்வி ஆவணங்களுடன் பெற்றுக் கொள்ளலாம்

2024.06.01 முதல் 2024.06.13 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) களுத்துறை தேசிய சுகாதார நிலையத்தின் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். 2024.06.14 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்வி திறத்தலுக்கு முன்னரான கூட்டம் 2024.06.10 மு.ப. 10.00 இற்கு தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தில் நடைபெறும்.

தொ.பே. இலக்கம்: 034-2222264/ 034-2222001
நிர்வாகப் பிரிவின் நீடிப்பு: 237/333

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம்,**
**களுத்துறை.**

---

# விலைக்கோரல் அழைப்பு

## மாவட்டச் செயலகம், நுவரெலியா

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் பின்வரும் செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையினைப் பயன்படுத்தி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

| உருப்படிகள் | மீளளிக்கப் படாத விலைக் கோரல் வைப்பு ரூபா | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் காலம் மற்றும் இடம் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதி நாள் | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் திகதி மற்றும் நேரம் இடம் | CIDA நிறுவனத்தின் பதிவு |
|---|---|---|---|---|---|---|
| 1. சம்பத் வங்கியிலிருந்து தர்மபால சுற்றுவட்டம் வரை பாதசாரிகள் கடவை மிகுதி பகுதியை அமைத்தல் | 3,000.00 | 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-19ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மாவட்டச் செயலக கணக்கிடல் பிரிவில் | ரூபா 110,000.00 2024-09-24 | 2024-06-20 | நுவரெலியா மாவட்டச் செயலக ஆஸ்வரிய மண்டபம் 2024-06-12 - மு.ப. 10.00 மணிக்கு | C7-C6 (கட்டிடங்கள் / பெருந்தெருக்கள்) |
| 2. விக்டோரியா பூங்காவின் மகளிர் மலசலகூடத்திற்கு அருகில் நிலத்தை சீராக்குதல் மற்றும் நடக்கும் தளத்தை அமைத்தல் | 3,000.00 | | ரூபா 110,000.00 2024-09-24 | | | |
| 3. விக்டோரியா சிறுவர் பூங்காவில் நீர் வடிந்தோடலை முறைப்படுத்துதல் | 3,000.00 | | ரூபா 110,000.00 2024-09-24 | | | |
| 4. கிரகரி வாவியில் படகுகளை நிறுத்தி வைத்தலை முறைப்படுத்துதல் மற்றும் ஜெட்டி பொருத்துதல் | 1,500.00 | | ரூபா 110,000.00 2024-09-24 | | | C7 - C6 கட்டிடங்கள் / நீர்ப்பாசனம் |

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-06-20ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், நுவரெலியா எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது விலைமனுதாரர் / அவரின் பிரதிநிதியொருவரினால் நேரில் கொண்டுவந்து மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் உள்ள செயலாளர் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுக் கிடைக்கச் செய்யலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ........................ செயற்படுத்துவதற்கான விலைமனு கோரல்'' என உருப்படியைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம். நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் உள்ள செயலாளர் பிரிவில் 2024-06-20ஆம் பி.ப. திகதி 02.15 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட தினம் பி.ப. 02.15 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக் கோரலின் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக தகவல்களை அறிந்துகொள்வதற்கு பிரதான பொறியலாளரை (தொ.பே. 052-2224941) தொடர்புகொள்ளலாம் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**தலைவர்,**
**மாவட்டச் செயலக பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**நுவரெலியா.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

## டி20 உலகக் கிண்ணம்:

# இலங்கை இன்று முதல் போட்டியில் தென்னாபிரிக்காவுடன் பலப்பரீட்சை

டி20 உலகக் கிண்ணத்தில் டி குழுவுக்காக இலங்கை அணி இன்று (03) தனது முதல் போட்டியில் தென்னாபிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெறும் இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இன்று இரவு 8 மணிக்கு அரம்பமாகவுள்ளது. கடந்த ஒரு தசாப்பத்தில் இல்லாத அளவுக்கு வலுவான அணி ஒன்றுடனேயே இலங்கை அணி இம்முறை உலகக் கிண்ணத்திற்கு களமிறங்கியுள்ளது.

சரிசமமான அணி ஒன்றுடன் உலகக் கிண்ணத்தில் பங்கேற்றிருக்கும் இலங்கை அணியின் பந்துவீச்சு முன்னேப்போதும் இல்லாத அளவுக்கு வலுவாக உள்ளது. துடுப்பாட்ட வரிசையில் அதிரடி வீரர்கள் தொடர்பில் குறைபாடு இருந்தபோதும் கடைசியாக நடத்த அயர்லாந்துக்கு எதிரான பயிற்சிப் போட்டியின் முன்னாள் அணித்தலைவர் தசுன் ஷானக்க துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு இரண்டிலும் சோபித்திருப்பது நம்பிக்கை தருகிறது.

'நல்ல ஓட்டம் ஒன்றை பாதுகாக்கும் வகையில் எமது பந்துவீச்சு குழாம் இருப்பதோடு ஓரிரு துடுப்பாட்ட வீரர்கள் அதிக ஓட்டங்களை பெற முடியுமாக இருந்தால் எமக்கு எந்த ஓர் அணிக்கும் சவால் விடுக்க முடியும்" என்று இலங்கை அணியுடன் ஆலோசகராக அமெரிக்கா சென்றிருக்கும் சனத் ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம் டி குழுவில் தர வரிசையில் முன்னிலை பெற்ற அணியாக இருக்கும் தென்னாபிரிக்க அணியில் அணித் தலைவர் அய்டன் மார்க்ரம், குயின்டன் டி கொக், எய்டன் மார்க்ரம் மற்றும் ஹெய்ன்ட்ரிக் கிளாஸனின் அதிரடி ஆட்டம் எந்த ஒரு அணிக்கும் சவாலான தாகும்.

அதற்கு ஏற்ப ககிசோ ரபாடா, சுழற்பந்து வீரர் கேஸவ் மஹராஜ் மற்றும் தப்ரிஸ் ஷம்சி போன்ற வலுவான பந்துவீச்சு வரிசையும் உள்ளது.



## இலங்கையின் பயண தாமதத்தால் அதிருப்தி

டி20 உலகக் கிண்ண போட்டியில் பயணத் தாமதத்தை எதிர்கொண்டுள்ள இலங்கை அணி பயிற்சி மேற்கொள்வதிலும் இடையூறை எதிர்கொண்டுள்ளது. தென்னாபிரிக்கா மற்றும் அயர்லாந்து அணிகளும் இதே நிலையை சந்தித்துள்ளன.

புளொரிடாவில் அயர்லாந்துக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் ஆடிய இலங்கை அணி நியூயோர்க் செல்வதற்கான விமானப் பயணத்தில் ஏழு மணி நேர தாமதம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்க நேரப்படி நியூயோர்க் நகரை வெள்ளிக்கிழமை இரவு எட்டு மணிக்கு சென்றடைய திட்டமிட்டபோதும் அடுத்த நாள் அதிகாலை ஐந்து மணிக்கே அங்கு சென்றடைய முடிந்துள்ளது.

இதனால் அன்று காலை திட்டமிடப்பட்ட துடுப்பாட்ட பயிற்சியும் ரத்து செய்யப்பட்டிருப்பதோடு உலகக் கிண்ண தயார்படுத்தலிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இலங்கை அணி தங்கி இருக்கும் ஹோட்டல் பயிற்சி மைதானத்தில் இருந்து 1.5 மணி நேர தூரத்தில் இருப்பது வீரர்களுக்கு மேலும் களைப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

இதற்கு மாறாக இந்திய அணி தனது மைதானத்திற்கு அருகில் உள்ள ஹோட்டலிலேயே தங்குவதோடு பெரும்பாலான போட்டிகளை ஒரு மைதானத்தில் ஆடுவது மேலதிக பயணங்களை தவிர்த்து அந்த அணிக்கு வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஏற்பாட்டு திட்டங்கள் மற்றும் மேசமான தயார்படுத்தல்கள் தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலிடம் (ஐ.சி.சி.) இலங்கையுடன் தென்னாபிரிக்கா மற்றும் அயர்லாந்தும் முறையிட்டிருப்பதாக தெரிய வருகிறது. குறிப்பாக இலங்கை அணி ஆரம்ப சுற்றில் ஆடும் நான்கு போட்டிகளும் வெவ்வேறு மைதானங்களில் இருப்பது மேலதிக சுமையாக உள்ளது. போட்டியில் அணிகள் சரிசமமாக நடத்தப்படாதது குறித்தே அதிருப்தி அதிகரித்துள்ளது.



## டி20 உலகக் கிண்ணம்:

# வாணவேடிக்கையுடன் முதல் போட்டியில் வென்றது அமெ.



டி20 உலகக் கிண்ணத்தின் ஆரம்பப் போட்டியில் அரோன் ஜோன்ஸின் அதிரடி ஆட்டத்தால் போட்டியை நடத்தும் இணை நாடான அமெரிக்கா கனடாவை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இலங்கை நேரப்படி நேற்று (02) காலை டலாஸில் உள்ள கிராண்ட் பிரைரி மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனடா அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களை பெற்றது. நவ்னீத் தலிவால் (61) மற்றும் நிகலஸ் கேர்டன் (51) அரைச்சதம் பெற்றனர்.

இந்நிலையில் குறுகிய பௌண்டரி எல்லைகளைக் கொண்ட முன்னாள் பேஸ்போல் மைதானத்தில் பதிலெடுத்தாட வந்த அமெரிக்க அணி முதல் இரு விக்கெட்டுகளையும் முன்கூட்டியே பறிகொடுத்தபோதும் 3ஆவது விக்கெட்டுக்காக அன்ட்ரியஸ் கௌஸ் (65) மற்றும் அரோன் ஜோன்ஸ் 131 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டு வெற்றியை நெருங்கச் செய்தனர். இதன்போது நியூயோர்க்கில் பிறந்து பார்படோஸில் வளர்ந்த ஜோன்ஸ் 40 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் 10 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 94 ஓட்டங்களைப் பெற்றார். இதன்மூலம் அமெரிக்க அணி 17.4 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 197 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. இது டி20 உலகக் கிண்ண வரலாற்றில் துரத்தப்பட்ட மூன்றாவது அதிகூடிய வெற்றி இலக்காக பதிவாகியுள்ளது. கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் முதல் முறையாகவே உலகக் கிண்ணத்தில் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரா பதக்கம் வென்றோருக்கு டயலொக் நிறுவனம் பாராட்டு



இலங்கையின் முதன்மையான இணைப்பு வழங்குனரும் இலங்கை விளையாட்டின் பெருமைமிகு ஆதரவாளருமான டயலாக் ஆசிஆட்டா பிஎல்சி, இலங்கை சார்பாக உலகப் பாரா மெய்வல்லுனர் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்களை அண்மையில் தமது தலைமையகத்தில் நடைபெற்ற விழாவில் கௌரவித்தது. டயலொக் அனுசரணை பெற்ற இந்தக் குழுவினர், அண்மையில் ஜப்பானின் கோபே நகரில் நடைபெற்ற உலக பரா மெய்வல்லுனர் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தி மூன்று பதக்கங்களை பெற்றிருந்தனர்.




# தென்னாபிரிக்காவில் கூட்டணிக்குப் பேச்சு

தென்னாபிரிக்க பொதுத் தேர்தலில் கடந்த மூன்ற தசாப்தங்களில் முதல் முறையாக அறுதிப் பெரும்பான்மையை இழந்துள்ள ஆளும் ஏ.என்.சி. கட்சி புதிய அரசொன்றை அமைப்பதற்கான கூட்டணி பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததாக நேற்று (02) அறிவித்தது.

கடந்த புதனன்று இடம்பெற்ற தேர்தலில் 99.91 வீதமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஜனாதிபதி சிரில் ரமபோசாவின் ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் 40.2 வீத வாக்குளை வென்றுள்ளது. 2019 தேர்தலில் 57.5 வீத வாக்குகளை வென்ற அந்தக் கட்சிக்கு இது பெரும் பின்னடைவாக உள்ளது.

'மக்களின் விருப்பை பிரதிபலிக்கும் வகையில் நிலையான மற்றும் திறம்பட ஆட்சி புரியக்கூடிய அரசொன்றை அமைக்க ஏ.என்.சி. உறுதிபூண்டுள்ளது' என்று ஆளும் கட்சியின் செயலாளர் நாயகம் பிகில் இம்பலுலா நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் முடிவு தென்னாபிரிக்க வரலாற்றில் திருப்புமுனையாக பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்கா நெல்சன் மண்டேலா தலைமையில் வெள்ளையின சிறுபான்மையினரின் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்று ஜனநாயக அட்சிக்கு திருப்பிய 1994 தொடக்கம் நடந்த அனைத்து தேர்தல்களிலும் ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும்பான்மையை வென்று வந்தது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் ஜனாதிபதி தேர்தல்: அஹமதினஜாத் வேட்புமனு

ஈரானில் இந்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு கடும்போக்காளரான முன்னாள் ஜனாதிபதி மஹ்மூத் அஹமதினஜாத் நேற்று (02) வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மே 19 ஆம் திகதி இடம்பெற்ற ஹெலி விபத்தில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி கொல்லப்பட்ட நிலையில் புதிய ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஜூன் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

67 வயதான அஹமதினஜாத் 2005 தொடக்கம் 2013 வரை தொடர்ச்சியாக இரண்டு தவணைகள் ஜனாதிபதியாக பதவி வகித்துள்ளார்.

அவரது பதவிக் காலத்தில் இஸ்ரேல் மற்றும் மேற்குலகத்துடன் முறுகல் அதிகரித்திருந்ததோடு ஈரானின் அணுசக்தி திட்டமும் வலுப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் ஜனாதிபதி வேட்பாளருக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு ஈரானின் 12 நீதிபதிகள் கொண்ட பாதுகாவலர் சபை ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்



# போர் நிறுத்தத்திற்கு இணங்க இஸ்ரேல், ஹமாஸுக்கு மத்தியஸ்தர்கள் வலியுறுத்து: மோதல் தொடர்கிறது

## பைடனின் அறிவிப்பால் இஸ்ரேலிய அரசிலும் குழப்பம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்த போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் திட்டத்திற்கு இணங்கும்படி இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பை மத்தியஸ்தர்கள் வலியுறுத்தி வரும் நிலையில் காசாவில் மோதல் மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்தும் நீடித்து வருகின்றன.

பைடன் கடந்த வெள்ளியன்று வெள்ளை மாளிகையில் பேசியது தொடக்கம், ஹமாஸை ஒழிப்பது மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் வரை போர் தொடரும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தி வருகிறார். எனினும் நெதன்யாகு இஸ்ரேலுக்குள் பெரும் அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளார்.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஆதரவான ஆர்ப்பாட்டக்காரர்கள் உடன்பாடு ஒன்றை எட்டும்படி அழுத்தம் கொடுத்து டெல் அவிவில் சனிக்கிழமை பாரிய பேரணியை நடத்தியதோடு உடன்பாட்டுக்கு சென்றால் கூட்டணி அரசில் இருந்து விலகுவதாக தீவிர வலசாரிகள் எச்சரித்துள்ளனர்.

மறுபுறம் எட்டு மாதங்களாக நீடிக்கும் போரை நிறுத்தும் உடன்பாட்டுக்குச் சென்றால் அரசுக்கு ஆதரவு வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் யாயிர் லபிட், நெதன்யாகுவுக்கு உறுதி அளித்துள்ளார்.

எவ்வாறாயினும் காசாவில் நேற்றும் உக்கிரம் மோதல் நீடித்ததோடு தொடரும் வான் தாக்குதல்கள் மற்றும் தரைவழி மோதல்களுக்கு மத்தியில் மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பேசிய நெதன்யாகு, "ஹமாஸ் அமைப்பு மற்றும் அதன் ஆட்சித் திறனை அழிப்பது மற்றும் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிப்பது மற்றும் காசா தொடர்ந்து இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதி செய்வது ஆகிய போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகளில் மாற்றமில்லை" என்றார்.

எனினும் இஸ்ரேலிய திட்டமாக பைடன் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட திட்டத்தை சாதகமாக பார்ப்பதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 'ஜனாதிபதி ஜோ பைடனினால் குறிப்பிடப்பட்ட திட்டத்தை உள்ளடக்கிய உடன்படிக்கையை இறுதி செய்யும்படி இரு தரப்பையும் அழைப்பதாக' அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்கள் கேட்டுள்ளனர்.

போர் நிறுத்தத்திற்கு மூன்று கட்ட திட்டம் ஒன்றை இஸ்ரேல் வழங்கி இருப்பதாகவும் ஆறு வாரங்கள் கொண்ட முதல் கட்டத்தில் காசா பகுதியில் மக்கள் செறிந்துள்ள அனைத்து இடங்களில் இருந்தும் இஸ்ரேலிய படை வாபஸ் பெறும் என்று பைடன் கடந்த வெள்ளியன்று குறிப்பிட்டிருந்தார். இதன்போது குறிப்பிட்ட எண்ணிக்கையான பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டு அதற்கு பகரமாக இஸ்ரேலிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்.

தொடர்ந்து இறுதியாக போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்பதோடு பேச்சுவார்த்தை நீடிக்கும் வரை போர் நிறுத்தம் தொடரும் என்று பைடன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பைடன் முன்வைத்த திட்டம் குறித்து நெதன்யாகு முரண்பாட்டை வெளியிட்டுள்ளார். இஸ்ரேலினால் முன்வைக்கப்பட்ட சரியான திட்டத்தில், ஒரு கட்டத்தில் இருந்து மற்றொரு கட்டத்திற்கு மாறுவது நிபந்தனைக்கு உட்பட்டது என்றும் அது தமது போர் இலக்கை பேணுவதற்கு அனுமதி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது என்றும் வலியுறுத்தினார்.

இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் தீவிர வலதுசாரி கட்சிகளின் தலைவர்களான நிதி அமைச்சர் பெசலல் ஸ்மொட்ரிச் மற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் இடாமர் பென் கிவிர், இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட விரைவிலேயே திட்டத்திற்கு இணங்கினால் அரசில் இருந்து வெளியேறுவதாக எச்சரித்தனர்.

தமது கட்சி அரசை கலைப்பதாக பென் கிவிர் 'எக்ஸ்' சமூகதளத்தில் எச்சரித்த அதேநேரம், 'ஹமாஸ் அழிக்கப்பட்டு மற்றும் அனைத்து பணயக் கைதிகளும் திரும்பும் வரை போரை தொடர்வதற்கு நாம் வலியுறுத்துகிறோம்' என்று ஸ்மொட்ரிச் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு காசாவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் திரும்புவதையும் கைதிகள் பரிமாற்றம் ஒன்றில் 'பயங்கரவாதிகள் ஒட்டுமொத்தமாக விடுவிக்கப்படுவதையும்' எதிர்ப்பதாகவும் ஸ்மொட்ரிச் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பைடனின் முக்கியமான உரையை அரசினால் அலட்சியம் செய்ய முடியாது என்று குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேலின் மையவாத முன்னாள் பிரதமர் லபிட், இந்தத் திட்டத்தை ஏற்க வேண்டும் என்றும் கூட்டணி கட்சிகள் வெளியேறினால் நெதன்யாகு அரசுக்கு தாம் ஆதரவு வழங்குவதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் ஜனாதிபதி இசாக் ஹெர்சன் தாம் நெதன்யாவுடன் பேசியதாக நேற்று தெரிவித்தார். பணயக்கைதிகளை விடுவிக்க முடியுமான உடன்படிக்கை ஒன்றுக்கு முழு ஆதரவை அரசுக்கும் அவருக்கும் வழங்குவதாக குறிப்பிட்டதாக அவர் கூறினார்.

இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டு 250க்கும் அதிகமானவர்கள் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட நிலையிலேயே காசா போர் வெடித்தது.

அது தொடக்கம் இஸ்ரேலியப் படை காசா மீது தரை, வான் மற்றும் கடல் மார்க்கமாக இடைவிடாது தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் இதுவரை 36,400 பேர் கொல்லப்பட்டு மேலும் 82,627 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று (2) தெரிவித்தது.

காசா மக்களின் கடைசி அடைக்கலமாக இருந்த தெற்கு நகரான ரபா மீது இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் துருப்புகள் கடந்த மே ஆரம்பித்தில் நுழைந்தது தொடக்கம் அங்கு கடும் மோதல் மற்றும் இஸ்ரேலின் சரமாரி வான் தாக்குதல்கள் நீடித்து வருகின்றன.

மத்திய ரபாவில் இஸ்ரேலிய ஹெலிகள் சூடு நடத்தியதோடு மேற்கு தல் அல் சுல்தான் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது போர் விமானம் ஒன்று ஏவுகணை வீசியது. தெற்கு பிராசில் பகுதியில் கடும் பீரங்கி தாக்குதல்கள் இடம்பெற்றதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தவிர காசா நகரின் செய்தூன் மற்றும் சப்ரா பகுதிகளில் இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் சூடு நடத்தியதோடு நகரின் கிழக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசா நகரின் டராஜ் குடியிருப்பு பகுதியில் உள்ள அடுக்கமாடி குடியிருப்பு ஒன்றின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் ஒரு பெண் மற்றும் ஒரு குழந்தை உட்பட மூவர் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 3ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை

01. கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் பெறுகைக் குழுவினால் கீழ்க்காணும் செயற்றிட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பத்திரிகை அறிவித்தலில் பிரசுரமான தினம் முதல் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி : 2024.06.19ம் திகதி பி.ப. 15.00
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 2024.06.20ம் திகதி மு.ப. 10.00
கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்: ஏற்றுக் கொண்டு முடிவடைந்தவுடன்

| தொடர் இல. | வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை ரூ. | CIDA பதிவு வகுதி |
|---|---|---|---|
| 01 | கொட்டிகாவத்த பிரதேச சபைக்கு சொந்தமான உடுமுல்ல இறுதிச் சடங்கு மண்டபத்தின் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்தல் | 5,000,000.00 | C-8 அல்லது C-7 |

2. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத தகைமையான கேள்விதாரர்களுக்கு காசாக மீளளிக்கப்படாத ரூ. 3500/- கட்டணத்தைச் செலுத்தி முழுமையான ஒரு கேள்வி கோரல் பத்திரத்தை செயலாளர், கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொத்தட்டுவ புதிய நகரம் என்ற முகவரிக்கு வியாபார கடிதத் தலைப்பில் எழுதப்பட்ட விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 2024.06.19 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

3. பிரதேச சபையின் தலைமையகத்திற்கு வாரத்தின் வேலை நாட்களில் சாதாரண அலுவலக நேரம் (மு.ப. 9.00 - பி.ப. 3.00) இற்குள் வருகைதந்து கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிப்பதற்கு முடியும். அத்துடன் மேலதிக விபரங்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்காக வேலை அதிகாரி தொ.பே. இல. 011-2410288 ஊடாக தொடர்பு கொண்டு அல்லது இணையதள முகவரி kmpsdev@gmail.com மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

4. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும்போது ரூ. 50,000.00 பெறுமதியுடைய நிபந்தனையற்ற வேண்டுதலின் பேரில் செலுத்தப்படும் கேள்விப் பிணையொன்றை செயலாளர், கொட்டிகாவத்த, முல்லேரியாவ பிரதேச சபையின் பெயருக்கு வழங்கப்பட வேண்டியதுடன் அதனை காசாக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியின் மூலம் விநியோகிக்கப்படும் வங்கிப் பிணைமுறியாக இருத்தல் வேண்டும். வங்கிப் பிணை முறி கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 2024.08.05 வரை செல்லுபடியாதல்.

5. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகள் என குறிப்பிட்டு இரு கடித உறைகளில் இட்டு அக்கடித உறைகள் இரண்டையும் மீண்டும் தனி உறையில் இட்டு அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபைக்கு சொந்தமான கொட்டிகாவத்த இறுதிச் சடங்கு மண்டபத்தை நிர்மாணித்தல்' என்று பெயர் குறிப்பிட்டு 2024.06.20 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு சபையின் தலைமையகத்தின் செயலாளர் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். முடிவடைந்தவுடன் கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் தலைமையகத்தின் கூட்ட மண்டபத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

6. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் உங்களுக்கு அல்லது உங்களால் பெயர் குறிப்பிடப்படும் உங்கள் நிறுவனத்தின் பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

7. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கொட்டிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.

8. செயற்றிட்டத்திற்கான ஒப்பந்த காலம் உடன்படிக்கைக்கு உட்படும் தினம் முதல் 03 மாத காலமாகும். அத்தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்பு வேலை முடிந்து ஒப்படைத்தல் வேண்டும்.

9. இவ் அறிவித்தல் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி விளம்பரங்களில் ஏதேனும் தொடர்பற்ற தன்மையொன்று ஏற்படின் சிங்கள மொழி விளம்பரம் பிரகாரம் செயற்படுதல் வேண்டும்.

**செயலாளர்,**
**கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை,**
**கொத்தட்டுவ புதிய நகரம்.**
**தொ.பே.: 011 2410288, 011 2410770**

---

போக்குவரத்துச் மறறும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

# கேள்விமனு கோரும் அறிவித்தல்

**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம் 2024ஆம் வருட கட்டுமானங்களுக்கென சீல் வைக்கப்பட்ட கேள்வி மனுக்களை பெற்றுக்கொள்ளும்.**

கட்டுமான வேலைகளின் விபரங்கள் பின்வருமாறு.

| விபரம்: | வழங்கல் காலம | மீளப்பெற முடியாத வைப்பு: | மீளப்பெறக்கூடிய கேள்விமனு கட்டணம | ICTAD பதிவு |
|---|---|---|---|---|
| நுகேகொடை தலைமை அலுவலகத்தில் சாரதிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஓய்வு அறைகளை புதுப்பித்தல் | 90 நாட்கள் | Rs. 4,000/- | ரூ.90,000/- (77 தினங்களுக்குச் செல்லுபடியாக வேண்டும்) | C 7 அல்லது அதற்கு மேல் |
| எல்லைச் சுவற்றை இடித்தல் மற்றும் மீள் நிர்மாணம் செய்தல் | 60 நாட்கள் | Rs. 3,000/- | ரூ.33,000/- (77 தினங்களுக்குச் செல்லுபடியாக வேண்டும்) | C 8 அல்லது அதற்கு மேல் |

கேள்விமனு ஆவணங்களை 2024 ஜுன் 03ஆம் திகதி முதல் 2024 ஜுன் 24ஆம் திகதி வரை மு.ப. 9.00க்கும் பி.ப. 3.00 க்கும் இடையே இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்கியல் பிரிவிலுள்ள கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட மீளப்பெற முடியாத பண வைப்பைச் செலுத்தி இந்த ஆவணங்களைக் கொள்வனவு செய்ய முடியும். கேள்விமனுப் பத்திரங்கள் மீளப்பெறக்கூடிய வைப்புத் தொகையுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த வைப்புப் பணம் இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.
ஒப்பந்த வேலையைப் பெறும் ஒப்பந்தகாரர்கள் தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

சீல் வைக்கப்பட்ட கேள்விமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடையிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் 2ஆம் மாடியிலுள்ள கணக்கியல் பிரிவில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கடடுமான வேலைகள்" என்று குறிப்பிடவும்.

நுகேகொடை தலைமை அலுவலகத்தில் உள்ள சாரதிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஓய்வு அறைகளை புதுப்பித்தல், நுகேகொடை கேள்வி மனுக்கள் 24 ஜுன் 2024 ஆம் திகதி பிற்பகல் 1 மணியுடன் நிறைவடைகிறது. மேலும் எல்லைச் சுவற்றை இடித்தல் மற்றும் மீள் நிர்மாணம் செய்தவதற்கான மனுக்கள் அதே தினம் பிற்பகல் 2 மணியளவில் நிறைவடைகிறது. அதன் பிறகு உடனடியாக திறக்கப்படும். கேள்வி மனுக்கள் திறக்கப்படுகின்ற வேளையில் மனுதாரர்கள் அல்லது அவர்களை பிரதிநிதிபடுத்துபர்கள் வருகை தருவதற்கு அனுமதி வழங்கப்படும்.

தலைவர்,
திணைக்கள கொள்முதல் குழு,
தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்
இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.
தொலைபேசி: **0112 814862 / 0112814865 / 0112 089 231**

---

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு
## குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை

## வாகன தரிப்பிடத்தை நடாத்திக்கொண்டு செல்லல் - 2024-2025

குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024/25ஆம் வருடத்தில் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் வாகனத் தரிப்பிடத்தை நடாத்திக் கொண்டு செல்வதற்காக அதில் அனுபவம் வாய்ந்தவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் விலைக்கோரல் ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத தொகையை குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளர்/ சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன், தமது தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து 2024-06-04ஆம் திகதி முதல் 2024-06-24ஆம் திகதி வரையில் மு.ப. 10.00 முதல் பி.ப. 4.00 மணி வரையில் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | விலைக்கோரல் ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|
| வைத்தியசாலை வாகன தரிப்பிடத்திற்கு | 1000.00 |

2. விலைக்கோரல் விண்ணப்பங்களை மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியாக தயாரித்து, இரண்டு உறைகளில் உள்ளிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''2024/25 வருடத்தில் வைத்தியசாலை வாகனத் தரிப்பிடத்தை நடாத்திச் செல்லல் - போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டிய'' எனக் குறிப்பிட்டு 2024-06-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

3. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

4. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலிடப்பட்ட நபர்களுக்கு விலைமனுக்கள் வழங்கப்பட மாட்டாது.

5. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(037-2281261 - நீடிப்பு 295)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டிய.**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
## விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவனம்

1. ஏறக்குறைய 3 மில்லியன் ரூபா (வெட் இன்றி) மொத்த மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதும் மற்றும் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| உருப்படி இல. | ஒப்பந்த இல. | செயற்றிட்டத்தின் பெயர் | நிர்மாணக் காலம் (நாட்கள்) | ஆகக் குறைந்த ICTAD பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ISM-04/AD/01/ 2024/Build/01 | விளையாட்டுதுறை மருத்துவ நிறுவனத்தின் கீழ் உள்ள இடப்பரப்புகளின் பராமரிப்பு வேலைகள் | 365 நாட்கள் | C8 மற்றும் EM4 அல்லது அதற்கு மேல் | 3,500.00 | 45,000.00 வங்கி வைப்பு அல்லது 45,000.00 ரொக்கப் பண வைப்பு |

2. மொத்த வேலைகளின் முடிவுறுத்தல் காலமானது வேலை ஆரம்பிக்கப்படும் நாள் முதல் 365 நாட்களாகவிருத்தல் வேண்டும்.

3. இந்த வேலைத்தளமானது கொழும்பு-07, இல. 33, மெயிட்லன்ட் பிளேஸ், விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவனத்தில் அமைந்துள்ளது.

4. குழாய் வேலைகளைப் பராமரித்தல், சிவில் மற்றும் இயந்திரவியல் பராமரிப்பு வேலைகள் மற்றும் பொருட்கள் வழங்குதல் என்பன பிரதானமாக இந்த வேலைகளில் உள்ளடங்கின்றன.

5. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக இந்த விலைக்கோரல் இடம்பெறும்.

6. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராகவும், C8 மற்றும் EM4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கான ICTAD பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை வேலை நாட்களில் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையில் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தின் (பொறியியல் சேவைகள்) பொறியியல் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தை விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவில் காசாளருக்குச் செலுத்தியதன் பின் 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-24ஆம் திகதி 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரையில் மேற்கூறிய முகவரியில் உள்ள விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

9. அட்டவணையின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கீர்த்தி வாய்ந்த வங்கியிலிருந்து பெற்ற விலைக்கோரல் பிணை முறியொன்று அல்லது கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் பெயரில் விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பிரிவில் காசாளருக்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாளிலிருந்து 119 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும்.

10. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும்.

11. நகல் பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு 2024-06-25ஆம் திகதி 1400 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். (விலைமனுக்களை விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்). பிந்திய விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

**மேற்கூறிய முகவரியானது:**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவனம்,**
**இல. 33, மெயிட்லன்ட் பிளேஸ்,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: 0112695953**
**தொலைநகல்: 0112669885**

## சுகாதார அமைச்சு

# மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான பெறுகை அறிவித்தல்

## Cath Lab இயந்திரமொன்றை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

**(ஒப்பந்த இல. BES/PG/PLAN/2024/05)**

1. கீழே குறிப்பிடப்பட்ட மருத்துவ சாதனங்களின் வழங்கலுக்கான முத்திரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடியிலுள்ள சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சின் பெறுகைக் குழு “A” தலைவரினால் கீழே தரப்பட்டுள்ள திகதி மு. ப. 10.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

| | உருப்படி | கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி | | முடிவுறுத்தல் திகதி | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | மதிப்பீட்டுச் செலவு (ரூபா) (மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|
| | | இருந்து | வரை | | | |
| 1 | 01 No. Cath Lab Machine | 2024-06-03 | 2024-06-24 | 2024-06-25 | 35,000.00 | 280 |

2. இலங்கை சந்தைக்கென முன்வைக்கப்பட்ட சாதனங்களைத் தயாரிப்பவர்களினால் ஏக நியமனம் பெற்ற பிரதிநிதியாக/ அங்கீகாரம் பெற்ற முகவராக உள்ளவர்கள் மட்டுமே இந்த விலை கூறலில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

3. முத்திரை பொறிக்கப்பட்ட முழுமையான நகல்பிரதி சகிதம் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதியை மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) எந்தவொரு ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
(தொ. இல. 011-2112713, 2112715 - தொலைநகல்: 011-2112745)

4. கேள்வியின் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும்.

5. கேள்வி ஆவணங்களை கொழும்பு -10, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம், 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதார அமைச்சு, மேலதிக செயலாளரிடமிருந்து (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. சகல கேள்விதாரர்களும் 4,200,000.00 ரூபாவிற்கான கேள்விப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியானது 2024-09-23ஆம் திகதி (91 நாட்கள்) வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் அது கொழும்பு-10, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, சுகாதார அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

7. மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல: 011-2112713.

8. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-10, இல. 27, டி சேரம் பிளேஸ், சுகாதார அமைச்சு, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் / DDG அலுவலகத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சின் கொள்வனவுக் குழு “A”**
**சுகாதார அமைச்சு,**
**02ஆம் மாடி, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடம்,**
**சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு 10.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம் வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## கரதியான திரவ உர நிலைய நிர்மாண செயற்றிட்டத்திற்கு குழாய்க் கிணறொன்றை நிர்மாணித்தல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2024/33**

இந்த அதிகார சபையின் பின்வரும் சேவைகளை மேற்கொள்வதற்கு இவ்வாறான வேலைகளை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| S/No | Item Description | Unit | Quantity | Bid Bond | |
|---|---|---|---|---|---|
| | | | | Cash (Rs) | Bank/Insurance Bond |
| 01 | Geo-Technical Investigation | Item | 01 | 7,500.00 | 15,000.00 |
| 02 | Construction of 30m Deep tube Well (160 mm PVC casing) using DTH technque with 12m Upve 6" casing | Item | 01 | | |
| 03 | Extra PVC Casing more than 12m | m | | | |
| 04 | Drilling Beyond 30m depth | m | | | |
| 05 | Supply & Installation of Submersible Deep | Item | | | |
| | ● Supply & Delivery of motor control panel for the above pump as per the specifications. Rate to include all power & control cables and other accssories as per the specification | | | | |
| | ● Supply & delivery of PVC pipes and fittings, including followings and all other accessories to complete installation | | 01 | | |
| | ● Brass Gate valve | | | | |
| | ● Brass non return valve | | | | |
| | ● Pressure gauge | | | | |
| | ● Stainless steel cable | | | | |
| | ● Well cover & clamp | | | | |
| | ● All other pipe and fitting | | | | |
| | Installation of pumps and the equipment & accessories | | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024-06-03ஆம் திகதியிலிருந்து 2024-06-17ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 1,209.50 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை ரொக்கப் பணமாக கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கூறப்பட்ட பெறுமதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2024-06-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4 849825, 011-4 849845**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் - களுத்துறை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் வகைப்படுத்தலின் கீழ் வெவ்வேறாக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| விலைமனு குறிப்பிலக்கம் | விலைக்கோரலின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத விலைக் கோரல் கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| BME/MEQ/PSDG/DIATHERMY/2024 | Diathermy Machine | 01 | 1,500.00 | 30,000.00 |
| | | | | |
| BME/MEQ/PSSP/INQUBATOR/2024 | Transport Incubator | 01 | 2,500.00 | 70,000.00 |
| BME/MEQ/PSSP/INQUBATOR/2024 | Infant Incubator | 01 | | |
| BME/MEQ/PSDG/DEN AUTTOCLAVE/2024 | Mini Autoclave | 05 | 1,500.00 | 30,000.00 |
| | Dental double side probe | 750 | | |
| | Dental Mirror Top | 1250 | | |
| | Dental Mirror handle | 500 | | |
| | Kidney Tray 8” | 300 | | |

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் இடம்பெறும்.
2. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   i. மேற்குறிப்பிடப்பட்ட உபகரணங்களை விற்பனை செய்வதற்காக செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   ii. உற்பத்தியாளர் அல்லாவிடில் விலைமனுதாரருக்கு இந்த உருப்படிகளை விற்பனை செய்வதற்காக உற்பத்தியாளர்களினால் எழுத்து மூல அனுமதி இருத்தல் வேண்டும்.
   iii. குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் இயைபான வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனுபவம்
   iv. உபகரணங்களை விற்பனை செய்வற்காக NMRA சான்றிதழ்
3. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை த.பெ. 29, கச்சேரி கட்டிடத் தொகுதி, 04வது மாடியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-24ஆம் திகதி வரையான பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம்.
4. களுத்துறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றில் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியை பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

   இரு பிரதிகளில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் தனியொரு உறையிலிட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் Diathermy Machine என்பதற்கு BME/MEQ/PSDG/DIATHERMY/2024, Transport Incubator மற்றும் Infant Incubator என்பதற்கு BME/MEQ/PSSP/INQUBATOR/2024, Mini Autoclave, Dental double side probe, Dental Mirror Top, Dental Mirror handle, Kidney Tray என்பவற்றிற்கு BME/MEQ/PSDG/DEN - AUTTOCLAVE/2024 எனக் குறிப்பிட்டு 2024-06-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம்.
5. தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-06-13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
7. மேலதிக விபரங்களுக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 034-2222610, 034-2222367, 038-2294700 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**களுத்துறை.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

## Girders வழங்குதல்

**விலைமனு இல. PRDA/WP/PRO/2024/31**

இந்த அதிகார சபைக்கு பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | அளவு | கேள்விப் பிணை முறி ரொக்கப் பணம் (ரூபா) | கேள்விப் பிணை முறி (வங்கி/ காப்புறுதி) (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | 300 x 200 x 12mm (56.80 Kg/m) 1 Girders (7.43 Long) - ஹொரண நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் ஹொரடியல் முகலான வீதியிலுள்ள பாலத்திற்கு | 08 | 13,500.00 | 27,000.00 |
| 02 | 400 x 200 x 12mm - 6m Long 1 Girders (66Kg/Lm) - அகலவத்தை நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் சேனாதொலயில் இருந்து அடஹவுல் ஹேன கிராமம் வரை நிர்மாணிக்கப்படும் பாலத்திற்கு | 05 | | |

**மொரகஹஹேன இயந்திரப் பொறியிலாளர் முற்றவெளிக்கு இடிதாங்கி முறைமையொன்றை நிறுவுதல்**

**விலைமனு இல. PRDA/WP/PRO/2024/34**

| தொ. இல. | விபரங்கள் | அளவு | கேள்விப் பிணை முறி ரொக்கப் பணம் (ரூபா) | கேள்விப் பிணை முறி (வங்கி/ காப்புறுதி) (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | Supply Installation of Lighting Protection System (LPS) with ESE type Lighting Arrester which covers 79M Radius (Level 01) including all Necessary Acc. To Computer | 01 | 7,000.00 | 14,000.00 |

| தொ. இல. | கேள்வி இலக்கம் | கேள்விப் படிவம் வழங்குதல் | கேள்விகள் திறக்கப்படுதல் |
|---|---|---|---|
| 01 | PRDA/WP/PRO/2024/31 | 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-17ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை | 2024-06-18ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |
| 02 | PRDA/WP/PRO/2024/34 | 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-18ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை | 2024-06-19ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு |

03. கேள்விப் படிவக் கட்டணமான 1,209.50 ரூபாவைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவுசெய்துள்ளவர்கள் தவிர்ந்த) கேள்வி ஆவணத் தொகுதியை பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4 849825, 011-4 849845**


Looking for Your Life Partner..,
Gather with,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON
Acc. No. 000000377
Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை - ராஜகிரிய

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான நுகேகொட மக்கள் சந்தை மற்றும் நுகேகொட பஸ் நிலைய வர்த்தக கட்டிடத் தொகுதியின் பொது மலசல கூட அமைப்பின் சேவை வழங்கல் சார்பாக விலைமனுக் கோரலுக்காக மேற்கொள்ளப்படும் பகிரங்க அறிவித்தல்

அதன் பிரகாரம் கீழ்க்காணும் குறைந்தபட்ச மாதாந்த கட்டணத்தின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுவதுடன் இதனோடு சம்பந்தப்பட்ட பெறுகைப் பத்திரங்கள் 2024.06.03 முதல் 2024.06.24 பி.ப. 3.00 வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொடர் இல. | வர்த்தக கட்டிடத் தொகுதி | குறைச்தபட்ச கேள்வித் தொகை (ரூ.) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 01 | நுகேகொட மக்கள் சந்தை மலசல கூட அமைப்பு | 18,700.00 + VAT 18% | ரூ. 10,000.00 |
| 02 | நுகேகொட பஸ் நிலைய வர்த்தக கட்டிடத் தொகுதி மலசல கூட அமைப்பு | 26,950.00 + VAT 18% | ரூ. 10,000.00 |

**மாநகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.**

2024 மே 29ம் திகதி

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை - ராஜகிரிய

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் வாகன நிறுத்தும் இடங்களை குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள் கோருவதற்கான பகிரங்க அறிவித்தல்

அதன் பிரகாரம் கீழ்க்காணும் குறைந்தபட்ச மாதாந்த கட்டணத்தின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுவதுடன் அதனோடு சம்பந்தப்பட்ட பெறுகைப் பத்திரங்களை 2024.06.03 முதல் 2024.06.24 பி.ப. 3.00 வரை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொடர் இல. | வாகன நிறுத்தும் இடம் | காலம் | குறைந்தபட்ச மாதாந்த கட்டணம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | நுகேகொட சுப்பர் மார்கெட் வளாகத்தில் உள்ள வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 450,000.00 + VAT | ரூ. 25,000.00 |
| 02 | ஜனஜய சிட்டி வர்த்தக கட்டிடத் தொகுதியின் முன் வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 50,000.00 + VAT | ரூ. 10,000.00 |
| 03 | நகர சபை முன்னால் வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 50,000.00 + VAT | ரூ. 10,000.00 |
| 04 | நுகேகொட மக்கள் சந்தை அருகில் வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 60,000.00 + VAT | ரூ. 15,000.00 |
| 05 | நுகேகொட ரெயில்வே அவெனியூ வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 25,000.00 + VAT | ரூ. 5,000.00 |
| 06 | தெல்கந்த பொது வர்த்தக கட்டிடத் தொகுதி வளாகத்தில் வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 25,000.00 + VAT | ரூ. 5,000.00 |
| 07 | புத்கமுவ குறுக்கு வீதி இரு புறம் வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 25,000.00 + VAT | ரூ. 5,000.00 |
| 08 | செப்பல் வீதி ரோயல் இன்ஸ்டிடியூட் கல்வி நிலைய முன்னால் வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 20,000.00 + VAT | ரூ. 5,000.00 |
| 09 | ராஜகிரிய கார்டன்ஸ் பிரவேச வழி இருபக்கம் வாகன நிறுத்துமிடம் | 02 வருடங்கள் | ரூ. 25,000.00 + VAT | ரூ. 5,000.00 |

**மாநகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.**

2024 மே 29ம் திகதி

## பெயர் மாற்றம் தொடர்பானது

சிங்காரம் மாணிக்கம் ஆகிய நான் எனது பெயரை சிங்காரம் லைலா என மாற்றி உள்ளதனை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் மக்களுக்கு அறியத்தருகின்றேன்

**சி.லைலா**

### பகிரங்க அறிவித்தல்

**நீதிமன்ற கட்டளை மற்றும் கலைப்பாளரின் நியமனம்**

**கம்பனியின் பெயர்:** டைல்ஸோன் (பிரைவட்) லிமிட்டட்
**பதிவு இலக்கம்**: PV101252
**பதிவு அலுகலக முகவரி:** 269, நாவல வீதி, ராஜகிரிய
**வழக்கு இலக்கம்:** CHC 66/2022 CO
**கலைப்பாளரின் கட்டளை திகதி**: 24 நவம்பர் 2023
நீதிமன்றம்
வர்த்தக உயர் நீதிமன்றம் கொழும்பு
**கலைப்பாளரின் நியமனத் திகதி:** 16 மே 2024
**கலைப்பாளருக்கான அறிவித்தல் திகதி:** 17 மே 2024
**கலைப்பாளரின் பெயர்:** கெடாவ கந்தகே சுகத் குமார்
**கலைப்பாளரின் முகவரி:** இல. 46, லும்பினி மாவத்த, தளுகம களனி
**கலைப்பாளரின் அலுவலக முகவரி:** 3ம் மாடி, யதாமா கட்டிடம், இல. 142, காலி வீதி, கொழும்பு -03

### பகிரங்க அறிவித்தல்

**நீதிமன்ற கட்டளை மற்றும் கலைப்பாளரின் நியமனம்**

**கம்பனியின் பெயர்:** மொடர்ன் டைல் பெக்டரி (பிரைவட்) லிமிட்டட்
**பதிவு இலக்கம்**: PV70326
**பதிவு அலுகலக முகவரி:** 261A, நாவல வீதி, ராஜகிரிய
**வழக்கு இலக்கம்:** CHC 65/2022 CO
**கலைப்பாளரின் கட்டளை திகதி**: 27 நவம்பர் 2023
நீதிமன்றம்
வர்த்தக உயர் நீதிமன்றம் கொழும்பு
**கலைப்பாளரின் நியமனத் திகதி:** 14 மே 2024
**கலைப்பாளருக்கான அறிவித்தல் திகதி:** 16 மே 2024
**கலைப்பாளரின் பெயர்:** கெடாவ கந்தகே சுகத் குமார்
**கலைப்பாளரின் முகவரி:** இல. 46, லும்பினி மாவத்த, தளுகம களனி
**கலைப்பாளரின் அலுவலக முகவரி:** 3ம் மாடி, யதாமா கட்டிடம், இல. 142, காலி வீதி, கொழும்பு -03

**Repeat Your ad For Better Offers**

## 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல. 311B, ஹீனட்டிகல, தல்பே எனும் முகவரியில் வசிக்கும் 200415302322 எனும் இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளரான தருஷ சஞ்ஜன விதானபதிரன என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீடு சகிதமான காணி மற்றும் இல. 52/9, ஹீன்பந்தல, கோவிலவத்த, காலி எனும் முகவரியில் வசிக்கும் 991610740வீ எனும் இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளரான ராஜமந்திரிகே கவிந்து மதுரங்க என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனத்தை அப்புறப்படுத்துதல் அல்லது கைமாற்றுவதை தடுக்கும் பொருட்டு 2024-05-14ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஏ.சீ. ருவன்காந்த அவர்களினால் 2011ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கம் எனும் நிதி மோசடியைத் தடுக்கும் சட்டத்தின் 7(1) அத்தியாயத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளை காலி மேல் நீதிமன்றத்தில் SPL 08/2024 இலக்க வழக்கின் கீழ் 2024-05-20ஆம் திகதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளையின் மேற்கூறிய சட்டத்தின் 8(2) அத்தியாயத்தின் பிரகாரம் 2024-08-19ஆம் திகதி வரையான மூன்று மாத காலத்திற்கு அமுலாகும் வகையில் மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்டுள்ள அந்த வலுவிழக்கச் செய்யும் கட்டளையானது 2024-08-19ஆம் திகதி முதல் மேற்கொண்டும் நீடிக்க முடியும் என்பதுடன், யாராவது தீவிர குற்றப் பத்திரிகையை மேல் நீதிமன்றத்தில் கோப்பிடும் வேளையில், அந்த வலுவிழக்கச் செய்யும் கட்டளையானது வழக்கு முடியும் வரையில் அமுலில் இருக்கும்.

அதன் பிரகாரம், பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களின் தமது உரிமத்துவத்தை உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும்பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

**1. காணி**

- காலி பிரசித்த நொத்தாரிசு S.K. எதிரிசிங்க அவர்களினால் 2016ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 02ஆம் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 22ஆம் இலக்க கொடை உறுத்துறுதியின் பிரகாரம் உரிமையாகக் கொண்ட அனுபவித்து வரும் தென் மாகாணம், காலி மாவட்டத்தில் தல்பே பற்றுவில் ஹபராதுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள், ஹபராதுவ பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தினுள் தொடம்பே கிராம சேவையாளர் பிரிவினுள் ஹீனட்டிகலயில் அமைந்துள்ள ஆச்சாரிகேவத்த பங்கு துண்டென அறியப்படும்,

  வடக்கில் - பத்ஹத்பொக்கே வயல் மற்றும் தோட்டமும், கிழக்கில் - அதிரியன்வத்தயின் துண்டும், தெற்கில் - பதிரனகே தோட்டமும், மேற்கில் - ஆச்சாரிகே அமு மயானம் எனும் எல்லையினுள் அமைந்துள்ள அரை ஏக்கர் பரப்பளவு விஸ்தீரணத்தைக் கொண்ட காணி, மரம் மட்டைகள், பழப் பயிர்ச்செய்கை சகிதம் நிலத்தில் பிரிக்கப்படாத நான்கில் மூன்று பிரிக்கப்படாத ஏழு பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்டதும் மற்றும் அதில் அமைந்துள்ள புதிய வீடு உட்பட அந்த நிலத்திற்குச் சொந்தமான சகலதுமாகும்.

**2. வாகனம்**

- டொயோட்டா வகையான 772707 எனும் என்ஜின் இலக்கம் மற்றும் CJ 500 D-7072707 எனும் செஸி இலக்கத்தைக் கொண்ட CAK 6865 எனும் ஜீப் வண்டி
- மஹேந்திரா வகையான 2 TR-1608368 எனும் என்ஜின் இலக்கம் மற்றும் CJ 500 D-7072707 எனும் செஸி இலக்கத்தைக் கொண்ட 31-1447 எனும் மோட்டார் கார்.

**பணிப்பாளர்,**
**சட்ட விரோத சொத்து விசாரணைப் பிரிவு.**

## 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல. 39/02, அஸ்வயாபெந்திவெவ, கலென்பிந்துனுவெவ எனும் முகவரியில் வசிக்கும் 852893184 எனும் இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளரான வீரசேகர முதியன்சேலாகே தரிந்து இரோஷன் வீரசேகர என்பவரால் சட்டவிரோத செயற்பாடுகளினால் பெற்றுக்கொண்ட பணத்தினால் வேறு நபரின் பெயரில் கொள்வனவு செய்துள்ள இல. 01 முதல் 06 வரை உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சகல ஆதனங்களையும் அப்புறப்படுத்துதல் அல்லது கைமாற்றுவதை தடுக்கும் பொருட்டு 2024-05-02ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரினால் 2011ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கம் எனும் நிதி மோசடியைத் தடுக்கும சட்டத்தின் 7(1) அத்தியாயத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளை அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் HC/SPL/01/2024 இலக்க வழக்கின் கீழ் 2024-05-09ஆம் திகதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளையின் மேற்கூறிய சட்டத்தின் 8(2) அத்தியாயத்தின் பிரகாரம் 2024-06-11ஆம் திகதி வரையான ஒரு மாத காலத்திற்கு அமுலாகும் வகையில் மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்டுள்ள அந்த வலுவிழக்கச் செய்யும் கட்டளையானது 2024-06-11ஆம் திகதி முதல் மேற்கொண்டும் நீடிக்க முடியும் என்பதுடன், யாராவது தீவிர குற்றப் பத்திரிகையை மேல் நீதிமன்றத்தில் கோப்பிடும் வேளையில், அந்த வலுவிழக்கச் செய்யும் கட்டளையானது வழக்கு முடியும் வரையில் அமுலில் இருக்கும்.

அதன் பிரகாரம், பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களின் தமது உரிமத்துவத்தை உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும்பொருட்டு அறிந்துகொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

### அட்டவணை

**1. ஆதனம் மற்றும் வீடு**

- வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில், கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் இல. 257-3 கட்டம் III பிரிவு கிராம சேவையாளர் பிரிவில் யசசிரிபுர எனும் கிராமத்தில் 274எனும் இலக்க இடத்தில் அமைந்துள்ள வடக்கில் - இல. 33 மற்றும் 63 எனும் காணித்துண்டுகள், கிழக்கில் - இல.63 மற்றும் பாதை, தெற்கில் பாதை மற்றும் 65ஆம் இலக்கத் துண்டு, மேற்கில் - 65 மற்றும் 33ஆம் இலக்க துண்டுகள் எனும் எல்லையினுள் அமைந்துள்ள துண்டு இல. 64 எனக் காட்டப்படும் பத்து தசம் இரண்டு பேர்ச் (பேர்ச் 10.2) விஸ்தீரணமான காணித்துண்டு மற்றும் அதனுள் அமைந்துள்ள வீடு உட்பட சகலவற்றுடன்,
- மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தின் தெற்குப் பிரிவில் கம்பஹசிய பற்றுவில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தளை சபை அதிகாரப் பிரதேசத்தில் மடவல உல்பத கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள கெக்கிரிகொடயாய, பாலுவத்தே ஹேன பெல்லன்கொல்லேயாய எனப்படும் வெலன்கொல்லே யாய எனும் தற்போது ஒரு காணியாக இருக்கும் ஒன்றிணைக்கப்பட்ட காணி 2021ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி W.M.P.G குணதிலக்க உத்தரவுபெற்ற நில அளவையாளர் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட 6000ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 01ஆம் இலக்கத் துண்டு பரப்பளவில் நான்கு ஏக்கர் மூன்று றூட் பதினேழு தசம் ஏழு பூச்சியம் (ஏக்: 07 றூட் 03 பேர்ச் 17.70) கொண்ட அல்லது 3.1811 ஹெக்டயார் விஸ்தீரணத்தில் அதனுள் அமைந்துள்ள வீடு உட்பட சகலவற்றுடனுமாகும்.

**2. வாகனம்**

- செஸி இலக்கம் 6VNC801 மற்றும் என்ஜின் இலக்கம் ENSX175 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள NC RA-4652 இலக்க டிராக்டர்.
- செஸி இலக்கம் ZFCHG00482 மற்றும் என்ஜின் இலக்கம் ZLGN00474 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள NC RG-4961 இலக்க டிராக்டர்.
- செஸி இலக்கம் 3CX4404326 மற்றும் என்ஜின் இலக்கம் AA50386U591357W எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 270-2156 இலக்க JCB செஸி
- இலக்கம் 0490861 சகிதம் ZB 2425 இலக்க JCB

**பணிப்பாளர்**
**சட்டவிரோத சொத்து விசாரணைப் பிரிவு.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விவசாய திணைக்களம்

விவசாய திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலகுகள் சார்ந்த கொள்வனவுகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு உள்நாட்டு விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E | F |
|---|---|---|---|---|---|---|---|
| வரிசை இலக்கம் | பணி விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய விலைமனு பிணை மற்றும் விலைமனு செல்லுபடிக் காலம் | | | விலைமனு ஆவணக் கட்டணம் | ICTAD தரம் |
| | | | பணமாகவெனில் | வங்கி பிணை மூலமாயின் | பிணை செல்லுபடிக் காலம் | | |
| 01 | கரன்தன் அரசின் விதை உற்பத்தி பயிர்நிலத்தில் களஞ்சியம் ஒன்றை நிர்மாணித்தல் (கட்டம் 1) | SPD/2/5/4/17 (2024) | 200,000/- | 400,000/- | 2024.10.09 | ரூபா 6000.00 | C5 & C6 |
| 02 | அம்பேபுஸ்ஸ விதை உற்பத்தி பயிர்நிலத்தில் சூட்டுமேடையை புனரமைத்தல் | SPD/2/5/4/12 (2024) | 61,000/- | 122,800/- | 2024.10.09 | ரூபா 3000.00 | C6 & C7 |
| 03 | கன்னோருவ மரக்கரி விதை நிலையத்திற்காக மூன்று தகட்டடுக்கு அலுமினியம் பொயில் கொள்வனவு | SPD/2/5/4/18 (2024) | 100,000/- | 200,000/- | 2024.10.09 | ரூபா 3500.00 | - |
| | பெல்வெஹர விதை உற்பத்தி பயிர் நிலத்திற்காக 3600 லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர் தொட்டி கொள்வனவு | SPD/2/5/4/15 (2024) | 14,700/- | 29,400/- | 2024.09.12 | ரூபா 1000.00 | - |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மேலுள்ள விபரத்திற்கு அமைய பெற்றுக்கொண்ட விலைமனு படிவத்தை பயன்படுத்தி விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விவசாய திணைக்களத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத மேலுள்ள E பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக அதிகாரிக்கு சமர்ப்பித்து 2024.06.04 ஆம் திகதி தொடக்கம் 2024.06.24 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
வரிசை இலக்கம் 01, 02 மற்றும் 03 இன் கீழ் விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற விலைமனுதாரர்கள் 1987 இன் 03 ஆம் இலக்கம் கொண்ட பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதோடு, அதன் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனு ஆலோசனைக்கு அமைய தயாரிக்கப்பட்ட முத்திரை பொறிக்கப்பட்ட அனைத்து விலைமனுக்களும் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாய திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் மேலுள்ள முகவரியில் அமைந்துள்ள விலைக்கேட்பு பெட்டிக்கு இட வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேலுள்ள அட்டவணையின் D இன் கீழ் குறிப்பிட்டவாறு பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதோடு, வங்கி பிணை ஒன்றின் மூலம் பிணை வைப்புச் செய்வதாக இருந்தால், அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது 2024.06.25 ஆம் திகதி பிற்பகல் 2.00 க்கு நிறைவு செய்யப்படுவதோடு, உடன் விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுக்களை சமர்ப்பித்தவர்களுக்கு அல்லது அவர்தம் எழுத்துமூல அதிகாரத்தை பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாய திணைக்களம், பேராதனை.**

2024.06.03
**081-2388106/122**

Daily News Classifieds, the Housewives' companion

## 2011ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டு 5ஆம் இலக்கம் எனும், நிதி மோசடியை தடுக்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல. 275, ஒட்டிகொட, பூகொட எனும் முகவரியில் வசிக்கும் 199080504555 எனும் இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளரான ராஜபக்ஷ தேவயலாகே சத்துரி பிரதீபிகா குணதாச எனும் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சகல ஆதனங்களையும் அப்புறப்படுத்துதல் அல்லது கைமாற்றுவதை தடுக்கும் பொருட்டு 2024-04-30ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரினால் 2011ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கம் எனும் நிதி மோசடியைத் தடுக்கும் சட்டத்தின் 7(1) அத்தியாயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளை கம்பஹா மேல் நீதிமன்றத்தில் SPL 04/2014 இலக்க வழக்கின் கீழ் 2024-05-07ஆம் திகதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு உறுதி செய்யப்பட்ட வலுவிழக்கச் செய்யும் கட்டளையின் மேற்கூறிய சட்டத்தின் 8(2) அத்தியாயத்தின் பிரகாரம் 2024-08-07ஆம் திகதி வரையான 03 மாத காலத்திற்கு அமுலாகும் வகையில் மேலும் நீடிக்கப்பட்டு கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்டுள்ள அந்த வலுவிழக்கச் செய்யும் கட்டளையானது 2024-08-07ஆம் திகதி முதல் மேற்கொண்டும் நீடிக்க முடியும் என்பதுடன், யாராவது தீவிர குற்றப் பத்திரிகையை மேல் நீதிமன்றத்தில் கோப்பிடும் வேளையில், அந்த வலுவிழக்கச் செய்யும் கட்டளையானது வழக்கு முடியும் வரையில் அமுலில் இருக்கும்.

அதன் பிரகாரம், பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களின் தமது உரிமத்துவத்தை உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் பொருட்டு அறிந்து கொள்வதற்காக பிரசுரிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

சட்டத்தரணி மற்றும் பிரசித்தி நொத்தாரிசு திருமதி கே.பீ. தீபிகா கயாங்கனி அவர்களினால் 2021-07-25ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்டு G579/66 இலக்கத்தின் கீழ் 2021-07-25ஆம் திகதி கம்பஹா காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 1123ஆம் இலக்க இலவச உரித்துறுதி.

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளை, தொம்பே பிரதேச சபையினுள் கிரிதர கிராம சேவையாளர் பிரிவில் கஹட்டகஹவத்த காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே.பீ.என். ஜயசுந்தர அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 10784A எனும் இலக்க 2015-04-01ஆம் திகதிய வரைபடத்தில் பிரிக்கப்பட்ட 02ஆம் இலக்க காணித் துண்டின் எல்லைகளாக வடக்கில் - பிரதேச சபை பாதையும், கிழக்கில் - 2051ஆம் இலக்க வரைபடத்தின் A, B, C, D மற்றும் E, தெற்கில் - லொட் 03, மேற்கில் - லொட் 1 எனும் இந்த எல்லையினுள் அமைந்துள்ள பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச் விஸ்தீரணமான காணி மற்றும் அதனுள் உள்ள மரஞ்செடிகள் பழ வகைகள் போன்ற சகலவையும்.

**பணிப்பாளர்,**
**சட்டவிரோத சொத்து விசாரணைப் பிரிவு.**

---

# பெறுகை அறிவித்தல்
## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை - ராஜகிரிய

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் தற்போது விளம்பரப் பலகை பொருத்தப்பட்டுள்ள மற்றும் விளம்பரப் பலகை பொருத்துவதற்கு இடவசதியுள்ள சபைக்குச் சொந்தமான பொது வளாகங்களை கேள்வி கோருவதற்கான மேற்கொள்ளப்படும் பெறுகை அறிவித்தல்

அதன் பிரகாரம் கீழ்க்காணும் இடங்களுக்கு பெறுகை ஆவணங்கள் கோரப்படுகின்றன.

1. நுகேகொட சுப்பர் மார்கெட் வளாகத்தில் காணப்படும் ஆனந்த சமரக்கோன் அரங்கின் மேடையின் கூரைமேல் நிரந்தர விளம்பரப் பலகைகள் 02 (30x20)
2. நுகேகொட ஆனந்த சமரக்கோன் அரங்கு அருகில் வலது பக்கம் (20x10)
3. ஹைலெவல் பிளாஸா கட்டிடத் தொகுதியின் வலப்பக்க பிரவேச வழி அருகில் காணப்படும் வெற்று வளாக பகுதி (25x10)
4. ஒபேசேக்கரபுர ஸ்பொட் சிட்டி வளாகம்
5. ஒபேசேக்கரபுர வர்த்தக கட்டிடத் தொகுதியின் பிரவேச வழி
6. நவ கொலன்னாவ சிறுவர் பூங்கா வளாகம்
7. பெத்தகான நூலக வளாகம்
8. இந்நகர சபைக்குச் சொந்தமான சகல வர்த்தக நிலைய வளாகங்களில் (தெல்கந்த, ஹைலெவல் பிளாஸா, பிட்டகோட்டே வர்த்தகக் கட்டிடத் தொகுதி)
9. மேற்படி இல. 11 இற்கு மேலதிகமாக கோட்டே மாநகர சபை அருகில் அதிகாரப் பிரதேசத்தில் உங்களுக்கு விளம்பரப் பலகை பொருத்துவதற்கு பொருத்தமானது என உத்தேசிக்கும் இடங்கள்
(இதற்காக குறைந்தபட்ச கேள்வித் தொகையை உங்களுக்கு தீர்மானிக்கலாம்)

மேற்படி இல. 01 முதல் இல. 09 வரை சகல இடங்களிலும் விளம்பரப் பலகைகளை பொருத்துவதற்காக குறைந்தபட்ச கேள்வித் தொகையாக ரூ. 750,000.00 + (அரச வரித்தொகை) ஆகும்.

**பெறுகை நிபந்தனைகள்**

1. சகல பெறுகை விண்ணப்பங்களும் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென கடித உறைகளில் குறிப்பிட்டு இருப்பதுடன் கடித உறையின் இடது மூலையில் 'விளம்பர பலகைகள் பொருத்தும் இடங்களுக்கான கேள்வி' என குறிப்பிடுதல் வேண்டும்.
2. மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வேறுவேறாக உறைகளில் இட்டு ஒரு கடிதமாக 'மாநகர ஆணையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை, ராஜகிரிய' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும்.
3. ரூ. 2000.00 தொகையைச் செலுத்தி பெறுகை ஆவணங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் கலப்பு வருமானப் பிரிவில் 2024.06.03 முதல் 2024.06.24 பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.06.24 பி.ப. 3.00 வரை இடம்பெறுவதுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மாநகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை,**
**ராஜகிரிய.**

---

# பெறுகை அறிவித்தல்
## ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2024

ஊவா மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 2024ஆம் வருடத்திற்குத் தேவையான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வகை | மீளளிக்கப் படும் விலைக் கோரல் வைப்பு (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் வைப்பு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | புடைவைக் கைத்தொழில் இயந்திரோபகரணங்கள் | 10,000.00 | 500.00 |
| 02 | தச்சு இயந்திரோபகரணங்கள் | 10,000.00 | 500.00 |
| 03 | இலகு கைத்தொழில் இயந்திரோபகரணங்கள் | 10,000.00 | 500.00 |
| 04 | அரியப்பட்ட மரங்கள் (தேக்கு) | 20,000.00 | 2,000.00 |

02. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான மாதிரிப் படிவங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள கட்டணங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்களை வழங்குதல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் என்பன பின்வரும் திகதி மற்றும் நேரங்களில் இடம்பெறும்.

விலைமனுக்கள் வழங்குதல் - 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-20ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தில்

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் - 2024-06-24ஆம் திகதி பி.ப. 2.00 வரை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2024-06-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

04. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது 055-2222607 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

2024-06-03ஆம் திகதி
**ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**

**மாகாண கைத்தொழில் பணிப்பாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்.**

---

**எனது இலக்கம் : RUWA/LAN/ACQTN/A2/246**
**பிரதேச செயலகம்,**
**ருவன்வல்லை.**
**2023.12.29**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசுக்கு சுவீகரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களிற்காக தயவு செய்து 2019 ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதிய 2137 / 64 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரத்தில் (111) ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

1. பிரதேச செயலகப் பிரிவு : ருவன்வல்லை
2. அமைவிடம் : 104 மொராவத்த
3. காணியின் பெயர் : ருவன்வல்லை தோட்டம் 89 ஆம் பிரிவு
4. முழுக் காணியின் அளவு : 0.895 ஹெக்டயார்

**ஆ.வ.ப. கே :- 3583**
**காணித் துண்டுகள் இலக்கம் :- 01 - 94**

**எம்.டி.எஸ்.என்.ஹெட்டிகே**
**பிரதேச செயலாளர்**
**ருவன்வல்லை**

---

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்பு பணிமனை**
**REFRACTORY WORK, PAINTING & MECHANICAL REPAIRS OF 03 F1 FURNACE FOR MAJOR SHUTDOWN 2024 (TENDER No.: PL/MSD/22/2024)**

இலங்கை சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு பணிமனையில் Refractory work, painting & mechanical repairs of 03 F1 Furnace during major shutdown 2024 இற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவானது (கீழ் மட்டம்) புகழ்வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றது.

விலைமனுக் கோரல் ஆவணங்களை கையேற்கும் வேளையில் பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விவைப்பாக 12,500 ரூபாவை சுத்திகரிப்பு நிதி திணைக்களத்தில் செலுத்துதல் வேண்டும். இந்த பற்றுச்சீட்டின் பிரதியானது அமதிப்பீட்டில் பரிசீலனை செய்வதற்காக முன்வைப்புடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், விலைமனுதாரர் மேலேயுள்ள விலைமனுக் கோரல் ஆவணங்களை www. ceypetco.gov.lk.website என்ற இணையத்தினூடாகவும் பரீட்சிக்கலாம்.

அனைத்து விலைமனுதாரர்களும் அல்லது அவர்களின் முறையாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் களனி, சப்புகஸ்கந்த, இபெகூ சுத்திகரிப்பு பணிமனையின் பயிற்சி நிலையத்தின் விரிவுரை மண்டபத்தில் 2024 ஜூன் 14ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ள ''விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் மற்றும் தளவிஜயத்தில்'' சமுகமளித்தல் வேண்டும்.

விலைமனுக் கோரல் ஆவணங்களை வழங்கும் இறுதித்திகதி மற்றும் நேரமானது 2024 ஜூன் 14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியாகுமென்பதுடன் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் திகதி மற்றும் நேரம் மற்றும் கேள்வி ஆவணங்களை திறத்தல் ஆகியன 2024 ஜூன் 24 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியாகும்.

விலைமனுக் கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியனவற்றை இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, திட்டமிடல் திணைக்கள பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்கள் சுத்திகரிப்பு பிரதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
தொலைபேசி: 0117732963/2401359/0765448572
தொலைநகல்: 011 2401359/2400436

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சப்புகஸ்கந்த, இலங்கை.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2024/05/31 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/06/19 மற்றும் 2024/06/20 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

Repeat Your ad For Better Offers

---

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**
**போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## கேள்விக்கான அழைப்பு (IFB)

| உருப்படி இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | தெற்கு அதிவேக வீதியின் வெலிபென்ன முதல் குருந்துகஹஹெதெக்ம வரையான பகுதியின் பராமரிப்பு விடயங்களுக்கான தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் RDA/EOM&M/MNT/SE/2024/21 |

மேற்படி செயற்றிட்டத்திற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 ஜூன் 03 முதல் 2024 ஜூன் 25 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளமான www.rda.gov.lk இற்கு பிரவேசிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

தலைவர்,
அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்.

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| திருகோணமலை-புல்மோட்டை வீதியில் buildup drain இன் நிர்மாண மேம்படுத்தல் (0+900-1+000) RHS |
| திருகோணமலை-புல்மோட்டை வீதியில் buildup drain இன் நிர்மாண மேம்படுத்தல் (4+100-4+300) LHS |
| திருகோணமலை-புல்மோட்டை வீதியில் buildup drain இன் நிர்மாண மேம்படுத்தல் (4+400-4+500) RHS |
| திருகோணமலை-புல்மோட்டை வீதியில் buildup drain இன் நிர்மாண மேம்படுத்தல் (54+000-55+000) km (RHS) |
| அம்பேபுஸ்ஸ குருநாகல் திருகோணமலை வீதியில் கட்டமைக்கும் வடிகால் (196+790-196.900) km (RHS) |
| **திருகோணமலையில் Casting Cover Slab இன் நிருமாணம்** |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.06.03 ஆம் திகதியிலிருந்து 2024.06.14 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**திருகோணமலை.**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக தளபாடங்கள் வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கம்பஹா நிர்வாகப் பொறியியலாளர் அலுவலகத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   **RDA/GAM/EE/TEN/2024/23** - Retro Reflective Self - Righting Flexible Bollards வழங்கல்

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**கொள்முதல் குழு, நிர்வாக பொறியியலாளர் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா**
**தொலைபேசி : 033-2225033**

SELACINE

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக சேவை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா மாவட்ட கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிர்வாக பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள்

   **I. RDA/GAM/CE/TEN/2024/26** - நிட்டம்புவ வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.

   **II. RDA/GAM/CE/TEN/2024/27** - பூகொட வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.

   **III. RDA/GAM/CE/TEN/2024/28** - மீரிகம வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

Daily News Classifieds, the Housewives' companion